மர்மநாவல் 1

# ஒரு மின்னல்... தென்றல்...

- இந்திரா சௌந்தர்ராஜன்

## 1

"இந்த பூமியில் எவ்வளவோ ரகசியங்கள் உள்ளன. மனிதருக்கு மனிதர் மனதுக்குள் பூட்டி வைத்திருப்பவை சாதாரண மனித ரகசியங்கள். அவைகள் சம்மந்தப்பட்டவர் களுக்கு மட்டும் பெரிதாக இருக்கலாம். அடுத்து வருபவை புதையல் ரகசியங்கள்! இந்த புதையல் ரகசியம் என்பது ஒரு ஊருக்குள் பெரிதாக இருக்கலாம். ஆனால் உலகமே வியக்கும் ரகசியங்கள் என்றால் அது எங்கே தோண்டினால் பொன் கிடைக்கும் எங்கே தோண்டினால் கனிமங்கள் கிடைக்கும் போன்றவை தான். இது கூட ஒரு நாள் தீர்ந்து போய் அந்த ரகசியங்களுக்கும் இடமில்லாது போய் விடும்.

காலகாலத்துக்கும் ஒரு ரகசியம் என்பது ரகசியமாகவே இருக்க முடியும் என்றால் அது இந்த ரகசியங்கள் தான். இந்த சித்த ரகசியங் களை ஒருவரால் புரிந்து கொண்டும் அறிந்து கொள்ளவும் முடியுமாயின் அவரே இந்த உலகின் வெல்ல முடியாத மனிதராவார்...

சித்த ரகசியங்கள் இந்த உலகத்துக்கே பொதுவானவை... மிகமிக அரிதானவையும் கூட...

கடற்கரையோரத்தில் வெகு அழகாக இருந்தது அந்த பங்களா! இந்தியாவின் நம்பர் ஒன் ஆர்கிடெக்ட்டான பாக்யநாத்தின் வடிவமைப்பு... அவருக்கான கன்சல்டிங் ஃபீஸ் மட்டுமே இருபத்தைந்து லட்சம்!

பங்களா ஒரு பத்து பதினைந்து கோடிகளை விழுங்கியிருந்தது!

தொழிலதிபர் ராமரத்தினத்துக்கு பத்து பதினைந்து கோடியெல்லாம் ஒரு பொருட்டே இல்லாத தொகை... வளைகுடா நாடுகளில் பல பெட்ரோல் கிணறுகளில் முதலீடு செய்திருப்பவர் அவர். அந்த கிணறுகளில் ஒரு கிணறு மட்டுமே தினம் பதினாறு கோடியை அவரது ஸ்விங் வங்கிக் கணக்கில் போட்டபடி உள்ளது.

அதுபோக உலகம் முழுக்க எல்லா நாடுகளிலும் எதாவது ஒரு தொழில். அந்த நாட்டு ஜனாதிபதி, பிரதமர்களோடு அன்றாடம் காபி சாப்பிடும் அளவுக்கு ஒரு ஸ்னேகம்!

இந்த ராமரத்தினத்தின் தொடக்கம் ஒன்றும் அத்தனை பிரமாதமானதல்ல...!

நெல்லை மாவட்டத்தில் பொதிகை மலை சாரலில் தாமிரபரணி ஆற்றோரமாக உள்ள சித்தன் குறிச்சி தான் அவர் பிறந்து வளர்ந்த ஊர்.

சித்தி கொடுமை தாங்காமல் வீட்டை விட்டு ஓடி வந்து சென்னையை அடைந்தவர் தான் ராமரத்தினம். அவர் அப்பா ரங்கநாதனுக்கு ராமரத்தினத்தின் தாய் தான் முறைப்படி சொத்து பத்தோடு வந்தவள். ஆனால் ராமரத்தினத்தை பெற்றுப் போட்டு விட்டு சரியான மருத்துவப் பராமரிப்பு இல்லாததால் இறந்து விட்டாள். அதன்பின் வந்தவள் தான் சுலோச்சனா என்பவள்.

ராமரத்தினத்தை எடுத்ததெற்கெல்லாம் இடித்தாள். ரங்கநாதனின் சொத்து சொத்து பத்துகளுக்கு தனக்கு பிறக்கும் பிள்ளைகளே வாரிசாக வேண்டும் என்கிற ஆசையில் ராமரத்னத்தை பிரட்டி எடுத்தாள். ஒரு நாள் ஒரு கண்ணாடித் தம்ளரைக் கை தவறவிட்டு உடைத்து விட்டதற்காக கெண்டைக் காலிலேயே அவள் போட்ட சூடு ராமரத்னத்தை வீட்டை விட்டே ஓட வைத்து விட்டது!

அப்படி ஓடுவதற்கு முன் ஊரில் இருக்கும் ரசமணீஸ்வரர்



கோவில் பிரகாரத்தில் அழுதபடியே படுத்திருந்ததும், உள்ளே ராமரத்னம் இருப்பது தெரியாமல் குருக்கள் கோவில் கதவை பூட்டிக் கொண்டு போய் விட்டதும் ஒரு சாதாரணமான விஷயமில்லை!

அந்த பங்களா தோட்டத்தில் தனக்கு எதிரில் நீண்டு விரிந்து கிடக்கும் வங்காள விரிகுடா கடலை வெறித்தபடியே தனது இளமைக்கால நினைவுகளுக்குள் மூழ்கிக் கொண்டிருந்தார் ராமரத்னம்.

மிகச்சரியாக ஐம்பது வருடங்களுக்கு முன்னால் போய் விட்டது அவர் நினைவு.

அந்த மாலை வேளையிலேயே அன்றைய இரவு வர வேண்டிய சித்திரை பௌர்ணமி நிலவு வானின் ஒரு மூலையில் நன்றாக தெரியத் தொடங்கி விட்டது.

இதே சித்திரை பௌர்ணமி தான் ராமரத்னத்தையும் அன்று ஒரு அற்புதமான அனுபவத்துக்கு ஆளாக்கியது.

மாதம் தோறும் பௌர்ணமி நாளில் மட்டும் சித்தன் குறிச்சி ரசமணீஸ்வரர் திருக்கோவிலுக்கு பொதிகை மலையில் வசித்து வருவதாக கருதப்படும் சித்தர் பெருமக்கள் ரகசியமான வழிகள் வழியாக கோவிலுக்கு வந்து ரசமணீஸ்வரருக்கு அபிஷேக ஆராதனைகள் புரிவது என்பது இன்று வரை நடந்து வரும் ஒரு அதிசயமான சம்பவம்.

சாதாரண அபிஷேக ஆராதனையல்ல அது!

ஹோமம் வளர்த்து அதில் பல விசேஷ மூலிகை வேர்களைப் போட்டு அவர்கள் புரியும் ஹோமத்தால் மறுநாளே அந்த ஊரில் மழை பெய்யும். அந்த மழையே சித்தர்கள் எந்த தடையும் இன்றி கோவிலில் நள்ளிரவில் பூஜை செய்து விட்டதை ஊருக்கும் உணர்த்தி விடும். இன்று நேற்றல்ல... முன்னூறு வருடங்களாக இந்த அதிசயம் சித்தன் குறிச்சியில் தொடர்ந்தபடி உள்ளது. அதற்கு பின்னால் சில நம்பிக்கைகளும் உள்ளன... எப்போது அப்படி ஒரு பூஜை நடைபெறாமல், மழையும் பெய்யாமல் போகிறதோ அன்றிலிருந்து பன்னிரண்டு ஆண்டுக்குள் இந்த உலகம் அழிந்து விடும் என்பதும் அதில் ஒரு நம்பிக்கை.

ரசமணீஸ்வரர் கோவிலில் உள்ள லிங்கமும் ரசமணி என்னும்

பாதரசம் மற்றும் பல மூலிகைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒன்று என்று கூறுவார்கள். அந்த லிங்கத்தின் மேல் செய்யப்படும் அபிஷேகப் பொருட்கள் மருத்துவ குணத்துக்கு இலக்காகி பல நோய்களை தீர்க்கப் பயன்படும் என்பதால் அபிஷேக தீர்த்தம் மற்றும் பொருட்களை வாங்கிச் செல்ல பல சித்த வைத்தியர்கள் அங்கு வரிசை கட்டி நிற்பார்கள்!

ஒரு நாளைக்கு ஒரே ஒரு வேளை என்று உச்சிக் காலத்தின் போது மட்டும் தான் அபிஷேகமும் செய்யப்படும். மற்ற நேரத்தில் அபிஷேகம் செய்தால் அபிஷேக நீர் விஷமாகி அதை தொட்டாலே கை அரிக்கும் அளவுக்கு கொண்டு போய் விடுவதெல்லாம் சித்தன் குறிச்சி ரசமணீஸ்வரர் ஆலயத்து பெரும் விந்தை!

தான் பிறந்து வளர்ந்த ஊரின் அந்த விந்தையை எல்லாம் அசைபோட்டபடியே வானில் தெரியும் நிலவையும் பார்த்தார் ராமரத்தினம்!

காலில் சூடுபட்டு வீட்டை விட்டு ஓடி வந்த ஒருவன் உலகின் முதல் பத்து பணக்காரர்களில் ஒருவனாக இன்று இருக்க காரணம் கூட அன்று நடந்த சம்பவம்தானே?

கால் சூடுபட்டு பழுத்துவிட்ட சதைப்பாகத்தில் அப்படி ஒரு எரிச்சல்... அதன் எதிரொலியாக காய்ச்சலும் ஏற்பட்டு தன்னிலை மறந்து படுத்துவிட்ட நிலையில்தான் உள்ளே இருளுக்குள் ராமரத்தினம் முடங்கிக் கிடப்பது தெரியாமல் குருக்கள் கோவில் கதவை தாழிட்டு வெளிப்புறமாக பூட்டிக் கொண்டு போய்விட அன்று இரவுதான் சித்தர்கள் புரியும் அந்த அபிஷேக ஆராதனைகளும் ஆலயத்துக்குள் நடக்க ஆரம்பித்தது.

ஹோமப் புகையானது ஆலயத்துக்குள் எல்லா பக்கத்திலும் பரவியதில் ஒரு இருண்ட பிரகாரத்துக்குள் படுத்திருந்த ராமரத்தினத்தின் மூக்கிலும் அந்த புகை ஏறியது. அது அப்படியே ரர்மரத்தினத்தை மயங்க வைத்து விட்டது!

மறுநாள் பொழுது விடிந்து பார்த்த போது காலில் தீப்புண் இருந்த இடத்தில் துளிகூட வலியோ எரிச்சலோ இல்லை. ராமரத்தினத்தின் இடுப்பிலும் ஒரு மஞ்சள் துணியில் ரசமணி ஒன்று கட்டப்பட்டிருந்தது!

அனேகமாக யாரோ ஒரு சித்தர்தான் பரிதாபப்பட்டு கட்டி



விட்டிருக்க வேண்டும். பொதுவில் அவர்கள் பூஜிக்கும் அந்த பௌர்ணமி இரவில் மனிதர்கள் யாரும் உள்ளே இருக்கக் கூடாது. உள்ளே நடப்பதை பார்க்கவும் முயற்சிக்க கூடாது.

இப்படி விதிக்கப்படும் கட்டுப்பாடுகளை பக்தியுள்ள மனிதர்கள் மதிப்பார்கள்... கடவுளே இல்லை என்பவன் இதை எப்படி மதிப்பான்? அப்படிச் சிலரும் ஊருக்குள் இருந்து கோவிலுக்குள் மர்மமாக ஏதோ நடப்பதாக கருதிக் கொண்டு எட்டிப் பார்த்தார்கள். சாவித்துவாரம் வழியாக நேராக கண்ணில் பட்ட புகையாலே கண்பார்வை போனது தான் மிச்சம்!

இன்றும் சித்தன் குறிச்சிக்குள் அந்த மாதிரி பார்வை இழந்த பலர் இருக்கத்தான் செய்கின்றனர். பத்திரிக்கை, தொலைக்காட்சி மீடியாக்காரர்களுக்கும் அந்த குருடர்கள் ஒரு அதிசயம்!

ஒரு பத்திரிகைக்காரர் கூட வீரவசனமெல்லாம் பேசிவிட்டு கோவிலுக்குள் ஒளிந்து கொண்டு நடப்பதை அப்படியே படம் பிடித்து சூடாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பி கோடிக் கணக்கில் கல்லா கட்டத் தயாரானார். ஆனால் அந்த மனிதருக்கு சித்தபிரமை பிடித்ததுதான் மிச்சம்...

இதெல்லாம் தான் சித்தன் குறிச்சி அதிசய மர்மங்கள்! அந்த மர்மத்தில் ஒரு பாதிப்பும் இன்றி மீண்டு உலகின் பணக்கார ராகவும் இருப்பவர் ராமரத்தினம் ஒருவர்தான். அதற்கு காரணம் அன்று தனது இடுப்பில் கட்டப்பட்ட அந்த ரசமணியாக இருக்குமோ?

தன் இடுப்பை தடவி அந்த ரசமணியையும் வெளியில் எடுத்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டு சித்திரை பௌர்ணமி நிலவின் வெளிச்சத்தோடு சேர்ந்து அதைப் பார்க்கிறார்.

கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஊற்றெடுக்கிறது.

காதுகளுக்குள் வெகு தொலைவில் கூட்டாக சிலர் சிவநாமம் ஜெபித்திட அதை கேட்பது போலவும் இருக்கிறது.

இன்று சித்தன் குறிச்சியில் ராமரத்தினத்தின் உறவினர்கள் என்று ஒருவர் கூட இல்லை. அவரது சித்தி ஒரு நாள் தாமிரபரணி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு உடல் கூட கிடைக்காத படி இறந்து போனாளாம்.

அவளைக் கண்டித்து குடும்பம் நடத்த துப்பில்லாத

ராமரத்தினத்தின் அப்பாவான ரங்கநாதனும் கொஞ்ச நாளிலேயே சீதபேதி கண்டு இறந்துவிட அவர்கள் வாழ்ந்த வீடு இன்றும் பாழ்பட்டு கிடக்கிறது.

உள்ளே பாம்பும் தேளும்தான் வாசம் புரிகின்றன!

அந்த வீட்டை சீர்திருத்தி சித்தன் குறிச்சியையே தத்து எடுத்துக் கொண்டு தலைகீழாக மாற்றிவிடும் பணபலம் ராமரத்தினத்திடம் இருந்தும் தான்தான் ரங்கநாதன் பிள்ளை ராமரத்தினம் என்பதை அவர் இதுவரை எவரிடமும் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை! அப்போதே ஒரு முறை சொந்த ஊரைப் பார்க்கும் விருப்பத்தோடு புறப்பட்ட போது ஓடிக் கொண்டிருந்த காருக்குள் கண்ணயர்ந்து விட்டதும், அப்படி கண்ணயர்ந்த ஒரு வேளையில் கனவுக்குள் ஒரு சித்தர் தோன்றி 'இப்போது நீ ஊருக்கு செல்லாதே- உன் பிள்ளைக்கு இருபத்தி ஐந்து வயது பூர்த்தியான நிலையில் அவனை முதலில் அனுப்பி விட்டு பின்னர் நீ வந்தால் போதும்' என்று கூறி தடுத்து விட்டார்.

அவர் எதனால் அப்படிக் கூறினார் என்பதெல்லாம் மில்லியன் டாலர் மதிப்புள்ள கேள்வி!

இன்று வரை சொந்த ஊர் பக்கம் போய்வர அனுமதி கிடைக்கவில்லை. இதை நாலு பேரிடம் மனம் விட்டுப் பேசி எல்லாம் பகிர்ந்து கொள்ளவும் முடியாது. ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக நினைக்கலாம்.

இத்தனை பெரிய கோடீஸ்வரன் தன் முன்னேற்றத்துக்கு காரணம் ஒரு ரசமணி என்று எண்ணுகிறானே என்பது முதல் விஷயம்....

இந்த விஞ்ஞான யுகத்தில் இவருக்கு இப்படி ஒரு அசட்டு நம்பிக்கையா என்பது இரண்டாவது விஷயம்...

நெருங்கிய நண்பர்கள் என்பவர்களும் பெரிய கோடீஸ்வரர் களுக்கு இருக்க வாய்ப்பில்லை. மிகப் பெரும் தொழிலதிபர்கள் வரையில் எல்லோருமே அவர்களுக்கு தெரிந்தவர்கள் தான்... காரணம் அவர்கள் பணம்!

நண்பர்கள் அந்த பணத்தை குறி வைக்க ஆரம்பித்தால் ஆபத்து ஆரம்பமாகிவிடும்... அதற்கு பின்னால் எவ்வளவோ



உள்ளது. எனவே ராமரத்னம் வரையில் பால்யக்கால நினைவுகள் என்பது அவர் வரையில் அவருக்குள் மட்டுமே அடங்கிக் கிடக்கும் ஒரு ரகசியம்.

ஒரு வடநாட்டு மார்வாடிப் பெண்ணை காதலித்து திருமணம் புரிந்து கொண்டார். அவளும் கோடீஸ்வரி.... அவளிடம் ஒரு முறை ரசமணியை காட்டி என் முன்னேற்றம் வெற்றிக்கெல்லாம் காரணம் இதுதான் என்று கூறியபோது அவள் கேலியாக சிரித்து விட்டாள்.

இதை திருமணத்துக்கு முன்னால் நீங்கள் கூறியிருந்தால் நான் உங்களை மணந்து கொண்டிருக்கவே மாட்டேன் என்று அவள் சொன்னது தான் அதில் உச்சம்.

அந்த கருத்து ராமரத்தினத்தை மிகவே பாதித்துவிட்டது.

அதன்பின் மனைவியாகிய அவளிடமும் அவர் சித்தன் குறிச்சி பற்றியோ - அங்கு இன்றும் நடந்து வரும் பௌர்ணமி பூஜை குறித்தோ எல்லாம் பேசவேயில்லை!

அவ்வப்போது தனக்குத் தானே நினைத்துக் கொள்வதோடு சரி. ஒரு முறை தன் பி.ஏ வை அங்கு அனுப்பி அந்த கோயிலை புகைப்படம் எடுத்துக் கொண்டு வரச் சொல்லி அதை என்லார்ஜ் செய்து தன் பூஜை அறைக்குள் வைத்திருக்கிறார்.

அது ஒன்று தான் அவரது வெளி அடையாளம்!

ராமரத்தினத்துக்கு ஒரே ஒரு மகன்.

பெயர் அர்ஜுன்!

இது ஒரு வெற்றிகரமான பெயர்.... வீரம் விவேகம் காதல் தியாகம் தத்துவம் என்று பலவற்றோடு தொடர்பு உடைய ஒரு பெயர்.

மகாபாரதத்தில் அர்ஜுனனை யாருக்குத்தான் பிடிக்காது. குறிபார்ப்பதில் சூரன் இவன் - எனவே மகனுக்கு அர்ஜுன் என்கிற பெயரை வைத்து விட்டார் ராமரத்தினம்.

ஒரு ஆச்சரியம் போல அவன் பிறந்ததும் ஒரு சித்திரைப் பௌர்ணமி இரவில்தான்...

சித்திரை பௌர்ணமி ராமரத்னம் வரையில் பழைய நினைவுகளை மட்டுமல்ல மகன் அர்ஜுன் பற்றியும் பெரிதாக

சிந்திக்க வைத்து விடும்...

அர்ஜுன் இன்று ஒரு M.B.A. பட்டதாரி! ராமரத்தினத்தின் அவ்வளவு தொழிலையும் அவரைத் தொடர்ந்து பார்த்துக் கொள்பவன்.

ராமரத்தினத்தின் தொழில் வட்டாரத்தில் அர்ஜுன் என்றால் கூட பெரிதாக யாருக்கும் எதுவும் தெரியாது. JMD என்றால் தான் தெரியும்.

அந்த அர்ஜுன் ரதத்தை ஓட்டுவதில் தேர்ந்தவன் என்றால் இந்த அர்ஜுன் கார் ரேசில் முதலில் வருபவன். அசாத்ய தைரியம் - நல்ல இளமை - கூடவே எதையும் நுட்பமாக பார்க்கும் கூரிய புத்தி இதெல்லாம் தான் அர்ஜுன்!

அப்படிப்பட்ட அர்ஜுனுக்கு இன்று இரவில் இருந்து 25 வயது முடிந்து 26 வயது தொடங்கப் போகிறது!

ராமரத்னம் இந்த நாளுக்காகவும் காத்துக் கொண்டிருந்தது வீண் போகவில்லை. அதோ அர்ஜுன்... மாலத்தீவு வரை ஒரு பிசினஸ் விஷயமாக போய்விட்டு அவனது பிஏ வான குமரனோடு வந்தபடி...

"குட் ஈவினிங் டாட்..." - குரலோடு தந்தையை நெருங்கினான் அர்ஜுன்!

"வெய்ட்டிங் ஃபார் யூ மைடியர் சன்..."

"எனக்காக காத்துகிட்டிருக்கீங்களா... ரியலி?"

"ஆமாம்ப்பா... உன்கூட நான் இன்னிக்கு ஒரு முக்கியமான விஷயம் பேசணும்"

"ஓ! ஒன் மினிட் டாடி... உள்ள போய் கொஞ்சம் ஃப்ரஷ் பண்ணிகிட்டு வந்துடட்டுமா?"

"தாராளமா..." - அவர் அவனை அனுப்பி வைக்க அவனது உதவியாளன் குமரன் அந்த பங்களாவில் அவனுக்கென ஒதுக்கப் பட்ட அறை நோக்கி செல்லத் தொடங்கி அங்குள்ள கம்ப்யூட்டருக்குள் நுழைந்து மெயில் பாக்ஸைத் திறந்து இரண்டு நாளைக்குள் வந்து குவிந்து விட்ட செய்திகளைப் படித்து அதற்கான பதிலையும் அனுப்பத் தயாரானான்!



# 2

**சி**ல சித்த ரகசியங்கள் அற்புதமானவை. நல்லூர் என்று ஒரு ஊர். அந்த ஊரின் வழியாக ஒரு நதி ஓடிக் கொண்டிருந்தது. பின் ஒரு காலத்தில் அந்த நதி உருவாகும் மலையத்தில் அரசாங்கம் அணை கட்டியதில் அந்த நதியில் தண்ணீர் வருவது அடியோடு நின்று போய் இன்று அந்த நதி நல்லூரின் பெரிய சாக்கடை என்றாகி விட்டது. எப்போது அந்த நதி அங்கு இல்லாமல் போனதோ அப்போதே அந்த ஊரின் செல்வ வளம் எல்லா விதத்திலும் கெட்டுப் போய்விட்டது.

பெரிய அளவில் பணக்காரர்களாக திகழ்ந்த வர்கள் எல்லாம் ஓட்டாண்டியாகிப் போனார்கள். மூன்று போகம் விளைந்த நல்லூரில் இன்று ஒரு போகத்துக்கு கூட வழியில்லை. இப்படி ஒரு நிலையில் தான் ஒரு சித்தர் நல்லூருக்கு வந்து ஊரின் நிலையைப் பார்த்து ஒரு புதிய பழக்கம் ஒன்றை உருவாக்கினார்.

காய்ந்து போன ஆற்றுக்குள் கிணறு ஒன்று தோண்டச் செய்து அந்த கிணற்றின் கரையில் ஒன்பது மரங்கள் நட்டு அந்த மரங்களுக்கு கீழ் ஒன்பது வித லிங்கங்களை பிரதிஷ்டை செய்து அந்த லிங்கங்களுக்கு தினசரி அந்த கிணற்று நீரால் அபிஷேகம் நடக்கச் செய்தார்.

**ஹா**லில் ராமரத்னம் காத்துக் கொண்டிருக்க அர்ஜுனனும் வந்து சேர்ந்தான். ராமரத்தினத்துக்கு தன்னையே இளமையில் பார்ப்பது போல் இருந்தது.

"யெஸ் டாட்... இன்னிக்கு நீங்க எனக்காகவே காத்துகிட்டிருக்கிறது ரொம்ப ஆச்சரியமா இருக்கு. மாலத்தீவுக்கே நீங்க நாலு அஞ்சு முறை போன் பண்ணி பேசிட்டீங்க. சம்திங் பெருசா ஏதோ இருக்குன்னு தான் நினைக்கிறேன்..." என்றான்.

ராமரத்தினம் அவன் முன்னால் அந்த ரசமணியை கையில் எடுத்தார்.

"இந்தா இதை பிடி" - என்றார்.

"என்ன டாட் இது- இரும்பு கோலி மாதிரி இருக்கு.."

"நாட் தட்... இது ரசமணி.."

"அப்படின்னா?"

"யூ நோ மெர்க்குரி.. ஐ மீன் பாதரசம்னு தமிழ்ல சொல்வாங்க.."

"யெஸ்.. அதுக்கென்ன டாட்..?"

"இது தான் அது.."

"என்னது இது பாதரசமா.. பாதரசம்கறது லிக்விட்டால்ல இருக்கும்?"

"ஆமாம்.. அதை சில மூலிகை சாரு கலந்து புடம் போட்டா இப்படி ஆயிடும்.."

"புடம் போட்றதுன்னா?"

"அது ஒரு ப்ராசஸ் அர்ஜுன்.."

"ரைட் டாட்.. இப்ப இதனால என்ன பிரயோஜனம்?"

"நிறைய இருக்கு.. இதால தான் ஒரு அடிமையா இருந்த நான் இன்னிக்கு பெரிய தொழிலதிபனாவே இருக்கேன்.."

- அர்ஜுன் சிரிக்கத் தொடங்கி விட்டான்.

"நீ சிரிக்கல அர்ஜுன்... நீ படிச்ச படிப்பு உன்னை சிரிக்க வைக்குது.."

"ஆமாம் டாட்... படிக்கறதே பகுத்தறிவோட சிந்திக்கறதுக்கும் தானே?"

"எந்த விஷயத்துலயும் அவசரப்படக் கூடாதுங்கறது மட்டும் ஏன் உங்க படிச்ச பகுத்தறிவுக்கு தெரியறதே இல்லை.."

"இப்ப நான் எங்க டாட் அவசரப்பட்டேன்?"

"இந்த ரசமணி பத்தி மேற்கொண்டு எதுவுமே தெரிஞ்சுக்காம உடனேயே சிரிச்சா என்னப்பா அர்த்தம்?"

"இதுல தெரிஞ்சுக்க என்ன இருக்கு... அதான்



சொல்லிட்டீங்களே - இது பாதரசம் - இதுல மூலிகைச் சாறுவிட்டு புடம் போட்ருக்காங்கனு-"

"பாதரசத்தை இப்படி திடவடிவத்துக்கு உன் விஞ்ஞானத்தால கொண்டு வர முடியுமா அர்ஜுன்..?"

"டாட்.. நீங்க இப்ப விஷயத்துக்கு வாங்க. எதுக்கு நமக்குள்ள ஆர்கியூமெண்ட்..?"

"இல்ல... இது வந்த பிறகு தான் என் வாழ்க்கையே மாறினிச்சுன்னு சொன்னேன். ஆனா நீ அதை ஒரு பொருட்டாவே எடுத்துக்கல பார்த்தியா?"

"அது உங்க நம்பிக்கை... என்வரைல நீங்க பெரிய தொழிலதிபர் ஆனதுக்கு உங்க உழைப்பும், புத்தியும் தான் காரணம்.."

"பைத்தியக்காரா... என்னை விட பத்து மடங்கு அதிகமா உழைச்ச நபர்களையும், என்னை விட நூறு மடங்கு புத்திசாலித்தனம் உடையவர்களையும் எனக்கு தெரியும் ஆனா அவங்க யாரும் என் வளர்ச்சில நூறுல ஒரு பங்கை கூட அடையல.."

"சரி டாட்.. நீங்க விஷயத்துக்கு வாங்க. இந்த ரசமணியை நான் என்ன செய்யணும்?"

"இதை பத்ரமா வெச்சுக்கோ... குளிக்கற நேரம் தவிர மற்ற எல்லா நேரங்கள்ளயும் இது உன்னை விட்டு பிரியவேக் கூடாது.."

"தட் மீன்ஸ் நான் இதை எப்பவும் என் பாக்கெட்லயே வெச்சுருக்கணும்னு சொல்றீங்க.."

"ஆமாம்.. என்னோட வெற்றிகளை நீ தொடரணும்னு நான் விரும்பறேன்.."

"இது இல்லேன்னாலும் நான் நிச்சயமா வெற்றியடைவேன்பா.."

- மகனின் தன்னம்பிக்கை பேச்சைக் கேட்டு சிரித்தார் ராமரத்தினம்.

அர்ஜுனும் அதை தன் சட்டைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

"அர்ஜுன்... அது ஒண்ணும் கோலிகுண்டு இல்ல. பாதரசம்கறத சித்தர்கள் உலகம் சிவமா பாக்குது... மூலிகை

சாறுங்கறது இதுல சக்தி வடிவம். இரண்டும் சேர்ந்த ஒரு பவர்மேட் இது. இதை பத்ரமா வெச்சுக்கோ.. தவற விட்டுடாதே.."

- திரும்பவும் ராமரத்தினம் வலியுறுத்தினார்.

"சரி டாடி.. இது என்கிட்ட பத்ரமா இருக்கும் போதுமா?" - என்று அழுத்தமாக கேட்டு முடித்தான்.

"ஓ.கே.. உனக்கு இப்ப நான் ஒரு பெரிய அசைன்மெண்ட் தரப்போறேன்.."

"சொல்லுங்க டாடி.."

"சித்தன் குறிச்சின்னு ஒரு ஊர் கேள்விப் பட்டுருக்கியா?"

"அது நீங்க பிறந்து வளர்ந்த ஊர் இல்ல?"

"பரவால்ல ஞாபகம் வெச்சுருக்கியே.."

"அந்த ஊருக்கு என்ன டாட்..?"

"நான் பிறந்து வளர்ந்த ஊருக்கு எதாவது செய்ய வேண்டாமா?"

"என்ன செய்யப் போறீங்க?"

"என் ஊருக்குள்ளே தாமிரபரணி ஆறு ஓடுது.. அதனால நெல்லும் கரும்பும் அங்க அமோகமா வளருது."

"கரும்பு விளையற இடம்னா ஒரு சுகர் ஃபேக்டரி போடலாமே..?"

"நான் நினைச்சதும் அதை தான்.."

"அப்படியே செய்துடுவோம் டாடி.. நான் ஒரு தடவை உங்க கிராமத்துக்கு போய் பாத்துட்டும் வந்துட்றேன்.."

"அர்ஜுன்... இதோட நீ அங்க நான் பிறந்து வளர்ந்த வீட்டுக்கும் போய்ட்டு வரணும்."

"நீங்க வரலையா டாட்.."

"நீ போய்ட்டு வா.. எனக்கு இன்னும் உத்தரவு வரலை."

- சொல்லும் போதே அவர் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

"உங்களுக்கு யார் உத்தரவு தரணும்?"

"நீ போய்ட்டு வா.. அப்புறம் உனக்கு நான் சொல்லாமலே புரியும்.."



"இன்னிக்கு நீங்க புதிராவே பேசியிருக்கீங்க. எப்பவும் கட் அண்ட் ரைட்டா இருக்கும் உங்க பேச்சு."

"நான் எப்பவும் ஒரே மாதிரி தாம்ப்பா இருக்கேன்.."

- அவர் இயல்பாக கூறிடும் போது கார் ஒன்றின் பிரவேசம்.

"அர்ஜுன் உன் மாமா செந்தில் நாதன் வர்றார் பார்.."

- ராமரத்தினம் காரைப் பார்த்தபடி கூறிட காரிலிருந்து செந்தில்நாதன் எனும் அவனது மாமாவும் அவரது ஒரே மகளான வீணாவும் இறங்கினர்.

வீணா மிக மாடர்னாக உடை உடுத்தியிருந்தாள். இடுப்புக்கு கீழே ஒரு பாவாடை மேலே இறுக்கமாய் ரவிக்கை இடைப்பட்ட பாகத்தில் துளி கூட மறைவேயில்லை.

பார்ட்டிக்கு வரும் சினிமா நடிகைகள் போலிருந்தாள்.

அர்ஜுனுக்கு அது பிடிக்கவில்லை. "சரி டாட் நான் ஆபீஸ் வரை போய்ட்டு வரேன்.." என்று கிளம்பப் பார்த்தான்.

"என்ன மாப்ளை.. ஊர்ல இல்லேன்னு கேள்விப்பட்டேன்.." - என்றபடியே வந்தார் செந்தில்நாதன். நிறைய ரேஸ் குதிரைகள் வளர்க்கிறார். குளிர் பிரதேசங்களில் எஸ்டேட் வாங்கிப் போட்டு அங்கேயே எப்போதும் இருக்க விரும்புபவர்.

வீணா ஓடி வந்து அர்ஜுன் தோளை செல்லமாக கட்டிக் கொண்டு 'ஹாய் அர்ஜுன்' என்றாள். அவன் பதிலுக்கு வெறுமையாய் ஹாய் என்றபடி அவளை விலக்கி விட்டான்.

"அப்புறம் அத்தான் செளக்யம் தானே?"

"நல்லா இருக்கேன்பா.. நீ எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேன். சென்னைல நாளைக்கு ரேஸ் கிளப் மீட்டிங் இருக்கு. அதுக்கு வந்தேன். வீணாவும் கூட வரேன்னா கூட்டிகிட்டு வந்தேன்.."

"என்ன வீணா எதாவது சினிமால நடிக்கப் போறியா இதென்ன மேக்கப் டெஸ்ட் டிரெஸ்ஸா?" - என்று கிண்டலாக கேட்டான் அர்ஜுன்.

"சான்ஸ் கிடைச்சா நிச்சயம் நடிப்பேன் அர்ஜுன். ஆனா நான் இப்ப எந்த மேக்கப் டெஸ்ட்டுக்கும் போய்ட்டு வரலை" என்றாள்.

"மாப்ளைக்கு உன்னோட இந்த டிரெஸ் பிடிக்கலைன்னு நல்லா தெரியுது. இதுக்கு தான் நான் உன்னை சாரி கட்டிகிட்டு வான்னு சொன்னேன்.." - என்றார் செந்தில்நாதன்.

"இப்ப என்ன கெட்டுப் போச்சு.. இந்த வீட்ல என் அத்தை கட்டின புடவைகள் இல்லாமலா இருக்கும்.. இப்பவே போய் கட்டி கிட்டு வந்துட்றேன்.." என்றாள் அவள்.

"நோ நோ.. அதெல்லாம் இந்த வீட்டுக்கு மருமகளா வரப் போறவளுக்கு தான் அனுமதி.." என்றான் அர்ஜூன்.

அதுவே உன்னை நான் அந்த லிஸ்டில் வைக்கவில்லை என்பது போல் இருந்தது.

கொஞ்சம் சுருக்கென்றது செந்தில்நாதனுக்கு.

"மாப்ளை.. வீணா உங்க முறைப் பொண்ணு. என் அக்கா உயிரோட இருந்த வரை வீணா தான் இந்த வீட்டு மருமகன்னு சொல்லி கிட்டு இருந்தாங்க. நானும் அந்த எண்ணத்துல இருக்கறதால தான் வீணாவுக்கு வேற இடம் பாக்கல.." என்றார் செந்தில்நாதன்.

"சாரி அங்கிள்.. நான் இப்ப கல்யாணம் பத்தியெல்லாம் யோசிக்கற ஒரு நிலைலயே இல்லை. நான் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கு..." என்றபடியே அங்கிருந்து எழுந்து வெளியேறத் தொடங்கினான்.

செந்தில்நாதனுக்கு அது ஏமாற்றமாகத் தான் இருந்தது.

ராமரத்தினத்துக்கும் அது புரிந்தது.

"செந்தில்... நீ கவலைப்படாதே! உன் அக்கா விருப்பம் எனக்கும் தெரியும். அர்ஜூன் போகப் போக மாறலாம்" என்றார்.

"இல்ல அத்தான்.. நான் இங்க வந்ததே கல்யாணம் விஷயமா ஒரு முடிவு தெரிஞ்சுக்கத் தான். அர்ஜூன் இப்படி பேசுவான்னு கொஞ்சம் கூட எதிர் பார்க்கல."

"இந்த காலத்து பசங்கள பத்தி தெரியா தாக்கும் விடு செந்தில்.."

"இதுல உங்க அபிப்ராயம் என்ன அத்தான்?"

"அர்ஜூன் விரும்பினா எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை."



"ஒரு வேளை விரும்பலைன்னா?"

"இது என்ன சில்லி கொஸ்டின்.. வீணாவுக்கு என்ன வேற மாப்ளையே கிடைக்க மாட்டானா என்ன?"

- அவர் பதில் பட்டுக் கத்தரித்த மாதிரி இருந்தது. பின் சிறிது நேரம் பேச வேண்டுமே என்று பேசிக் கொண்டிருந்து விட்டு காரில் ஏறிக் கொண்டு திரும்பும் போது மகளைப் பார்த்தார் செந்தில்நாதன்.

அவள் முகத்தில் ஒரு வித கோபம்.

"வீணா.. நான் உனக்கு இப்பவே வேற இடம் பாக்கட்டுமா?"

"இல்லப்பா.. என்வரைல அர்ஜூன் தான் என் புருஷன் அதுல மாற்றமில்ல.."

"அவன் நாளைக்கே இதுக்கு சம்மதிக்க லேன்னா.."

"சம்மதிக்க வைப்பேன்.. என்கிட்ட ஒரு ஆம்பளை எந்த உதவி கேட்டாலும் செய்ய தயாரா இருக்கேன்... அதே சமயம் கேலியாவும் ஏளனமாவும் பாத்தா நான் சும்மாவிட மாட்டேன்.."

"கல்யாணம்கறது சேலஞ்ச் பண்ணிக்கற ஒரு விஷயம் இல்லம்மா.."

"தெரியும்பா.. எப்ப அர்ஜூன் என்னை பெருசா கன்சிடர் பண்ணலையோ அப்பவே அர்ஜூனை என் காலடில விழ வெச்சுப் பாக்கணும்கற எண்ணம் தான் எனக்குள்ள ஓடிகிட்டேயிருக்கு.."

"அர்ஜூன் ஒண்ணும் சராசரி வாலிபன் கிடையாது. அவன் ஒரு ஜெஎம்டி.. அவன் வரைல நீ நினைக்கறது நடக்கணும்னா ரொம்பவே நீ அதுக்காக கஷ்டப்பட வேண்டியிருக்கும்.."

"ஒரு வெற்றிக்காக உயிரைக் கூட கொடுக்கறவ தானேப்பா நான்?" - அவள் கேட்ட விதமே அலாதியாக இருந்தது.

அவரும் அதைக் கேட்டு கமுக்கமாய் சிரித்துக் கொண்டார்!

# 3

'வறண்ட அந்த ஆற்றின் நடுவில் தோண்டப் பட்ட கிணறும் கிணற்றை சுற்றி வளர்ந்த விருட்சங்களும் தினமும் பூஜை காணத் தொடங்கின. அந்த லிங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான உலோகக் கலவையுடன் இருந்தது. அதற்கு நிகழ்ந்த அபிஷேக ஆராதனைகள் அந்த அபிஷேக நீர் வறண்ட ஆற்றின் துளியளவு நீரோடு கலந்து மெல்ல ஓடத் தொடங்கியது.

எல்லாம் சில காலங்கள் தான்!

ஒரு நாள் மழை வரத் தொடங்கியது. அதன் பின் மழை என்பது அந்த கிராமத்தில் குறையவே இல்லை. ஆற்றிலும் எப்போதும் இடுப்பளவு நீர் ஓடிக் கொண்டு தான் இருந்தது. இதில் அந்த லிங்கங்கள் மூழ்கி விட்டன. எப்போதாவது நீர் மட்டம் குறையும் போது"அவைகளை பார்க்க முடிந்தது. அப்போதெல்லாம் பரிசலில் அங்கே சென்று அந்த லிங்கங்களை சுற்றி வந்து வணங்குவது ஊர் மக்கள் வழக்கமாகி விட்டது.

லிங்கங்களை வழிபடப் போய் கடவுள் மனம் மகிழ்ந்து மழையை தந்தார் என்போர் ஒரு புறம் அந்த லிங்கங்களிடம் ஏதோ அற்புத சக்தி இருக்கிறது அதுதான் காரணம் என்போர் இன்னொரு புறம்.

மொத்தத்தில் சித்தர்கள் ஒன்றைச் செய்தால் அதில் நாம் புரிந்து கொள்ள முடியாத ரகசியங்கள் நிறையவே அடங்கியிருக்கும் என்பது தான் உண்மை!'

சித்தன் குறிச்சி..!

ஒரு ஜிப்ஸி ஜீப் ஒன்றில் வெள்ளைக்காரர் ஒருவரும் கூடவே கைட் மணியும் ஊருக்குள் நுழைந்திருந்தனர். அந்த வெள்ளைக்காரர் கழுத்தில் கேமரா தொங்கியபடி இருக்க அவ்வப்போது அவர் அங்கங்கே படம் பிடித்துக் கொள்ளவும் செய்தார்.



அந்த ஜீப் கோவில் வாசலில் வந்து தேங்கி நின்றது. இருவரும் இறங்கினர்.

மணி நன்றாக ஆங்கிலம் பேசத் தெரிந்த ஒரு கைட்!

அந்த வெள்ளையரிடம் பேசத் தொடங்கினான்.

"மிஸ்டர் க்ளாட்... இதுதான் சித்தன் குறிச்சி ரசமணீஸ்வரர் திருக்கோவில். நல்லா பார்த்துக்குங்க. இது எப்ப கட்டப்பட்டதுன்னு ஒருத்தருக்கும் தெரியாது. ஆனா ரொம்ப அதிசயமான கோவில். இந்த கோவில்ல தான் இப்பவும் பௌர்ணமிக்கு பௌர்ணமி சித்தர்கள் வந்து ராத்திரில பூஜை செய்யறாங்க.." என்றான்.

க்ளாட்' என்னும் அந்த வெள்ளைக்காரர் நிமிர்ந்து கோவிலைப் பார்த்தபடியே இருந்தார்... பழமை மாறாத அந்த நாளைய கலை வண்ணம். ஆந்திர தேசத்துக்கு கோவில்களைப் போல கோபுரம் முழுக்க வெள்ளை சுண்ணாம்பு அடிக்கப்பட்டிருந்தது.

மதில்களில் அங்கங்கே அரசஞ்செடிகள் வளர்ந்திருந்தன. கோவில் முன்னால் ஏராளமான குருடர்கள் கண்ணில் பட்டனர். அது க்ளாட்டுக்கு ஆச்சரியமளித்தது.

"இங்க மட்டும் ஏன் இவ்வளவு குருடர்கள் மணி?"

"அதுவா... இவங்கல்லாம் பௌர்ணமி ராத்திரில நடந்த சித்தர்கள் செய்த பூஜையை மறைஞ்சிருந்தும் ஒளிஞ்சிருந்தும் பார்த்தவங்க.."

"அதுல என்ன தப்பு?"

"என்னைக் கேட்டா... இதை எல்லாம் ஆராய்ச்சி செய்யத்தானே நீங்களே இந்த ஊருக்கு வந்துருக்கீங்க."

"இவங்கல்லாம் எப்படி குருடானாங்கறது என் ஆராய்ச்சி இல்லை மணி, இந்த ஊர்ல இருக்கற சிவலிங்கத்துக்கு சித்தர்கள் செய்யற பூஜை நின்னு போனா இந்த உலகம் அழிஞ்சிடும்னு ஒரு கருத்து பேசப்பட்டுகிட்டு இருக்கு பார்... அது தான் என் ஆராய்ச்சியோட மையக் கருத்து."

"இந்த உலகம் அழியுமோ அழியாதோ அது எனக்கு தெரியாது. ஆனா கோவில்ல நடக்கற பூஜையை யார் பார்த்தாலும் கண்ணு குருடாயிட்றது உறுதி."

- மணி கூறிட அந்த குருடர்களில் சிலர் பரிதாபமாக கத்திக் கொண்டிருந்தனர்.

"ஐயா யாராவது எங்கள சிவன் மலை காட்டுல கொண்டு போய் விட்றீங்களா.. உங்கள கெஞ்சிக் கேட்டுக்கறோம்.." என்றனர்.

அது என்ன சப்தம் என்று க்ளாட்டும் கேட்டார்.

மணியும் கூறினான்.

"கண் தெரியாத இவர்கள் டாக்டரிடம் போகாமல் சிவன் மலைக்கு ஏன் போக விரும்பு கின்றனர்..." - என்று திருப்பிக் கேட்டார்.

"டாக்டர்கள் கை விட்ட கேசுங்க தான் இவங்கல்லாம்.. சிவன்மலை சித்தர்களால போன பார்வை அவங்களால அவங்க மனசு வெச்சா வந்துடும்கறது இவங்க நம்பிக்கை.."

- மணி சொன்னதில் சிவன்மலை சித்தர்கள் என்கிற விஷயம் க்ளாட்டுக்கு புதிது.

"யார் அந்த சிவன் மலை சித்தர்கள்? எங்க இருக்கு அந்த சிவன் மலை?" என்று கேட்டார் க்ளாட்.

மணி நின்ற இடத்தில் இருந்து கொண்டே பக்கவாட்டில் தெரிந்த பொதிகை மலைக் கூட்டத்தை தன் ஆள்காட்டி விரலால் காட்டினான்.

"இப்படி பொதுவா கை காட்டினா எப்படி மணி.. இந்த மொத்த மலைக் கூட்டமேவா சிவ்ன்மலை?"

"இதை நாங்க பொதிகை மலைக் கூட்டம்னு சொல்வோம் அகத்தியர்னு ஒரு முனிவர் வாழ்ந்த மலை இது. இப்பவும் அவர் இந்த மலைல சாகாம நடமாடிகிட்டிருக்கறதா ஒரு பேச்சு இருக்கு.. இதுக்குள்ளதான் சிவன் மலை இருக்கு.."

"இண்டியன் மைத்தாலஜியே ரொம்ப இண்ட்ரஸ்ட்டான துன்னு தெரிஞ்சுதான் நான் வந்துருக்கேன்.. நாம இப்ப அங்க போகலாமா.. அந்த அகத்தியரை பார்க்க முடியுமா?"

.- டாக்டர் க்ளாட் ஏதோ ஒரு சாதாரண வி.ஐ.பியை பார்க்க நினைப்பது போல கேட்கவும் மணி தன்னையும் மீறிக் கொண்டு க்ளுக்' என்று' சிரித்து விட்டான்.

"ஒய் யூ லாஃப்?"

"பின்ன.. அகத்தியரோட காலம்கறது ஆயிரம் வருஷம் முந்தி.. இப்ப அவரை பாக்க முடியுமான்னு கேட்டா எப்படிங்க டாக்டர்..?"

"நீ தானே சொன்னே அவர் இப்பவும் நடமாட்றார்னு..."

"நான் சொன்னா உடனே நம்பிடுவீங்களா? அது எப்படின்னு கேட்க மாட்டீங்களா?"

"நோ..நோ.. அது சந்தேகப்பட்றவங்களோட வேலை.. நான்



உங்க சித்தர்கள் விஷயத்தை நம்பறேன்..."

- அதற்கும் சிரித்தான் மணி.

"இதுக்கும் சிரிக்கிறியே நீ.."

"வேற என்ன செய்ய.. இதை எல்லாம் நானே நம்பத் தயாரா இல்லை.."

"அப்ப இங்க இருக்கற இவங்க கண் பார்வை எப்படிப் போச்சு?"

"அதை நீங்க தான் கண்டுபிடிக்கணும். அதுக்கு தானே வந்திருக்கீங்க?"

"திரும்பவும் சொல்றேன்.. நான் இந்த மாதிரி விஷயங்கள எல்லாம் ஆராய்ச்சி செய்ய வரலை. இந்த கோவில்ல சித்தர்கள் பூஜை செய்யலேன்னா' உலகம் அழிஞ்சிடும்னு சொன்னதைத் தான் நான் ஆராய்ச்சி செய்ய வந்துருக்கேன்.."

"டாக்டர்.. இங்க ஒரு சாமியார் சினிமா நடிகைகளோட அடிச்ச கூத்துக்கே எப்பவோ உலகம் அழிஞ்சிருக்கணும். அதுக்கே அழியாத உலகம் சித்தர்கள் பூஜை செய்யலேன்னா அழிஞ்சிடும்னு சொல்றதை என்னால ஒத்துக்க முடியலை.."

- மணி வார்த்தைக்கு வார்த்தை தனது நம்பிக்கையின்மையை அடிக்கடி வெளிப்படுத்தினான். அது க்ளாட்டுக்கு சற்று எரிச்சலை தந்தது.

அவனோடு அதற்குமேல் பேசிக் கொண்டிராமல் கோவிலுக்குள் நுழைந்து ரசமணீஸ்வரரை தரிசனம் செய்ய முயன்றார்.

சன்னதியில் அவ்வளவாக கூட்டமில்லை.

குருக்கள் தேடி வந்து விபூதி தந்தார்.

அதை க்ளாட்டும் நெற்றியில் இட்டுக் கொண்டார்.

"இதுக்கு பேர் தானே விபூதி?"

"ஆமாம்... இதுக்கு பேர் தான் விபூதி. இந்த உலகத்துல பிறந்த அவ்வளவு பேரும் ஒரு நாள் எரிஞ்சு சாம்பலாத்தான் போகப் போறோம். நாம எப்படி இருந்தாலும் எந்த மாதிரி வாழ்ந்திருந் தாலும் நம்மோட அல்டிமேட் முடிவு இது தான்.. இதை ஞாபகப் படுத்தறதுதான் இந்த விபூதி.."

- குருக்கள் தன் பாணியில் க்ளாட்டுக்கு விளக்கமளித்தார்.

"இண்ட்ரஸ்ட்டிங்..." என்றார் க்ளாட்... ஆனால் இங்கேயும் மணி நமட்டு சிரிப்பு சிரித்தான்.

"திரும்பவும் சிரிப்பா..?"

"பின்ன என்ன டாக்டர்.. நாம எல்லோருமே சாம்பலாகப் போறதா சொன்னார்.. உங்களை எல்லாம் சவப்பெட்டில வெச்சு புதைக்கத் தானே செய்வாங்க... புதைக்கற உடம்பு எப்படி சாம்பலாகும் புழுவாத்தான் ஆகும்னு சொல்லுங்களேன்.."

- மணி கிண்டலாக எடுத்துக் கொடுத்தான்.

க்ளாட் அவனை பார்வையாலேயே முறைத்து தடுத்து நிறுத்தி விட்டு குருக்களிடம் புன்னகையோடு தொடர்ந்தார்.

"குருக்களே... நான் கனடாவுல இருந்து வந்துருக்கேன் - இன்டர்நெட்ல இந்த கோவில் பத்தி ஒருத்தர் குறிப்பிட்டிருந்த விஷயம் என்னை ரொம்பவே டிஸ்டர்ப் பண்ணிச்சு. அதான் வேகமா உண்மைய தெரிஞ்சுக்க கிளம்பி வந்துட்டேன்.."

"அப்படி அவர் என்ன குறிப்பிட்டிருந்தார்?"

"இந்த கோவில்ல பௌர்ணமிக்கு பௌர்ணமி சித்தர்கள் வந்து ரகசியமா பூஜை செய்யறதாகவும், அந்த பூஜைக்கு தடை வந்தாலோ இல்ல அந்த பூஜை நின்னுட்டாலோ இந்த உலகம் அழிஞ்சு போயிடுமாமே.."

"ஆமாம்... அப்படித்தான் இந்த கோவில்ல இருக்கற கல்வெட்டுக் குறிப்பு சொல்றது.."

"அதை நான் பாக்க முடியுமா?"

"தாராளமா... வெளிய பிரகாரத்தை சுத்தி வரும் போது பாக்கலாம்.."

"அதை எழுதினது யார்னு சொல்ல முடியுமா?"

"சித்தர்களாகத்தான் இருக்கணும்.."

"சித்தர்கள்னு பொதுவாச் சொன்னா எப்படி? அவருக்கு பேர் இல்லையா?"

"ஏன் இல்லாம... அகத்தியர், போகர், காகபுஜண்டர், இடைக்காடர், திருமூலர், கருவூரார், கொங்கணர், பிராந்தர்னு ஒரு பெரிய கூட்டமே இருக்கே.. ஆனா இவங்கள்ள யார் எழுதினதுன்னு தான் தெரியலை. அதை தெரிஞ்சுக்கற சக்தியும் என்கிட்ட இல்லை."

"இவங்களுக்கெல்லாம் இப்ப என்ன வயசு இருக்கும்?"

"யாருக்கு தெரியும்.. உங்களையும் என்னையும் போல இந்த உலகத்துல விளையறத தின்னுட்டு வேளை வந்தா சாகறவாளப் போல இவங்க கிடையாது. இவங்க மரணத்தையே வெற்றி கொண்டவங்க. ஒருத்தருக்கு 1000 வயசு.. ஒருத்தருக்கு 800 வயசு, ஒருத்தருக்கு 900 வயசு.."

"நீங்க சொல்றது ரொம்ப மிராகிளா இருக்கு... சைன்ஸ்ல இப்ப தான் ஸ்டெம் செல் கிட்ட போய் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வழி கண்டு பிடிச்சிருக்கோம். ஆனா இவங்க எப்படி இவ்வளவு காலம் உயிரோட இருக்காங்க... அது தெரிஞ்சா எல்லாரும் அந்த மாதிரி வாழ முயற்சி செய்யலாமே..?"

"அது சரி.. ஒலிம்பிக்ல ஒரு போட்டிக்கு ஒரு தங்கப்பதக்கம் தான். ஒருத்தர் தான் ஜெயிக்கவும் முடியும். எல்லாரும் சித்தர்களாக முடியுமா என்ன..?"

"சரி.. சித்தர்கள் இந்த கோவில்ல செய்யற பூஜைக்கு மட்டும் அப்படி என்ன சக்தி?"

"யாருக்கு தெரியும்... ஒரு வேளை ரசமணியால ஆன இந்த ஈஸ்வரன் வேற எங்கேயும் இல்லையோ என்னவோ?"

"ரசமணிகிட்ட அப்படி என்ன சிறப்பு?"

"பாதரசம்னா சும்மாவா..? அதை கட்றதும் அசாதாரணம் இல்லையா?"

"அப்ப அந்த மெர்க்குரி கிட்ட தான் ஏதோ இருக்கு அப்படி தானே?"

"இது மட்டும் இல்ல.. இந்த ஊர்ல ஒரு விருட்சம் இருக்கு."

"விருட்சம்னா..?"

"மரம்... அதாவது ட்ரீ... அதுவும் ஒரு காரணம்னு சொல்வா."

"மரமா?"

"ஆமாம்.. அப்படி ஒரு மரத்தை நீங்க எங்கேயும் பாத்துருக்க முடியாது. இந்த கோவில் கட்டப்பட்டப்போ நடப்பட்ட மரம். அதுவும் சக்தி அம்சமான வேப்பமரம்..."

"அந்த மரத்துக்கு என்ன அப்படி ஒரு சக்தி..?"

"பொதுவில் வேம்பு எங்க வரைல தெய்வீகமான ஒரு மரம் வேம்பும் அரசும் ஒரு ஊர்ல நிறைய இருந்தா அந்த ஊர்ல மலடிகளே இருக்க மாட்டாங்க. அதே போல அந்த ஊர்ல பெரிய அளவுல வியாதி உடையவர்களும் இருக்க மாட்டாங்க. எல்லாரும் ஒத்துமையாவும் இருப்பாங்க. அந்த மரங்களோட குணத்தால அப்படி ஒரு நிலைங்கறது தான் காரணம்."

"அப்ப இந்த ஊர்லயும் அப்படி தானா?"

"நிச்சயமா... இந்த ஊர் வரைல எந்த வீட்ல ஒரு விசேஷம் னாலும் இங்க கோவில்ல வந்து உத்தரவு கேட்ட பின்னாலதான் செய்வாங்க.. அதேபோல ஊர்த் தலைவர் பேச்சையும் யாரும் மீற மாட்டோம்."

"வெரி இண்ட்ரஸ்ட்டிங்...! போகட்டும் இந்த ரசமணி

லிங்கத்தை நான் கொஞ்சம் கிட்ட வந்து பாத்து போட்டோ எடுத்துக்கலாமா?"

க்ளாட் கேட்கவும் பதறிப் போய் 'சிவ்சிவா' என்றார் குருக்கள்.

"என்ன குருக்களே... என் ஆராய்ச்சிக்காக தான் இப்படி கேக்கறேன்."

"நீங்க உண்மை பேசறதுக்காக சந்தோஷப்பட்றேன். ஆனா ஆராய்ச்சிங்கறது மனுஷங்களுக்குள்ள வேற எந்த விதத்துலயும் இருக்கலாம். கடவுள்கிட்ட கூடாது. அந்த ரசமணியை நேரா கண்ணால பார்த்தாலே நல்லது கிடையாதுன்னு தான் சுவாமிக்கு மஞ்சளும் சந்தனமும் கலந்த காப்பை எப்பவும் போட்டு வெச்சிருக்கோம். இப்பவே கருவரைல நின்னு பூஜை செய்யும் போது என்னமா கொதிக்குது தெரியுமா?"

- குருக்கள் சொல்லச் சொல்ல க்ளாட் வரையில் ரசமணி லிங்கத்தை பார்க்கும் எண்ணம் தீவிரமாகிக் கொண்டே தான் போனது. அது துளி கூட குறையவில்லை. இருந்தும் குருக்கள் எதிரில் அடக்கிக் கொள்வது போல அடக்கிக் கொண்டார். தட்டில் ஒரு 500 ரூபாய் நோட்டைப் போட்டு குருக்களை அசத்திய வராக வெளியில் வந்தார். மணியும் கொஞ்சம் மிரண்டுதான் போனான்.

"மணி அந்த கல்வெட்டு எங்க இருக்கு.. நான் ஒரு போட்டோ எடுத்துக்கறேன்" என்றார்.

"அதோ அது தான்.." என்று அபிஷேக நீர் வந்து விழும் கல் தொட்டிக்கு பக்கமாய் உள்ள சுவர்ப் பகுதியை காட்டினான். க்ளாட்டும் கிட்டே சென்று ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

"மணி நாம இப்ப அந்த விருட்சத்தைப் பார்க்கப் போறோம்.." என்றார்.

"வேப்பமரத்தைன்னு சொல்லுங்க... இந்த கோவிலை விட அங்குதான் நிறைய கூத்து நடக்கும். பாக்கப் பாக்க சிரிப்பா வரும்.." என்றான்.

"கூத்து மீன்ஸ்?"

"ஐயோடா... நான் சும்மா எங்க ஊர்ல பேசற மாதிரி பேசினேன். கூத்துன்னா.. வந்து தான் பாருங்களேன்.." - என்று தான் ஓட்டி வந்த ஜீப்பில் ஏறிக் கொண்டான். அந்த ஜீப்பும் வேகமாக கிளம்பியது.

ஜீப்புக்குள்..

"இதுல ஒரு கூத்து என்னன்னா அந்த மரத்தை கிட்ட தட்ட கற்பக விருட்சம்னு சொல்வாங்க. கற்பகவிருட்சம்னா உங்களுக்கு



தெரியாதுல்லை நான் ஒரு மடையன்" என்று மணி சலித்துக் கொள்ளவும்

"ஐநோ மணி.. கேட்டதெல்லாம் கொடுக்கற ஒரு மரத்துக்கு பேர்தான் கற்பகமரம்னு பேர்.. அது இப்பவும் இந்திரலோகத்துல இருக்கு. ஆம் ஐ ரைட்?"

- மணி க்ளாட்டின் பதிலைத் தொடர்ந்து பெரிதாக வாயைப் பிளந்தான்.

"டாக்டர் உங்களுக்கு எங்க ஊர் இந்திரலோகம் பத்தி எல்லாம் கூட தெரியுமா?"

"இந்திரலோகம் பத்தி மட்டுமில்ல. சத்யலோகம், கைலாசம் வைகுண்டம்னு மத்த லோகங்களும் தெரியும். நான் ஹிந்து பிலாசபியை கரைச்சு குடிச்சுட்டுதான் கனடாவை விட்டே.. கிளம்பினேன்" என்ற க்ளாட்டை முதல் தடவையாக சற்று பிரமிப்போடும் பயத்தோடும் பார்த்தான்!

## 4

**'இன்றைக்கும் இந்த பூமியில் நிறைய அதிசயங்கள் எவராலும் அறியப்படாத வகையில் நம்மைச் சுற்றியே இறைந்து கிடக்கின்றன. அதில் விருட்சங்களுக்கும் இடம் உண்டு. தில்லை விருட்சம் என்று ஒன்று உண்டு. இதன் அடி நிழலில் யார் நின்றாலும் அவர்களுக்கு தலை வலியோடு கூடிய உறக்கம் உறுதி. அதே போல ஜோதி விருட்ச நிழலில் நிற்பவர்களுக்கு உடம்பின் உஷ்ணம் குறைந்து குளிர்ச்சி நிலவத் தொடங்கிவிடும். இதேபோல பல அதிசய குணங்களை கொண்ட பல விருட்சங்கள் சிவன் மலையில் உள்ளன. சித்தன் குறிச்சி அத்தி மரம் விருப்பங்களை ஈடேற்றித்தரும்!'**

அந்த வேப்பமரம் ஊர்ப் பெரியவரும் தலைவருமான ராமலிங்கத்தின் தோட்டத்தில் இருந்தது. கிட்டதட்ட அரை ஏக்கரில் தோட்டம்.. தோட்டத்தில் குண்டு மல்லிகைச் செடிகள்.. புதிதாக ஒரு ஓரத்தில் கத்தரிக்காய் நட்டு அதிலும் குடை குடையாக கத்தரிக்காய்கள்!

தோட்டத்தின் ஓரத்தில் இருந்தது அந்த வேப்பமரம்... பலநூறு வருடங்களின் வளர்ச்சியில் ராட்சஸமாய் வளர்ந்திருந்தது. மரத்தின் அடிப்பாகம் முழுக்க மஞ்சளும் குங்குமமும் இறைந்து கிடந்தன, அதன் நிழலில் சிலர் கண்களை மூடி அமர்ந்திருந்தனர். சிலர் நின்று கைகளை கூப்பிக் கொண்டிருந்தனர். வெளியூரில் இருந்தெல்லாம் பல கன்னிப் பெண்கள் வந்திருந்தனர். அவர்கள் எல்லோருமே நல்ல புருஷன் வாய்க்க வேண்டும் என்கிற கோரிக்கையைத் தான் மனதுக்குள் சுமந்து கொண்டு இருந்தனர்.

டாக்டர் க்ளாட்டும் தன் ஜீப்பில் வந்து இறங்கினார்.

சிலுசிலுவென்ற காற்று..! அவருக்கு அந்த சூழலே மிகவும் பிடித்து விட்டது. கேமராவில் அந்த காட்சிகளை படம் பிடித்துக் கொள்ளத் தொடங்கினார்.

'ஒண்டர்ஃபுல்... 'சூப்பர்..' என்று உணர்ச்சி வசப்பட்டார்.

'என்னத்த ஒண்டர்ஃபுல்.. ஒண்ணுக்கும் உதவாதவனை மரம் மாதிரி நிக்கிறியேடான்னு திட்டுவோம். அந்த மரத்தை இங்க விழுந்து கும்பிட்றாங்க... உங்களுக்கு இது பைத்தியகாரதனமா தெரியலியா?' என்று கேட்டான் மணி.

"ஸ்டுப்பிட் மாதிரி பேசாதே.. ஒரு இந்துவா இருந்துகிட்டு உனக்கு உங்க மதத்தோட ஸ்ட்ரெங்க்தே கொஞ்சம் கூட தெரியல.

மரம் தான் இந்த பூமியிலேயே நீண்ட நாள் வாழற ஒரு உயிரினம். ஒரு மரம் சாதாரணமா ஆயிரம் வருஷம்லாம் வாழும். அதனால யாருக்கும் எந்த கெடுதலும் கிடையாது. ஒரு முள் மரம், ஒரு விஷ மரம் கூட நாம அதை பயன்படுத்தும் போது தான் துன்பம் தரும். அதுவா தேடி வந்து துன்பம் தராது. அது மட்டுமில்ல அதோட நிழல், அதோட கிளைன்னு எல்லா இடத்துலையும் நமக்கு நன்மை தான்.

ஆயிரக்கணக்கான பறவைகளுக்கு அது வீடா இருக்கு. மழை பெய்யவும் அதுதான் பெரிய காரணமா இருக்கு. இவ்வளவு செய்யற இந்த மரம் மனுஷனைப் போல இரை தேடி அலையறதில்ல. இரைக்காக எந்த பாவமும் பண்றதில்லை. பெய்யற மழையை உண்டு தன் பசியை போக்கிக்குது. நாம அதை கல்லால அடிச்சாலும் கனியை தான் தருது. திருப்பி நம்மை அடிக்கறதில்லை..

இதெல்லாம் தெரிஞ்சு தான் உங்க முன்னோர்கள் கோவில்கள்ள கோவில் மரம்னு ஒண்ணை வெச்சு வளர்த்தினாங்க. அதே போல கோவில் குளம், கோவில் மண்டபம், கோவில் பிரசாதம்னு எல்லாத்தையும் பொதுவாக்கி வெச்சாங்க.



இதெல்லாம் எவ்வளவு பெரிய விஷயங்கள் தெரியுமா?"

- டாக்டர் க்ளாட் ஒரு சொற்பொழிவே ஆற்றி முடித்து விட்டார். மணிக்கு பிரமிப்பாக இருந்தது. அதுவே டாக்டர் க்ளாட் ஒன்றும் சாதாரண ரகப்பட்ட ஆராய்ச்சியாளர் இல்லை என்பதையும் உணர்த்தி விட்டது.

"சாரி டாக்டர் நான் சும்மா விளையாட்டுக்கு சொன்னேன்.." என்றான். அப்போது ஒரு பெண் தலையில் ஒரு மண் கலயத்தை சுமந்து வந்து மரத்தடியில் வைத்தாள். கலயத்தில் பால் இருந்தது. அவள் மரத்தை சுற்றி வந்து வணங்கத் தொடங்கினாள். அப்போது ஒரு அதிசயம் அந்த மரத்தின் பொந்துக்குள் இருந்து ஒரு நல்ல பாம்பு வெளிப்பட்டு அந்த பாலைக் குடிக்கத் தொடங்கியது. அவள் அதைப் பார்த்து பூரித்துப் போனாள்.

"சாமி என் விரதம் வீண் போகலை... விரதமிருந்து நான் கொண்டு வந்த பாலை நீ ஏத்துகிட்டே" என்று வாய்விட்டு பிரார்த்தனை செய்தாள். அந்த நல்ல பாம்பும் திரும்ப பொந்துக்குள் சென்று விட்டது.

டாக்டர் க்ளாட் அந்த காட்சியில் தன்னை மறந்து விட்டிருந்தார்.

"என்ன டாக்டர் இந்த சீனை படம் எடுக்கலையா?" என்று கேட்டான்.

"ஐ வாஸ் ஸ்டன்னுடு. எனக்கு எடுக்கணும்னு தோணல மணி.. திஸ் ஈஸ் ஒண்டர்.. நான் பாம்பு பால் குடிக்காதுன்னு நினைச்சு கிட்டிருந்தேன்." என்றார் க்ளாட்.

"எங்க ஊர்ல நல்லாவே குடிக்கும். இதுக்குன்னே ஒரு நாளையே ஒதுக்கியிருக்காங்க. ஆடி வெள்ளி தை வெள்ளின்னு வெள்ளிக்கிழமையா போய் பாம்புப் புத்துக்கு பால் விட்டு புத்தையே கரைச்சிடுவாங்க." என்று அப்பொழுதும் கிண்டலாகத் தான் பேசினான்.

அதைக் கேட்ட ஒரு பெண் "யப்பா.. நீ எதைப் பேசினாலும் இந்த மரத்து நிழலை விட்டுப் போய் நின்னு பேசு. இங்க நின்னு பேசாதே..." என்றாள்.

"ஏன்... மரம் கேட்டுட்டு என்னை சாச்சுடுமா?" - என்று மணியும் விடாமல் திருப்பிக் கேட்டான்.

"அது தான் உன் தலை எழுத்துன்னா என்னால மாத்த முடியுமா?"

"கொஞ்சம் வாயை மூடிகிட்டு சும்மா இருக்கியா விட்டா சின்னப் புள்ளைங்கள மிரட்டற மாதிரி சாமி கண்ணைக்

குத்திடும், பல்லப் பிடுங்கிடும்னு கூட சொல்லுவே போல இருக்கே..." என்றான் மணி. அந்த பெண் ஒரு பெருமூச்சுடன் விலகிக் கொண்டாள்.

ஆனால் மணியோ "எனக்கு என்ன நடக்குதுன்னு நானும் பாக்க்றேன்" என்று திமிறாகவே பேசிக் கொண்டு போனான்.

டாக்டர் க்ளாட்டுக்கும் அவன் பேசுவது பிடிக்கவில்லை. பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்திருக்கும் தனக்கு இருக்கும் நம்பிக்கை கூட பக்கத்திலேயே இருப்பவர்களில் சிலருக்கு இல்லாமல் இருப்பது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

எதையும் எங்கே இருந்து எப்படிப் பார்க்கிறோம் என்பதில் தான் உண்மைகள் கூட புலப்படுமோ என்னவோ?

"என்ன டாக்டர்.. நீங்க இங்க இந்த மரத்துக்கு கீழே நின்னு எதுவும் வேண்டிக்கலையா?" என்று கேட்டான் மணி.

"அஃப்கோர்ஸ் நான் வந்த காரியம் நல்ல விதமா நடந்து முடியணும். க்ளோபல் வார்மிங் அதனால உலகத்துல ஏற்படப் போற பாதிப்புகளுக்கு இந்த ஊருக்குள்ளே விடை இருந்தா அது எனக்கு தெரியணும்"

- என்று மிகச் சரியாக தன் பிரார்த்தனையை அந்த மரத்தின் கீழ் நின்ற நிலையில் வாக்குமூலம் போலக் கொடுத்து வேண்டிக் கொண்டார் டாக்டர்.

"சரிங்க டாக்டர் நாம இப்ப அடுத்து மேல சிவன் மலைக்கு போறோம். போய்ட்டு வேகமா திரும்பி வந்தா நான் ராத்திரி கோவில்ல சித்தர்கள் செய்யப்போற அந்த ரகசிய பூஜையை என்னன்னு பாக்க முடியும்..." என்று அவருக்குள் ஞாபகமும் மூட்டி விட்டான்.

டாக்ர் க்ளாட்டும் வேகமானார்!

அந்த ஜீப் அங்கிருந்தும் புறப்பட்டது.

மணி அவரது வாயைப் பிடுங்கிக் கொண்டேதான் வந்தான்.

"டாக்டர்... உங்க நாட்டு கிராமங்களுக்கும் எங்க நாட்டு கிராமங்களுக்கும் நிறையவே வித்யாசம் உண்டு. நான் நிறைய சினிமாக்கள்ள உங்க நாட்டை பாத்துருக்கேன். உங்களைப்போல அவ்வளவு சுத்தமா, யாராலையும் இருக்க முடியாது. பாத்தி எல்லாம் கூட செதுக்கினமாதிரி இருக்கும். வயல்ல தண்ணி பாச்சறதுல இருந்து அறுவடை பண்றது வரை எல்லா விஷயத்துலயும் நீங்க ரொம்பவே முன்னேறிட்டீங்க.

ஆனா இங்க இன்னும் காளை மாடும், கலப்பையும் போகவே இல்லை பாருங்க."



"ஊர் சுத்தமா இருக்கறது ஒரு நல்ல விஷயம் தான் மணி. ஆனா அதுக்கு காரணம் இருக்கு. எங்க ஊர்ல இந்த அளவு ஜனத்தொகை கிடையாது. ஒரு கிராமம்னா ஐம்பது குடும்பம் இருந்தா அதிகம். ஆனா இங்க பல ஆயிரம் பேர் இருக்கீங்க. சந்தோஷமா ஒத்துமையாவும் இருக்கீங்க. எங்க நாட்டுல வயசாயிட்டாலே மதிப்பு போயிடும். தனியா ஒதுங்கி அமைதியா வாழ வேண்டியிருக்கும். ஆனா இங்க பேரன் பேத்தின்னு பாட்டி தாத்தா சந்தோஷமா பொழுதை கழிக்கறாங்க. பெரியவங்க சொன்னா பெருமாள் சொன்ன மாதிரின்னு நிறைய மதிக்கவும் செய்யறீங்க."

"உங்களுக்கு எங்க அழுக்கு ஊர் ரொம்ப பிடிச்சு போச்சுன்னு எனக்கு நல்லா தெரியுது. பேசாம நான் உங்க நாட்டுக்கு போயிட்றேன் நீங்க இங்க தங்கிடுங்க" என்று கூறி சிரித்தான் மணி.

அந்த ஜீப் மலைப் பாதையில் பிரவேசித்திருந்தது.

ஜிலுஜிலு காற்று தலையில் வகிடெடுத்தது.

"உங்க ஊர்ல மலைன்னாலே ஒரே பனிக்கட்டியா தான் இருக்கும் இல்ல..?" என்று திரும்பவும் தொடங்கினான் மணி.

"ஆமாம்... அதனாலேயே எங்க ஊர் மலைகள்ள உங்க ஊர்ல விளையற மாதிரி மூலிகைகளே வளர்றது இல்ல.. மூலிகைன்னா அது இந்தியாவுல மட்டும் தான்.."

"என்ன டாக்டர் சார் நீங்க.. இங்க இருக்கற வேப்ப மரத்தை எடுத்துகிட்டு போய் உங்க ஊர்ல நட்டு வளர்த்து அந்த மரமே உங்க நாட்டுக்கு சொந்தம்கற மாதிரி ரைட்ஸ் எல்லாம் வாங்கப் பார்த்தீங்கன்னு கேள்விப்பட்டேன்... அதே போல மூலிகை களையும் கொண்டு போய் உங்க ஊர்ல நட்டு வெச்சா வளர்ந்துட்டு போகுது..."

- அவன் பேசியதைக் கேட்டு சிரித்தார் க்ளாட்.

"எதுக்கு இப்படி எளக்காரமா சிரிக்கறீங்க?"

"வேற என்ன செய்யட்டும்... பூகோளவியல் தெரியாம நீ பேசறே..."

"அது என்ன பூகோளவியல் எனக்கு புரியலையே..."

"எல்லா தாவரங்களும் எல்லா இடத்துலயும் வளர்ந்துடாது. குளிர் அடிக்கற மலைல வளர்ற காப்பிக் கொட்டை தரைல வளருமா?"

"அப்ப எங்க ஊர் மூலிகைகள் உங்க மண்ணுல வளராதா?"

"எல்ல மூலிகையும் வளராது... ஏதோ சில மூலிகைகள் வளரலாம். பூமியோட மையப்பகுதியில இருக்கற ஒரு நாடு தான்

இந்தியா. மூணு பக்கம் தண்ணீர் ஒரு பக்கம் ஓங்கி உயர்ந்த இமய மலைன்னு ஒரு அதிசயமான பூமி இது. இந்த நாட்டுல வற்றாத நதியும் இருக்கு, பாலைவனமும் இருக்கு. ஓங்கி உயர்ந்த மலைகளும் இருக்கு, கடலும் இருக்கு, ஆறு, அருவின்னு எல்லாமே இருக்கு. அவ்வளவு ஏன்.. இரவும் பகலும் 12 மணி நேரம் 12 மணி நேரம்னு சமமா இங்கதான் பிரிஞ்சு இருக்கு. அதனால வெப்பம், நிழல், இரண்டுமே சமச்சீரா தாவரங்களுக்கு கிடைக்குது.

குறிப்பா இப்ப நாம பயணம் செய்துகிட்டிருக்கற இந்த பொதிகைமலை இந்திய நாட்டோட அடிப்பாகத்துல மூணு பக்கமும் கடலால சூழப்பட்ட கன்னியாகுமரி திருநெல்வேலிங்கற ஊர்களுக்குள்ள இருக்கு. இந்த மலை மேல வந்து மோதற காத்துல கடல் காத்து தான் அதிகம். கடல் காற்றுல ஜீவ வாயுக்கள் அதிகம் இருக்கும். பூமியின் மேலே வெகுதூரம் பரவி வந்து வீசற காத்துக்குள்ள பூமியோட நச்சுப்புகை, உஷ்ணம்னு பல விஷயங்கள் இருக்கும். இந்த மலையை பொருத்தவரை இதுக்கு கிடைக்கற காற்று சுத்தமானதாக இருக்கு. இந்த மலைத் தாவரங்கள் இரவு நேரத்தில் வெளிப்படுத்தும் வாயுக்களோட சேர்ந்து இதுதான் ஊருக்குள்ள வீசுது. அதனால தான் இந்த மலைல அபூர்வமான மூலிகைகள் நிறைய வளருது. சுருக்கமா சொன்னா இந்த க்ளைமேட் மற்ற நாடுகள்ள கிடைக்காது. எங்க நாட்டுப்பக்கம் அளவுக்கதிகமான குளிர், வளைகுடா நாடுகள் பக்கமோ அளவுக்கதிகமான வெப்பம் இப்படி ஒரு சமச்சீர் இல்லாத நிலைல தான் நாங்க இருக்கோம். இங்க சமச்சீர் இருக்கறதால தான் துளசில இருந்து மிளகுல இருந்து குங்குமப்பூ வரை எல்லாமே விளையுது.

குங்குமப்பூவை இந்தியா தவிர வேற நாட்டுல நினைச்சு கூட பார்க்க முடியாது.. எங்கையாவது பயிர் பண்ணா சொல் - எனக்கு தெரிஞ்சு இல்லை.."

- க்ளாட் இந்திய மண் பற்றி தான் அறிந்த தகவல்களை போட்டுத் தாக்கியதில் மணி வெலவெலத்துப் போய் விட்டிருந்தான்.

அவனே அறிந்திராத நிஜங்கள் - அவை!

அவன் என்ன... இந்த மண்ணிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் எத்தனை பேருக்கு இந்த விஷயங்கள் தெரியும்?

"டாக்டர் நீங்க எங்க நாட்டை பத்தி கரைச்சு குடிச்சிட்டு தான் வந்திருக்கீங்கன்னு நல்லா தெரியுது. நீங்க சொல்ற எல்லா வளமும் இருந்தும் நாங்க கடன்கார நாடாதானே இருக்கோம்.. ஒரு மின்சாரமோ, ரேடியாவோ, இல்லை ஒரு சைக்கிள் வண்டியை



கூட நாங்க கண்டு பிடிக்கலையே டாக்டர்.." என்று அப்போதும் வருத்தப்பட்டான்.

"எங்களுக்கு அதெல்லாம் கட்டாயம் தேவைப்பட்டது. அதனால அதை கண்டுபிடிச்சோம். எங்களுக்கு வேற வேலையும் இல்லையே..? இங்க ராமாயணம், பாரதம் அப்படின்னு இலக்கியம் இருக்கு, புராணம் இருக்கு. டான்ஸ், பாட்டு, கூத்து, நாடகம்னு எவ்வளவோ. இருக்கு. இதுல எல்லாம் நாங்க ரொம்ப ரொம்ப ட்ரை..! குறிப்பா உங்க சங்கீத சாஸ்த்ரத்துல சரிகமபதநின்னு ஏழு சுரம் இருக்கே.. அப்படி எல்லாம் எங்க சங்கீதத்துல நாங்க பெரிய ரிசர்ச் பண்ணி எந்த ராகத்தையும் கண்டு பிடிக்கலை... உங்க பரத நாட்டியம் ஒண்ணு போதுமே டான்ஸோட ஆழத்துக்கு.. எங்க டான்செல்லாம் ஒரு ஐநூறு வருஷ சரக்கு - அவ்வளவுதான்.

இங்க டான்சுக்கு ஒரு கடவுள், படிப்புக்கு ஒரு கடவுள், லாங்வேஜிக்கு ஒரு கடவுள், ஃபிலாசஃபிக்கு ஒரு கடவுள்னு எவ்வளவு பேர்...?

நான் இதை பெரிய ஒண்டரா பாக்கறேன்.

லாங்வேஜ், ஆர்ட், ஃபிலாசபி, ஜாக்ரபின்னு எல்லாத்துலயுமே இங்க எல்லாருமே மாஸ்டர்களா இருந்துருக்காங்க. இது எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா? ஒரு மொழி அதுக்கு எழுத்துன்னு ஒரு விஷயம் உருவாகுறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?

இப்ப இந்த உலகத்துல எது எதை எல்லாமோ கண்டு பிடிச்சிருக்கோம்.. சந்திரனுக்கும் செவ்வாய் கிரகத்துக்குமே கூட போயிட்டோம். ஆனா புதுசா ஒரு எழுத்தோ இல்லை சொல்லோ உருவாகியிருக்கா? முயற்சி செய்தாலும் அது சாத்யம் இல்லை. ஏன்னா அதுக்கு அவசியம் இல்லாதபடி நிறைய பாஷைகள், நிறைய எழுத்துக்கள் நம்மகிட்ட இருக்கு. அதுல நூத்துக்கு எண்பது சதவிகிதம் இந்தியாவுல மட்டுமே இருக்கு.

எங்க அமெரிக்காவும் கனடாவும் உங்க இந்தியாவைப் போல 20 மடங்கு பெரிய நாடுகள்... ஆனால் எங்க நாட்டுல இங்கிலீஷ், ஸ்பானிஷ், ஜெர்மன்னு விரல் விட்டு எண்ணுகிற அளவுக்கு தான் மொழிகள். ஆனா நான் இந்த சித்தன் குறிச்சில கோவிலுக்கு போன இடத்துல தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தின்னு அஞ்சு மொழி பேசற ஜனங்களைப் பார்த்தேன். ஒரு சிறு கிராமத்துல சிறு கோவில்ல எவ்வளவு மொழிகள்!

பல நூறு வருஷத்துக்கு முந்தியே எழுத கத்துக்கிட்டு அதை வரும் காலமும் தெரிஞ்சுக்கற எண்ணத்துல கல்வெட்டுல

எழுத்தை பொறிச்சு வெக்கறதுங்கறதெல்லாம் எவ்வளவு பெரிய நாகரீகம் தெரியுமா?

இப்படி கல்வெட்டுக்கள்ள தகவல்களை ரோம் நகரத்துல கூட நான் பெரிய அளவுல பாக்கல..."

- டாக்டர் க்ளாட் பொங்கி வழிந்து கொண்டே போனார். கிட்டதட்ட சிவன் மலையும் நெருங்கி விட்டது!

# 5

**இந்த உலகில் மலைகள் எப்போதுமே சக்திக் கோட்டைகளாக திகழ்பவை. மலையில் வசிக்கும் ஒருவனுக்கு இருக்கும் உலகப் பார்வையே வேறு... சமதளத்தில் வசிப்பவர்களால் சில நூறு மீட்டர் தூரத்தை கூட துல்லியமாக பார்க்க முடியாது. ஆனால் மலைவாசிக்கோ பல மைல் தொலைவு கூட பார்க்க முடிந்ததாக இருக்கும். அதே போலவே மலைவாசியின் சுவாசத்துக்கும் சமதளத்தில் வசிப்பவர்களின் சுவாசத்திற்கும் மிகுந்த வித்யாசம் இருக்கும். மலையில் வசிப்பவர்கள் ஆழ்ந்தும் திடமாகவும் அடிவயிறு வரை காற்று பரவும்படி சுவாசிப்பவர்களாக சிறு வயது முதலே பழகியிருப்பார்கள். ஆனால் சமதளவாசிகளுக்கு அவ்வாறு இல்லை. மலைவாசிகளை தூசு துப்புகள் பெரிய அளவில் பாதிக்காது. தூசு படிந்து கிடக்கவும், பரவித்திரியவும் சமதளம் தான் வசதியானது. மலைத்தலம் என்பது சரிவுகளை பள்ளங்களை உடையதாக இருப்பதால் தூசு துப்புகளே பெரிய அளவில் உருவாகிடாது!**

**இதனாலேயே மனதை கட்டுப்படுத்தி ஆரோக்யமாக வாழ விரும்பிய சித்த புருஷர்கள் மலைத் தலங்களை தங்களுக்கு ஏற்ற இடமாக கருதினார்கள்.**



சிவன் மலை வந்து விட்டது!

சிவன் மலை உங்களை வரவேற்கிறது' எனும் அறிவிப்புப் பலகையும் கண்ணில் பட்டது. அடர்வான மரங்கள் வெளிச்சத்தை விட இருளின் அல்லது நிழலின் ஆதிக்கம் அதிகம் இருந்தது. குறிப்பிட்ட இடத்தோடு தார்ச்சாலை முடிந்தும் போனது. அப்போதே மணி கிட்டத்தட்ட நான்காகி விட்டது.

மணியும், டாக்டர் க்ளாட்டும் ஜீப்பை ஓரம் கட்டிவிட்டு இறங்கினர்.

மணி லொடலொடக்க ஆரம்பித்தான்.

"டாக்டர் இது ஒரு வினோதமான மலை. இங்க காட்டுக்குள்ள ஒரு கோவில் இருக்கு. ஆகாசலிங்க கோவில்னு பேர். மண்டபம், கோபுரம், மதில்சுவர்னு கீழே நாம பார்த்த எந்த விஷயமும் கிடையாது. ஒரு சின்ன குன்றோட உச்சியில ஆகாயத்தை பார்த்துகிட்டு ஒரு லிங்கம் இருக்கு. அதுதான் ஆகாசலிங்கம். ஆனா அந்த லிங்கத்துகிட்ட போறதுக்குள்ள நாக்கு தள்ளிடும். வழில ஒரு காட்டாறு இருக்கு. அப்புறமா மதி மயக்கி வனம் இருக்கு, இது போக தில்லை மரச் சாரல் வேற... அவ்வளவையும் கடக்கணும்."

"நீ சொல்லும் போதே ரொம்ப இண்ட்ரஸ்ட்டா இருக்கு மணி எனக்கு... காட்டாறு சரி... அது என்ன மதிமயக்கி வனம்?"

"யாருக்கு தெரியும்... அதுக்குள்ள போனாலே மனசு மயங்கி நம்மளையே நாம மறந்துடுவோமாம்..."

"தில்லை மரச் சாரல்னு சொன்னியே... அது?"

"தில்லை நடராஜன்னு இங்க சிவபெருமானுக்கு ஒரு பேர் உண்டு. அதாவது சாமி ஆடற கோலத்துல காட்சி தருவார். அந்த தில்லை மரங்களும் அப்படி இருக்குமாம்... தில்லை மரப் பூவுக்குள்ள இருக்கற மகரந்தங்கள் காத்துல மிதந்து கிட்டே இருக்கும். அதை முகர்ந்தாலே தூக்கம் வந்துடும். அப்படியே தில்லை மரத்துக்கு கீழே சோறு தண்ணியில்லாம தூங்கிகிட்டே இருக்க வேண்டியது தான்..."

"வாவ் வாட் எ மிராகிள்... அந்த மதிமயக்கி வனம், அந்த தில்லை மரம் இதை எல்லாம் நாம இப்ப பாக்கறோம்... இது எனக்கு ஒரு வொண்டர்ஃபுல் சான்ஸ்..."

- டாக்டர் க்ளாட் மிகுந்த உற்சாகத்துக்கு மாறினார். மணிக்கோ தூக்கி வாரிப்போட்டது.

"டாக்டர் அதெல்லாம் இன்னிக்கு சாத்யம் இல்லை. நான் சும்மா உங்களுக்கு இந்த மலையை காட்டத்தான் வந்தேன். நாம

இப்பவே புறப்பட்டா தான் கீழே போய் இன்னிக்கு ரசமணீஸ்வரர் கோவில்ல நடக்கப் போற சித்தர்கள் பூஜையை பார்க்க முடியும்"

"ஓ... என்ன மணி இப்படி சொல்றே? இவ்வளவு தூரம் நாம வந்ததுக்கு ஒரு சித்தரையாவது பாக்க முடியுமா?"

"அவங்கள அப்படி எல்லாம் பார்க்க முடியாது டாக்டர். நமக்கு பக்கத்துலயே இருப்பாங்க. ஆனா நாம கவனிக்க மாட்டோம். இந்த மாதிரி எல்லாம் போக்கு காட்ட... அவங்களுக்கு தெரியும்னு சொல்வாங்க. ஆனா நான் சித்தர்களைப் பத்தி வெச்சுகிட்டிருக்கற கருத்தே வேற..."

"சாரி... உன் கருத்து எனக்கு தேவையில்லை. அப்படியே நீ சொன்னாலும் தப்பாதான் சொல்வே..."

"ரொம்ப சரி டாக்டர்... நீங்க இப்ப என்னையும் நல்லாவே புரிஞ்சுக்கத் தொடங்கிட்டீங்க... வேலை வெட்டிக்கு போக துப்பில்லாதவங்கதான் தாடி மீசை வளர்த்துகிட்டு சித்தர்னு சொல்லி சுகம் கண்டுட்றாங்க."

"நான் தான் கேக்கலையே... எதுக்கு கருத்து சொல்றே?"

- கோபித்தபடியே க்ளாட் வனப்பகுதிக்குள் நடக்கத் தொடங்கினார்.

"ஐயோ டாக்டர் இப்பவே மணி நாலுக்கு மேல ஆயிடிச்சு. இங்க அஞ்சு மணிக்கெல்லாம் இருட்டிடும். நடுக்காட்டுல மாட்டிகிட்டா அவ்வளவுதான். அதுலயும் சிவன் மலைக்காடு சரியான மர்மதேசம்..."

"ஓ.கே. நான் இப்ப உன் கூட வரேன்! இன்னிக்கு ராத்திரி நாம கோவிலுக்குள்ள ஒளிஞ்சுகிட்டு அங்க நடக்கப்போற பூஜையை பார்த்துட்டு நாளைக்கு காலையலயே நாம சிவன் மலையான இங்க வந்துட்றோம். சரியா?"

"அதை நாளைக்கு காலைல பேசிக்கலாம். நீங்க புறப்படுங்க."

அவரை இழுத்துக் கொண்டு திரும்ப ஜீப் நோக்கி நடந்தான். அப்போது பதினோறு பேர் கொண்ட ஒரு காவிக்கூட்டம் எதிரில் பஜனை செய்தபடியே வந்து கொண்டிருந்தது.

அவர்கள் கைகளில் எல்லாம் தீப்பந்தங்கள் அப்போதே எரிந்து கொண்டிருந்தது.

"மணி இவங்கல்லாம்..."

"ஆகாசலிங்கம் கோவிலுக்கு போற சில பக்தர்கள். பாத்தீங்களா இப்பவே தீப்பந்தத்தோட வந்துட்டாங்க எல்லார் இடுப்புலயும் சின்னதா குடையும் தொங்கிகிட்டு இருக்கு பாருங்க. எப்ப வேணா மழையும் வரும்..."



"இவங்களோட நாம போய்ட்டு வர முடியாதா?"

"இவங்களே நடுராத்திரிக்கு தான் கோவிலுக்கு போய் சேருவாங்க... அந்த சாமியை தனியால்லாம் போய் கும்புட்டுட்டு வர முடியாது. நான் முன்பே சொன்ன மாதிரி தனியா போகும் போது மதிமயக்கி வனத்துல நாம நம்ம மனசுக்குள்ள மயங்கி நம்மையே மறந்துட வாய்ப்பு அதிகம். கூட்டமா வரும் போது நமச்சிவாய மந்திரத்தை பலமா சொல்லிகிட்டே வனத்தை தாண்டிடுவாங்க... அது மட்டும் இல்ல இவங்க ஒரு மண்டல காலம் விரதம் இருந்து வர்றாங்க.

விரதம் இல்லாமல்லாம் போக முடியாது..."

மணி விளக்கமளித்து முடிப்பதற்குள் அவர்கள் நெடுந்தூரம் காட்டுக்குள் போய்விட்டனர்.

டாக்டர் க்ளாட்டுக்கு ஒரு புறம் ஏக்கமாக கூட இருந்தது! அரை மனதாய் ஜீப்பில் ஏறிக் கொண்டார். ஜீப்பும் புறப்பட்டது!

**ம**ணி எட்டு!

அர்த்த ஜாம பூஜையை தொடங்கி விட்டார் கோவில் குருக்கள்! பௌர்ணமி இரவு என்பதால் நிறைய கூட்டம். கோவில் காவலாளி முத்தப்பனும், மத்தளம் கொட்டும் மாரியப்பனும் தயாராக இருந்தனர். இரவு சித்தர்கள் வந்து பூஜை செய்வதற்கு ஏதுவாக பால் தேன் சந்தனம் இளநீர் என்று ஏராளமான அபிஷேக பொருட்கள் ஒருபுறம் குவிந்திருந்தன.

சித்தர்கள் அவைகளை பயன்படுத்தி அபிஷேகம் செய்து பூஜையையும் முடித்து விடுவார்கள். அவர்கள் பூஜைக்கு உதவிய திருப்தி மட்டும் நமக்கு... அந்த பிரசாத பொருட்களை தருவதில் கூட பெரும் போட்டி... இதனால் ஒரு முறை அபிஷேகத்துக்கு தந்தவர்கள் அடுத்த முறை தரக்கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடுகள் தோன்றியிருந்தன.

ஊர் பெரியவர் ராமலிங்கமும் பூஜைக்கு வந்து சேர்ந்தார். பஞ்சதீபம் போட்டு அபிஷேகத்தை நிறைவு செய்து இறுதியாக மகாதீபாராதனையை காட்டி முடித்தார் குருக்கள்.

மாரியப்பன் மத்தளம் கொட்டத் தயாரானான்.

மகாதீபாராதனைத் தட்டோடு குருக்கள் கோவிலை பிரகாரத்தில் சுற்றி வந்து வலம் வரத் தொடங்கினார். காவல்கார முத்தப்பன் தீப்பந்தமுடன் மண்டப பகுதியை பார்த்துக்

கொண்டே வந்தான். தப்பித்தவறி மண்டபத்தில் யாராவது தங்கியிருந்தாலும் சப்தம் கேட்டு எழுந்து சென்று விட வேண்டும். அதற்கு தான் இந்த ஏற்பாடு. "அந்த கூட்டத்தில் குருக்களை ஒட்டியே மணியும், டாக்டர் க்ளாட்டும் நடந்து கொண்டிருந்தனர். க்ளாட் கழுத்தில் கேமரா தொங்கிக் கொண்டிருக்க தோளில் ஒரு மினி சைஸ் வீடியோ கேமரா! இது போக இரவில் நடப்பதை பார்ப்பதற்கு தோதாக மினி டார்ச் லைட், பாக்கெட் ரிக்கார்டர் நெட் இணைப்பு கொண்ட செல்போன் என்று தயாராகவே இருந்தார் டாக்டர் க்ளாட்.

முதல் சுற்று முடிவில் மணி யாரும் அறியாதபடி சுற்றுப் பிரகாரத்தில் ஒரு தூணுடைய பின்னால் சென்று ஒளிந்து கொண்டான். டாக்டர் க்ளாட்டும் அவன் போனதைப் பார்த்து அவரும் பூனை போல கூட்டத்தை விட்டு ஒதுங்கி ஒரு தூணின் பின்னால் போய் தன் உடம்பை ஒளித்துக் கொண்டார்.

இப்படி எல்லாம் நடந்து கொள்வது என்பது அற்பமான ஒரு செயல்! க்ளாட்டுக்கு அது தெரிந்திருந்தும் ஆர்வத்துடிப்பு அந்தச் செயலை தூண்டி விட்டது.

தான் கண்டறியப் போவது ஒரு பெரிய உண்மையை..

அந்த உண்மை இந்த உலகத்தில் பல பாகங்களைக் காப்பாற்றப் போகிறது. எனவே இதில் தவறு ஏதும் இல்லை என்று தனக்குத் தானே சமாதானம் கூறிக் கொண்டார்.

குருக்களும் அர்த்த ஜாம பூஜையை நிறைவு செய்து கொண்டு பள்ளியறை பூஜையையும் முடித்து கதவை தாழிட்டவராக கோவில் கதவைச் சாத்தவும் தயாரானார். காவல்கார முத்தப்பனும் மாரியப்பனும் கோவிலின் பெரிய கோபுர வாசல் கதவுகளை ஆளுக்கொரு பக்கமாக நின்று சாற்றிப் பூட்டத் தயாராயினர். கூட்டமும் சிவசிவா என்றபடி கலைந்தது. சிலர் காலை நடை திறக்கும் போது சித்தர்கள் செய்த பூஜையை பார்ப்பதற்கு தோதாக வெளியே கோவிலை ஒட்டியே படுத்து விட்டனர்.

உள்ளே டாக்டருக்கு வியர்க்கத் தொடங்கியிருந்தது.

மணி நெருங்கி வந்தவனாக 'டாக்டர் கேம்ரால்லாம் தயார் தானே?' என்று கேட்டான்.

அப்படியே எங்க வரைல கேமரா தான் இப்ப இந்த நாட்டுலையே பெரிய வில்லன். ஒரு சாமியாரோட பெட்ரூம்ல கேமராவை வெச்சு அவரோட பித்தலாட்டத்தை டிவில காட்டி சந்தி சிரிக்க வெச்சுட்டாங்க..' என்று அந்த வேளையிலும் வம்பு பேசினான். அப்போது தான் டாக்டரும் எதற்கும் ஒரு ஃப்ளாஷ்



தட்டிப் பார்ப்போம் என்று தட்டினார். ஆனால் ஒளி வரவில்லை!

"ஓ மை காட்.."

"என்னாச்சு டாக்டர்.."

"ஃப்ளாஷ் வரமாட்டேங்குது. ஐ திங்க் பேட்டரி டவுன்.."

"போச்சு.. கதவை அடைக்கப் போறாங்க. சப்தம் கேக்க ஆரம்பிச்சிடிச்சு பாருங்க.."

"இப்ப என்ன பண்ணலாம்.. நீ போய் காருக்குள்ள என் பேக்ல இருந்து இன்னொரு கேமராவை எடுத்துகிட்டு வந்துட்றியா?"

"என்ன டாக்டர் நீங்க.. எங்க ஊர் ஆளுங்க மாதிரியே கடைசி நேரத்துல கந்தல் ஆக்கறீங்களே.."

"வேண்டாம்... நீ இரு... நான் போய்ட்டு வேகமாக வந்துட்றேன். ஜஸ்ட் டூ மினிட்ஸ்.."

-டாக்டர் தூணை விட்டு விலகி வெளியேறத் தொடங்கினார்.

"டாக்டர் வந்துடுங்க. உங்களை நம்பித்தான் நான் ரிஸ்க் எடுக்கறேன்.."

- அவன் கத்துவது வெளிவரை கேட்டது. உள்ளிருந்து வந்த டாக்டரை முத்தப்பனும் பார்த்தான்.

"ஏ வெள்ளக்காரா.. உள்ளியா இருந்தே நீ - என் கண்ணுல படவே இல்லையே?"

"ஐ ஆம் சாரி... நான் என்னை மறந்து தியானத்துல இருந்துட்டேன்.." - டாக்டர் சமாளிக்க, 'சரி சரி போங்க' என்றபடியே கதவை சாத்தத் தொடங்கினான்.

'வெய்ட் வெய்ட்...' - டாக்டர் பதறினார்.

"வெய்ட்டாவது கியட்டாவது... வெள்ளக்காரா இருந்தாலும் நாம பேசறது நல்ல புரியுது. நாங்க இங்கிலீசுக்கு மாறிகிட்டு வரோம். நீங்க எங்கள மாதிரி மாறிகிட்டே வரீங்க" என்று தனக்கான ஒரு பொதுக் கருத்துடன் கதவையும் பூட்டி கொண்டியையும் மாட்டி சாப்பாட்டு தட்டு சைஸ்க்கான பூட்டையும் போட்டு பூட்டி முடித்தான்.

டாக்டர் உள்ளுக்குள் பதறிப் போனார்.

சோர்ந்து போய் ஜீப்பில் ஏறிக் கொண்டு மைகாட்.. மைகாட்..' என்று கைகளை பிசைந்து கொள்ளத் தொடங்கினார். அப்போது அவர் செல்போனுக்கு அழைப்பு.

"டாக்டர் என்னை மாட்டி விட்டுட்டு நீங்க மட்டும் தப்பிச்சுட்டீங்கல்ல...?"

"சாரி மணி வெரி சாரி.. நான் என்ன பண்ணட்டும் அந்த ஆள் டோரை மூடி பூட்டும் போட்டுட்டான்."

"அப்ப தனியானா நான் இங்க இருந்து திணறவா?"

"அப்படி ஏன் நினைக்கறே - ஒரு உண்மையை தெரிஞ்சுக்கற ஒரு பெரிய ஆப்பர்ச்சூனிட்டி உனக்கு தான் கிடைச்சிருக்குன்னு நினைச்சுக்கோ.."

"டாக்டர் எனக்கு எதாவது ஆனா என்ன பண்ணுவீங்க?"

"எதுவும் ஆகாது.. எனக்கு இருக்கற நம்பிக்கை, பக்தி கூட உன்கிட்ட கிடையாது. ஏன் அநாவசியமா பயப்பட்றே.."

"இல்ல... இப்பவே நீங்க எனக்கு பேசினதைப் போல இன்னொரு மடங்கு தரேன்னு சொல்லுங்க. இல்லாட்டி நான் கதவை தட்டி உள்ள மாட்டிகிட்டேன்னு ரகளை பண்ணி வெளிய வந்துடுவேன்."

"ஸ்டுப்பிட்... இன்னொரு மடங்கு என்ன இன்னொரு மடங்கு நீ உள்ள இருந்து என்ன நடக்குதுன்னு மட்டும் கவனிச்சு போன் பண்ணிகிட்டே இரு. உனக்கு நான் பேசினதப் போல பத்து மடங்கு பணம் தரேன்."

"வார்த்தை மாற மாட்டீங்களே..?"

"நான் இப்ப சொன்னதை அப்படியே ரெக்கார்ட் பண்ணிக்கோ இதைவிட நான் என்ன சொல்ல முடியும்?"

"இது போதும் டாக்டர் எனக்கு... இது போதும்... கோவிலுக்குள்ள எந்த சித்தர் சாமி எது வழியா வருதுன்னு நானும் பாத்துட்றேன். ஏன் சாமி நேர் வழியா வராம இப்படி கள்ளத்தனமா வரீங்கன்னும் அதுங்ககிட்டயே கேட்கறேன்.

பூஜைன்னா எல்லாரும் பாக்க செய்ய வேண்டியது தானே? அதுல என்ன ரகசிய பூஜை..? அதான் உங்களுக்குன்னே நீங்க கும்புட்றதுக்குன்னே காட்டுல ஆகாசலிங்கம்னு ஒண்ணு இருக்குதே அதை கும்பிட்டா அந்த சாமி ஆசிர்வாதம் பண்ணாதா..? இல்ல அந்த சாமி வேற - இந்த சாமி வேறையா? ஒரு சாமி தான் இந்த உலகத்தை படைச்சதுன்னு சொல்லும் போது பல சாமிங்க எப்படி வந்துச்சுன்னுல்லாம் எனக்குள்ளயும் நிறைய கேள்விங்க இருக்கு." - என்று மணி ஒரு சொற்பொழிவே ஆற்றத் தொடங்கி விட்டான். டாக்டர் க்னாட் ஜீப்புக்குள்ளேயே தலையில் கை வைத்துக் கொண்டார்.

"மணி நீ ரொம்ப பேசறே.. பேசறவன் செய்ய மாட்டான்னு ஒரு வெர்ப் உண்டு.."



"அதெல்லாம் சும்மா... மணியா கொக்கா.... பாக்கத்தானே போறீங்க.."

"ப்ளீஸ்... அமைதியா இரு - நடக்கறத கவனி. சித்தர் சாமிங்க வந்தா அவங்க கிட்ட ஆர்கியூ பண்ணாதே. உண்மை எதுவோ அதை சொல். என்ன செஞ்சா இந்த குளோபல் வார்மிங்கை குறைக்கலாம்னு என் சார்பா கேள். எதனால இங்க மட்டும் தவறாம மழை பெய்யுது - அதுக்கு எது காரணம்னும் கேள். நான் இதை எல்லாம் தான் கேட்கறதா இருந்தேன்."

"அட என்ன டாக்டர் நீங்க பூஜை செஞ்சா மழை பெய்யும்னா தினம் எல்லா ஊர்லயும் மழை பெஞ்சுகிட்டேல்ல இருக்கணும்? ஊருக்கு நாலு கிறுக்கங்க சதா பூஜை புனஸ்காரம்னு இருந்து கிட்டேல்ல இருக்காங்க?

கார்த்திகை மாசம் வரும் போது வந்து பாருங்க. தெருப் பிச்சைக்காரன் கூட சபரிமலைக்கு மாலை போட்டுகிட்டு அம்மா பிச்சை போடுங்கன்னு சொன்ன வாயால சாமி சரணம்னு சொல்லுவான்."

"எகெய்ன் நீ அதிகம் பேசறே... இனி நீ பேசாதே நடக்கப் போற சம்பவம் பேசட்டும்.."

- க்னாட் அதட்டலாக பேசி போனையும் முடக்கினார். தாகமாக இருந்தது. உள்ளிருந்த மினரல் வாட்டரை எடுத்துக் குடித்தார். அப்போது வெளியே குருக்கள் தலை தெரிந்தது.

"என்ன சார் நைட் ஸ்டேயிங்கா?"

"வாட்?"

"இல்ல ராத்திரி இங்கையே தங்கப் போறீங்களான்னு கேட்டேன்."

"யெஸ்..யெஸ்.."

"உங்க கூடவே வந்தானே மணி... அவன் எங்கே?"

"மணி...?"

"ஆமாமா.. சரியான அல்டாப் அவன். எதுக்கு எடுத்தாலும் எதிர் கேள்வியா கேட்பான். பணம் மட்டும் தான் அவனுக்கு வாழ்க்கை.."

- குருக்கள் மணியை பற்றி ஒரு சிறு விளக்கம் கொடுத்தவராக புறப்பட்டுப் போனார்.

டாக்டர் க்னாட்டுக்கு திக்திக்கென்று இருந்தது.

ஜீப்புக்குள் ஏ.சியை போட்டுக் கொண்டு கண்ணாடியை ஏற்றிவிட்டுக் கொண்டார்.

அந்த இரவு நேரம் சொட்டுச் சொட்டாக கழிய ஆரம்பித்தது.

வானத்திலும் சந்திரன் பூரணமான பிரகாசத்துடன் இந்த உலகின் திகட்டாத அழகே நான்தான் என்பது போல நிலை பெற்றிருந்தது!

கெடிகாரத்தைப் பார்த்தார்.

மணி ஒன்பதைத் தொட்டுவிட்டிருந்தது!

# 6

**மலைகளின் சிறப்புக்கு அதன் வாஸ்து பலமும் ஒரு காரணம். வாஸ்துவை இன்று ஒரு மூட நம்பிக்கையாக, மிகச் சாதாரணமான ஒரு விஷயமாக பகுத்தறிவு பேசுபவர்களில் பலர் எண்ணுகின்றனர். ஆனால் வாஸ்து என்பது ஒரு மிகப்பெரிய விஷயம். வடக்கு பக்கமும் கிழக்குப் பக்கமும் கட்டியிருக்கும் வீட்டை விட அதிக இடம் இருந்து அந்த வடகிழக்கு மூலையும் வெட்டு விழாமல் சரியான அளவில் இருந்திட்ட நிலையில், அந்த வடகிழக்கு மூலையில் பூமிக்கடியில் இருந்து நீர் எடுத்து பயன்படுத்தும் அந்த வீட்டில் வசிப்பவர்கள் செல்வந்தர்களாகவும், பணப்பற்றாக் குறையே இல்லாதவர்களாகவும் இருப்பதை ஒரு ஆராய்ச்சியில் கண்டறிந்துள்ளனர். அதாவது இது போல அமைப்புள்ள 100 இடத்தில் வசிப்பவர்களில் 98 பேர் பொருளாதார சிரமம் இன்றி ஆரோக்யமாக இருப்பது ஆய்வில் தெரிய வந்தது. அதேபோல இந்த இடத்தில் மேடான திண்ணை, உயரமான மரங்கள் இருக்கப் பெற்றவர்கள் மிகுந்த சிரமத்தில் இருப்பதும் தெரிய வந்தது.**

**ஈசான்யச் சிறப்புக்கு மட்டுமே இது சாட்சி இதேபோல கன்னி மூலை, அக்னி மூலை, வாயுமூலை என்று மற்ற பாகங்களுக்கும் பலம் உண்டு. அது எப்படி இருக்க வேண்டும் என்று அமைப்பு முறைகளும் உண்டு. அதன்படி உள்ள ஒரு வீட்டில் வசிப்பவர் நிச்சயம் நல்லபடியாக இருப்பதை வாஸ்து உறுதி செய்கிறது.**



**அதிலிருந்தே திசைகளுக்கு என சக்தி இருப்பதையும் அது வீட்டுக்குள் எதிரொலித்து செயல்படுவதையும் நன்கு உணர முடிகிறது. இந்த சக்தி ஒளி, காற்றின் அழுத்தம் இந்த இரண்டை அடிப்படையாக வைத்து வேலை செய்கிறது. வீட்டுக்குள் வாஸ்து வேலை செய்வதே இந்த இரண்டின் சேர்க்கை மற்றும் அதன் அளவை வைத்துத்தான்... இது முழுக்க முழுக்க விஞ்ஞானம்!**

**இந்த விஞ்ஞானம் மலையகங்களில் வேறுவிதமாக செயல் படுகிறது. மலையகம் என்பது மிக அதிக சக்தி உடைய இடமாக இருக்கிறது. காரணம் அதன் மேடும் பள்ளமும் சரிவும் உயரமுமான நில அமைப்பே... எந்த திசையில் எந்த பாகம் எப்படி இருக்கிறது என்பதை வைத்தே அங்கே வாஸ்து சக்தி தன் வேலையை செய்கிறது.**

**இதன் வேகமான செயல்திறனோடு வேகமாக செல்ல முடிந்த உடல் மற்றும் மன அமைப்பு உள்ளவர்களாலேயே மலையகங்களில் வாழ முடியும். அதனால் தான் பலருக்கு மலையில் வாழ்வது என்பது பெரும்பாடாக உள்ளது!**

**இதற்காக மலையில் வாழ்பவர்கள் நோயே இன்றி மிகுந்த செல்வத்துடன் இருப்பார்கள் என்பது பொருளில்லை. ஆனால் மலையகத்து பலத்தை புரிந்து கொண்டால் அவ்வாறு வாழ்வது மிகவே சுலபம்!**

மணி பதினொன்று!

டாக்டர் க்ளாட்டின் செல்போன் அவரை அழைத்தது. அழைத்ததும் மணிதான்.

"என்ன மணி?"

"சார் என்னன்னு தெரியல என்னை சுத்தி ஒரே புகையா இருக்கு. இருமல் வருது... கஷ்டப்பட்டு அடக்கிகிட்டு உக்காந்து ருக்கேன். கண்ணையும் கரிக்குது. பயங்கரமா எரியுது..."

"அப்ப அந்த புகை எங்க இருந்து வருதுன்னு பார்... உள்ளுக்குள்ள சித்தர்சாமிங்க வந்துட்டாங்கன்னு தெரியுது. எந்த வழியா வந்தாங்கன்னும் பார்..."

- அவர் பேசிக் கொண்டிருக்கும் போது செல்போன்

இணைப்பும் துண்டானது. க்ளாட்டே திரும்ப தொடர்பு கொள்ள முயன்றார். ஆனால் ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது. உள்ளே ஏதோ நடந்திருக்கிறது. அதனால் தான் மணி ஸ்விட்ச் ஆஃப் செய்திருக்க வேண்டும் என்று யூகித்துக் கொண்டார் டாக்டர். க்ளாட்.

பரபரப்பு தொற்றிக் கொண்டதில் இதயமும் திமுதிமுவென குதித்தது. காட்டுக்குதிரை போலவும் ஓடியது. வெளியே எட்டிப் பார்த்தார். கோவிலுக்கு வெளியே படுத்திருந்தவர்களில் ஒருவர் கூட முழித்திருக்கவில்லை. ஆச்சரியமாக இருந்தது. கோவிலுக்குள் இருந்து புகை வந்த மாதிரியும் தெரியவில்லை. கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கினார். காற்றில் ஒரு புது வாசத்தை உணர்ந்தார். ஒரு விதமான மூலிகை வாசம்! தானிருக்கும் இடத்தைச் சுற்றி ஏதோ நடக்கிறது. அனேகமாக மூலிகைகள் எரிந்து அதன் காரணமாக இந்த வாசம் வந்திருக்கலாம் அவர் அதைப் பற்றி யோசிக்கும் போதே அவருக்கும் தூக்கம் வரத் தொடங்கியது. வாய் பிளந்து கொட்டாவி விட்டார். அப்படியே காரின் முன்புற பானட் மேல் விழுந்து தூங்க ஆரம்பித்து விட்டார்! அதுவும் அந்த மூலிகை வாசச் செயலோ என்னவோ?

**வி**டிந்து விட்டது!

தொம் தொம் என்று மத்தள சப்தம் கேட்டு கண் விழித்த டாக்டருக்கு தூக்கம் கலைந்தது. கை கெடிகாரத்தை பார்த்தார். மணி ஆறு.

கோவிலைச் சுற்றி தூங்கிப் போனவர்கள் எல்லாம் விழித்து எழுந்து கோவில் குளத்தில் குளித்து விட்டு மிகுந்த சுத்தத்தோடு தரிசனத்துக்கு தயாராகிக் கொண்டிருந்தனர். குருக்களும் வந்துவிட்டார். கதவும் திறக்கத் தயாரானது.

தென்னாட்டுடைய சிவனே போற்றி' என்று கூட்டத்தில் ஒரு குரல் ஒலித்தது. பதிலுக்கு 'என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்று கோஷமிட்டது கூட்டம்.

முத்தைய்யன் முண்டியடித்து சென்று பூட்டைத் திறந்தான். குருக்கள் கையில் மணியை பிடித்திருந்தார். அதை அசைத்தபடியே அவர் முன் செல்ல கூட்டம் அவரைப் பின் தொடர்ந்தது.

நேராக சன்னதிக்குத்தான் சென்றார் குருக்கள்.

அது திறந்தே இருந்தது. உள்ளே அலங்கரிக்கப்பட்ட கோலத்தில் ரசமணீஸ்வரர். முன்னாலே ஏராளமான அகல்



தீபங்கள். தசாங்கப் புகை வாசம் அப்படியே மிதந்து கொண்டிருக்க காணக் கிடைக்காத காட்சி. கூட்டம் சிலிர்த்துப் போனது. பலரது கண்கள் கலங்கி விட்டன.

டாக்டர் க்ளாட்டும் கூட்டத்தோடு கலந்து உள்ளே சென்றார். நாலாபுறமும் பார்த்தார். அவர் பார்வையிலும் திருச்சன்னதியின் அருட்கோலம் கண்ணில் பட்டது. ஆனாலும் அவர் மனம் எங்கே மணி என்று தான் தேடியது.

அவன் ஒளிந்த இடத்தைத் தேடி ஓடினார்.

அவனும் அதே இடத்தில் தான் படுத்திருந்தான்.

க்ளாட் வந்து எழுப்பவும் தான் எழுந்தான்.

கண்களைத் திறந்தவனுக்கு பகீர் என்றது.

பார்வை தெரியவில்லை!

"ஐய்யோ டாக்டர்... கண்ணு தெரியல டாக்டர்... ஐய்யோ எனக்கு சுத்தமா கண்ணு தெரியலையே" - என்று கத்தினான். சப்தம் அந்தப் பக்கமாக வந்த முத்தப்பன் காதில் விழுந்து அவனும் ஓடி வந்து பார்த்தான்.

க்ளாட் சுதி கலங்கி விட்டிருந்தார்.

"என்னா வெள்ளக்கார சாரு... யாருக்கு கண்ணு தெரியல... இங்க என்ன பண்றீங்க?"

'இதோ இந்த மணிக்கு தான்... நோ பராப்ளம் ஐ வில் டேக் கேர்... நீங்க போங்க...' - டாக்டர் சமாளிக்க முனைந்தார்.

'ஏ மணி நீ எங்க இங்க வந்தே? ஏன் உன் முகம் ஒரு மாதிரியா இருக்கு..' - முத்தப்பன் விடாமல் குடைந்தான்.

'முத்தப்பா எனக்கு கண்ணு தெரியல முத்தப்பா... கண்ணு தெரியல. நான் பெரிய தப்பு பண்ணிட்டேன். இந்த வெள்ளக்கார டாக்டர் கொடுக்கறேன்னு சொன்ன பணத்துக்கு ஆசைப்பட்டு நான் கோவிலுக்குள்ள ஒளிஞ்சு இப்ப குருடனாயிட்டேன்... ஐய்யோ நான் இப்ப என்ன பண்ணுவேன்?

சாமி மரத்துகிட்ட நின்னு ஏகடியமா பேசினேனே... சாமி என் கண்ணைக் குத்திப்பிடுமான்னு கேலி பண்ணேனே. இப்ப நிஜமா கண் பார்வை போயிடிச்சே...'

- மணி பொங்கி வழிந்தான். கண்களில் கண்ணீரின் அலைகள். அவன் போட்ட சப்தம் ஒரு பெரும் கூட்டத்தையே கூட்டி விட்டது.

குருக்களும் ஆரத்தித் தட்டோடு ஓடி வந்தார்.

மணியைப் பார்த்து பதட்டப்பட்டார்.

"அடப்பாவி.. இப்படியா அபச்சாரம் பண்ணுவே? எவ்வளவு சொன்னாலும் உங்களுக்கு ஏண்டா புரிய மாட்டேங்கறது.." என்று கத்தினார்.

"எல்லாம் இந்த வெள்ளைக்காரர் பண்ண வேலை. ஆராய்ச்சி பண்றேன்னு சொல்லி கடைசில நம்மான் ஒருத்தனை குருடாக்கிட்டார்.." என்று முத்தப்பனும் கோபப்பட்டான்.

"நோ.. நான் நல்ல எண்ணத்தோட தான் எல்லாம் செஞ்சேன். இந்த பூமி இப்ப ரொம்ப மோசமான ஒரு நிலையை நோக்கி போய்கிட்டு இருக்கு. 2012ல உலகம் அழிஞ்சிடும்னு ஒரு கருத்து உலகம் பூரா உருவாகியிருக்கு. அதுக்கு நிறையவே சாத்யம் இருக்குங்கறதுதான் உண்மை. அதை தடுத்து இந்த பூமியை காப்பாத்த சித்தர்கள் மாதிரியான நபர்களால தான் முடியும். அதனால தான் நான் அவங்களை தரிசனம் செய்யவும் உலகத்தை காப்பாத்த நாமும் எதாவது செய்யணும்னும் இங்க வந்தேன்.."

- என்று க்ளாட் ஒரு பெரிய விளக்கமளித்தார்.

"இந்த உலகத்தை காப்பாத்த வந்ததா சொல்லிட்டு இங்க நீங்க அதுக்கு எதிரான தப்பு பண்ணா எப்படி டாக்டர்? சித்தர்கள் பூஜையை யாரும் பார்க்கக் கூடாதுன்னு சொன்னதே அந்த பூஜையின் போது அவங்க ஹோமம் பண்ணுவாங்க. அப்ப அதுல சில மூலிகைகள் போடுவாங்க. அதுல குறிப்பிட்ட ஒரு மூலிகை எரியும் போது வரும் புகை கண் பார்வையை போக்கிடும். அவங்களே அந்த சமயத்துல கண்ணை மூடிகிட்டுதான் அந்த மூலிகையை போட்டு ஹோமம் வளர்ப்பாங்க. இதனாலதான் நடையை சாத்தி பூட்டிட்றோம்.

சித்தர்கள் காயகல்பங்களால தங்களோட உடம்பை கல்லு மாதிரி வெச்சிருக்கறவங்க. நம்ம உடம்பு உப்பு புளி காரம்னு இருக்கற உடம்பு. அதனால அவங்கள மாதிரி நாம பல விஷயங்கள சமாளிக்கவும் முடியாது.."

- குருக்கள் எல்லோருக்கும் தெரியட்டும் என்பது போல தானறிந்த ரகசியத்தை போட்டு உடைத்தார்.

"சாமி.. நான் தப்பு பண்ணிட்டேன். சித்தர்சாமிங்க கால்ல விழுந்து மன்னிப்பு கேட்டுக்கறேன். தயவு செய்து எனக்கு கண் பார்வை கிடைக்க வழி செய்யுங்க.."

- கதறினான் மணி. அவனை கை பிடித்து வெளியே அழைத்துச் சென்றனர். டாக்டர் க்ளாட் அப்போதே அவனை ஒரு நல்ல கண் டாக்டரிடம் காட்டத் தயாரானார். ஆனால் குருக்கள் தடுத்து விட்டார்.



"வேண்டாம் டாக்டர்.. இப்படி கண் போகறது ஒண்ணும் இந்த ஊருக்கு புதுசு இல்லை. பல பேருக்கு போயிருக்கு. அவங்கள்ளாம் டாக்டரையும் போய் பார்த்திருக்காங்க. டாக்டர்கள் அவங்களுக்கு எவ்வளவோ மருந்து கொடுத்தும் பிரயோஜனமில்லை. இதுக்கு மருந்தை சித்தர்களால தான் தர முடியும்.

செய்த தப்புக்காக தண்டனை அனுபவிக்கறது தான் சரி. அதே சமயம் சித்தர்கள்கிட்ட பிரார்த்தனை செய்யும் போது நிச்சயம் அவங்க வந்து மன்னிச்சு பார்வை தருவாங்க..." - என்றார் குருக்கள்.

மணியோ கதறினான்.

"ஐயோ நான் இனி குருடன்தானா.. எனக்கு எப்ப பார்வை கிடைக்கும்.." - புலம்பி அழுதான்.

டாக்டர் க்ளாட் முதல் முறையாக அழத் தொடங்கினார்.

ஆனாலும் அவருக்குள் ஒரு நம்பிக்கை.

வேகமாக கோவில் குளம் நோக்கிச் சென்றவர் அப்படியே தண்ணீருக்குள் விழுந்தார். அதே வேகத்தில் எழுந்தார். நேராக சன்னதி நோக்கி நடந்தவர் ரசமணீஸ்வரர் முன்னால் கைகளை கூப்பி வணங்கினார்.

"சாமி.. நான் உன்னை மதிக்கறேன், உன்னை வணங்கறேன் நல்ல எண்ணத்தோட தான் இந்த ஊருக்கும் வந்தேன். உலகமே இப்ப அழிவுல இருக்கு. சுனாமி, புயல், எரிமலை வெடிக்கறதுன்னு நிறைய அழிவுகள் விடாம தொடர்ச்சியா நடந்துகிட்டு வருது.

பூந்தோட்டமா வெச்சிருக்க வேண்டிய பூமியை மனுஷன் தன் சுயநலத்தாலயும், அறியாமையாலயும் குப்பை மேடா ஆக்கிகிட்டு வரான். ஒரு மனிதன் ஒரு நாளைக்கு கட்டாயமா 2 லிட்டர் தண்ணீர் குடிக்கணும்னு டாக்டர்கள் சொல்றாங்க. அதுதான் உடம்புக்கு நல்லதுங்கறதுதான் காரணம். ஆனா 2 லிட்டர் தண்ணீரை குடிக்கறானோ இல்லையோ கட்டாயமா 2 லிட்டர் பெட்ரோலை பயன்படுத்தி பூமியை உஷ்ணப்படுத்தி, புகையால காத்தைக் கெடுக்கிறான். இதுக்கு பேரா வளர்ச்சி..? இதை தடுத்து திருத்தவும் இந்த உலகத்தை அழிவுல இருந்து காப்பாத்தவும் வழி தேட்றது தான் என்னை மாதிரி ஆராய்ச்சியாளர்கள் நோக்கம். அப்ப என் கவனத்துல பட்ட விஷயம் தான் இந்த ஊரும் நீயும்.. கூடவே சித்தர்களும்! அதுக்காக தான் வந்தேன். எனக்கு இங்க நல்ல அனுபவம் ஏற்படலேன்னாலும் பரவாயில்லை. தவறான அனுபவத்தை தராதே.. பாவம் இந்த மணி.. என்னால இந்த தப்பு

பண்ணிட்டான். அவனுக்கு பார்வை கிடைக்கணும். எனக்கும் இந்த உலகத்தை காப்பாத்தற வழி எதுன்னு தெரியணும். அதுக்கு நீ எந்த வடிவத்துல வந்து உதவி செய்தாலும் சரி..."

- க்ளாட் சன்னதி முன் கதறி முடித்தார்.

துல்லியமான அதே நேரம் கோவில் வாசலில் ஒரு படகு கார் அதனுள் இருந்து அர்ஜூனும், அவன் உதவியாளர் குமரனும் இறங்கிக் கொண்டிருந்தனர்!

## 7

**'மலையகங்களில் பிராணாயாமம் பயிற்சி செய்வது பெரும் பயனைத் தரும். இதய நோய் உள்ளவர்கள், மிகவும் பலவீனமான மன அமைப்பு உடையவர்கள், சிறிய விஷயத்துக்கும் பெரிய அளவில் கவலைப்படுகின்றவர்கள், ஜாதகத்தில் சந்திரனின் அமைப்பை நீச்சமாகவோ இல்லை அஷ்டமமாகவோ பெற்றவர்கள் மலையகங்களில் உள்ள கோவில்களுக்கு சென்று வருவதும் அங்கே தங்குவதும் தியானிப்பதும் நல்ல பலனைத் தரும். இதை விடாமல் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும்: ஒரு முறை இரு முறை செய்வதால் இதை உணர முடியாது.**

**இந்த சூட்சமம் காரணமாகவே மலைமேல் நம் முன்னோர்கள் கோவில்களை கட்டி அங்கே சென்று வருவதை ஒரு வழிமுறையாக ஆக்கினார்கள். மிகுந்த மன பலவீனமான சிறு விஷயத்துக்கும் கண்ணீர் சிந்தும் மன அமைப்பை உடைய ஒருவருக்கு தொடர்ச்சியாக 108முறை மலை ஏறிச் சென்று முருக தரிசனம் செய்யும் ஒரு வழி முறையை ஒரு சித்தர் ஏற்படுத்திக் கொடுத்தார். செவ்வாய்கிழமை காலை வேளையில் செவ்வாய் ஹோரையில் செவ்வரளி மலர்களால் அவர் முருகனை அர்ச்சித்து வணங்க வேண்டும் என்பது அவருக்கு**



**சொல்லப்பட்டது. இதில் ஒரு முறை கூட தவறக்கூடாது என்பது வலியுறுத்தப்பட்டது.**

**அவரும் இதைச் செய்து முடித்தார். கிட்டத்தட்ட 2 வருடங்கள் இந்த வழிபாடு அவரால் நிகழ்த்தப்பட்டது. இதனால் நடுங்கும் அவரது மன அமைப்பே மாறிப் போனது. அவரை ஒரு முறை போலீஸார் சந்தேகத்தின்பேரில் கைது செய்ய நேரிட்டது. ஸ்டேஷனுக்குள் வாக்குவாதம் செய்யாமல் லாக்கப் அறை கதவை திறந்து கொண்டு உள்ளே போய் படுத்து விட்டார்.**

**உங்க சந்தேகத்தை தீர்த்துக்குங்க. இல்ல நிரூபிச்சு தண்டனை வாங்கிக் கொடுங்க. இரண்டுல எது நடந்தாலும் சரி, ஜெயில்ங்கறதும் இந்த பூமிலதானே இருக்கு. பாத்ரூமுக்கு போற மாதிரி, டாய்லெட்டுக்கு போற மாதிரி அங்கேயும் போய் என்ன இருக்குன்னு பாப்போம் இப்ப என்ன? இதுவும் ஒரு அனுபவம் தானே? என்று கேட்டாராம்.**

**மலையகத்து ஆற்றலை நமக்கு பயன் படுத்தத் தெரியவேண்டும்.**

அர்ஜூன் மற்றும் குமரனோடு ஊர்ப் பெரியவர் ராமலிங்கமும் வந்திருந்தார். அவர்கள் வரவை அறிந்து கொண்டு வெகுவேகமாக ஓடினார் குருக்கள்.

"வாங்கோ, வாங்கோ... தொழிலதிபர் ராமரத்தினம் சார் புள்ளை எங்க ஊருக்கு வந்துருக்கார்னா நாங்க கொஞ்சம் புண்ணியம் பண்ணியிருக்கணும். ஏதோ உங்க தயவால எங்க ஊர் நல்லவிதமா மாறினா ரொம்ப சந்தோஷப்படுவோம்" என்று முகமன் பாடினார்.

அப்போது டாக்டர் க்ளாட் கண் தெரியாத மணியோடு ஜீப்பில் ஏறுவதை அர்ஜூன் பார்த்தான். அவரை ராமலிங்கமும் பார்த்தார்.

அவருக்கு மணியை பார்த்த உடனேயே புரிந்து விட்டது.

"என்ன குருக்களே.. ராத்திரி கோவிலுக்குள்ள ஒளிஞ்சிருந்து தப்பு பண்ணிட்டாங்களா?"

"ஆமாம் ராமலிங்கம்... நாம எவ்வளவு சொன்னாலும் சில நேரங்கள்ள நம்மை மீறி இப்படி எதாவது நடந்துட்றது."

"அந்த வெள்ளக்காரரை எல்லாம் கோவிலுக்குள்ள விட வேண்டாம்னு சொன்னா கேக்கறீங்களா?"

-ராமலிங்கமும் குருக்களும் பேசிக் கொள்வது அர்ஜுனைக் குழப்பியது. குமரன் அதை புரிந்து கொண்டு 'ராமலிங்கம் சார்... இங்க சார் வெயிட்.. பண்றார் பாருங்க' என்றான்.

'தப்பா எடுத்துக்காதீங்க தம்பி. எங்க ஊர்ல சர்க்கரைத் தொழிற்சாலை கட்டணும்கற பெரிய எண்ணத்தோட வந்துருக்கீங்க அதனாலதான் நல்ல எண்ணத்தோட வந்துருக்கற உங்களை இங்க கூட்டிகிட்டு வந்தேன். எங்க ஊர் வரையில சாதாரணமா ஒரு ஆடுமாடு வாங்கணும்னாலும் இங்க சாமிகிட்ட வந்து உத்தரவு கேட்டுட்டு செய்யறதுதான் வழக்கம்.. நீங்களோ பல கோடிய போட்டு எங்க ஊர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுக்க வந்திருக்கீங்க. ஆகையால முதல்ல எங்க சாமியை கும்புட்டுக்குங்க...'

- என்று சொல்லிக் கொண்டே கோவிலுக்குள் நுழைந்தார். அர்ஜுனும் அவரை பின் தொடர்ந்தான். குமரன் அவன் மேல் யாரும் மோதிவிடாதபடி ஒரு செக்யூரிட்டி போல எல்லோரையும் விலக்கிக் கொண்டு சென்றான்.

திருச்சன்னதியும் வந்தது!

சித்தர்கள் செய்து முடித்திருந்த அதே பூஜை அலங்காரத்தில் ரசமணீஸ்வரர்.

"தம்பி நீங்க யோகக்காரர்...ராத்திரி சித்தர் சாமிங்க செய்த அலங்காரம் இது. இதை தரிசனம் செய்யக் கொடுத்து வெச்சிருக்கணும்" என்றார் ராமலிங்கம்.

அர்ஜுனுக்கு அதெல்லாம் பெரிதாகத் தெரியவில்லை. இந்திய கிராமங்களில் இந்த மாதிரி மனிதர்களும், நம்பிக்கைகளும் நிறையவே இருக்கத்தானே செய்கின்றன.

குருக்கள் ஓடிப்போய் கற்பூர ஆரத்தி காட்டினார்.

அருகில் வரவும் கையை நீட்டி அதை ஒற்றிக் கொள்ளாமல் குமரனைப் பார்க்கவும் அவன் இருக்கட்டும் இருக்கட்டும் என்று தட்டில் ஒரு நூறு ரூபாயை போட்டான்.

அர்ஜுன் அங்கே அப்போது நடந்து கொண்ட விதமே அவன் ஒரு கடவுள் நம்பிக்கை இல்லாதவன் என்பதை ராமலிங்கம் வரையில் காட்டிக் கொடுத்து விட்டது.

அதன்பின் கோவிலைச் சுற்றி வந்தனர். இடையில் ராமலிங்கம் குருக்களிடம் டாக்டர் க்ளாட் பற்றியும், மணி பற்றியும் கடுமையாக சில விஷயங்கள் பேசினார்.



"குருக்களே இனி ஒரு முறை இப்படி நடக்கக் கூடாது. எனக்குத் தெரிஞ்சு இந்த மணியோட நான் ஒன்பது குருடனுங்கள என் காலத்துல பார்த்துட்டேன்.. எனக்கு இவங்கள பத்திக் கூட கவலையில்லை. சித்தர் சாமிங்க கோவிச்சுகிட்டு நம்ம கோவிலுக்கு வராம போனா என்ன ஆகும்னு யோசிச்சுப் பாருங்க..."

"ரொம்ப சரி.. எனக்கும் அந்த பயம் இருக்கு. அதே சமயம் இதை எல்லாம் சுவாமியும் பாத்துண்டு தானே இருக்கார். ஆகையால பிரச்னையை அவர்கிட்டயே விட்றுவோம்."

"என்ன குருக்களே பேசறீங்க... கோவில் நம்ம கட்டுப்பாட்டுலல்ல இருக்கு?"

"ஆனா நாம அவன் கட்டுப்பாட்டுலல்ல இருக்கோம்?"

"முடிவா என்ன சொல்றீங்க..."

"மன்னிப்பு ஓலையை எழுதி சன்னதில வெச்சுருவோம். சாமி பாடு, சோதிக்கறவா பாடு நாம எதுக்கு நடுவுல மண்டையை போட்டு உடைச்சிக்கணும்?"

"அதுவும் சரிதான்.. புதுசா வந்துருக்கற இந்த அர்ஜுன் தம்பிக்கும் கடவுள் பக்தி இருக்கற மாதிரி தெரியல. நம்ம சாமியை கும்புட ஒருத்தன் வெளிநாட்டுல இருந்தெல்லாம் வந்துருக்கான் ஆனா இங்கயே இருக்கறவங்களுக்கு அருமை தெரியல.."

"அதுவும் அவன் விருப்பம்னு விட்றுங்கோ. நாம நம்ம கடமையை பழுதில்லாம செய்வோம். மற்றபடி நடக்க நடக்க நாராயணன் செயல்."

- இருவரும் பேசிக் கொண்டே அர்ஜுனைப் பின் தொடர்ந்தனர்.

"இப்ப அடுத்து எங்க போறீங்க.. உங்க வீட்டுக்கா?"

"என் வீட்டுக்கெல்லாம் இந்த தம்பி வருமான்னு தெரியல இருந்தாலும் கூப்பிட்டு பாக்கறேன். இப்போதைக்கு சர்க்கரை தொழிற்சாலை கட்ட ஐம்பது ஏக்கருக்கு குறையாம இடம் வேணும். நம்ப ஊர்ல ஒட்டு மொத்தமா ஐம்பது ஏக்கருக்கு எங்க போக? யாராவது ஒருத்தன் ஊர் நல்லதுக்காக தன் சொத்தை விக்க முன் வந்தா தான் நல்லது."

"அந்த ஒருத்தரா நீங்களே இருந்துட்டு போயிருங்க... நீங்க யாரைக் கேட்டாலும் ஏன் நீங்க தரக் கூடாதான்னு உங்களைத் தான் திருப்பிக் கேப்பாங்க."

"எனக்கும் இப்ப அதான் யோசனையாயிருக்கு. கிட்டதட்ட அறுநூறு பேருக்கு வேலை கிடைக்குமாம். விளையற 'கரும்பை

எல்லாமும் நாங்களே நல்ல விலைக்கு வாங்கிக்கறோம்னு தம்பி கூட வந்த அந்த குமரன்கற பைய்யன் சொல்றான்..."

"அப்புறம் என்ன... நம்ம ரசமணீஸ்வரர் க்ருபையால தான் இதெல்லாம் நடக்கப் போறது... சில ஆயிரம் பேர் இருந்த ஊர் இது. இப்ப பல ஆயிரமா பெருகிட்டோம்."

"வேலை வாய்ப்பும் இங்க குறைவு... எவ்வளவு தான் விவசாயத்தையே நம்ப முடியும். நாலுவித தொழிலும் வளர்ந்தா தானே இனி வாழ முடியும்?"

"அதை எல்லாம் நினைச்சு தானே இவங்க நம்ம ஊர்ல தொழிற்சாலை போடலாம்னு சொன்னப்போ நான் சந்தோஷப் பட்டேன். இப்ப கூட தொகுதி எம்எல்ஏக்கு தெரிஞ்சா அவர் ஊருக்கு இந்த தொழிற்சாலையை கொண்டு போக முயற்சி செய்வார். ஏன்னா அவர் ஊர்லயும் தாமிரபரணி பாயுது கரும்பும் நல்ல விளையுதே..."

"கூடாது கூடாது... தொழிற்சாலை நமக்குத்தான் வரணும் இப்ப ஊர்ல இருக்கற ஒரு இளவட்டம் கூட வேலை இல்லைன்னு ஊரைச் சுத்தக் கூடாது. நமக்கு நம்ம பிள்ளைகளோட எதிர்காலம் தான் முக்கியம். அரசாங்கம் நிச்சயமா நமக்கு பெருசா எதுவும் பண்ணப் போறதில்ல. இப்படி தானாவரும் சந்தர்ப்பங்களையும் நாம விட்டுட்டா அப்புறம் நாமல்ல முட்டாளாயிடுவோம்?"

- குருக்கள் கருத்தும் அழுத்தமாகத்தான் இருந்தது. அர்ஜூன் காரில் ஏறிக் கொண்டு ராமலிங்கத்துக்காக காத்திருந்தான். அவரும் ஓடி வந்து ஏறிக் கொள்ள கார் புறப்பட்டது.

தன் நிலத்தையே காட்டுவதற்காக அவரும் தயாரானார். அதையே காருக்குள் அர்ஜூனிடமும் கூறினார்.

"தம்பி... உங்க தேவைக்கு குறைஞ்சது ஐம்பது ஏக்கர் வேணும் இல்லையா?"

"நிச்சயமா... கூடக் கிடைச்சா இன்னும் சந்தோஷம்..."

"இதுக்கே பெரும்பாடு தம்பி... ஏன்னா எல்லாமே நல்ல விளையற நிலங்கள். எங்க ஊர் வரைல மழை பொய்ச்சதே இல்லை. அதுலயும் பௌர்ணமிக்கு மறுநாள் சித்தர்கள் செய்துட்டு போற பூஜையால கட்டாயம் ஒரு பெரிய மழை வந்துடுது. பனிக்கால மான மார்கழி மாசத்துல கூட எங்க வரைல மழை நின்னதில்ல."

ராமலிங்கம் சொன்னதை மிகுந்த ஆச்சர்யத்தோடு கேட்டுக் கொண்ட அர்ஜூன் "நான் கூட உங்க ஊர் பத்தி வர்ற வழியில நிறைய கேள்விப்பட்டேன். எல்லாமே பெரிய புதிரா இருக்கு. எப்பவும் மழை பெய்யற சிரபுஞ்சியில கூட இப்ப மழை குறைஞ்சு



போச்சு. ஆனா இங்க மழை எப்பவும் பெய்யுதுன்னா சம்திங் அதுக்கு ஏதோ ஒரு விஞ்ஞான காரணம் இருக்கணும்."

"ஒரே காரணம் தான் தம்பி... எங்க சாமிதான் அது."

"நோ நோ... நீங்க ஊர்ப்பாசம், கடவுள் நம்பிக்கைன்னு இரண்டையும் வெச்சு ஒரு உணர்ச்சில சொல்றீங்க."

"அதெல்லாம் இல்ல தம்பி... எப்ப எங்க ஊர் கோவில்ல சித்தர்கள் பௌர்ணமி பூஜை செய்ய ஆரம்பிச்சாங்களோ அப்ப இருந்து தான் இப்படி..."

"அப்படிப்பட்ட சித்தர்கள் மழையே இல்லாத ஊர்களுக்குப் போய் அங்கேயும் மழையை வரவெச்சிருக்கலாம் தானே?"

"நிச்சயமா... இங்க முறையா பூஜை நடந்தாலே போதும். இயற்கை சீராகி உலகம் சுபிட்சமா இருக்கும். இப்ப உலகம் இயங்கவே இந்த ஊரும் அந்த பூஜையும் தான் தம்பி காரணம்."

"இதை என்னால ஏத்துக்க முடியாது... அவ்வளவும் கற்பனை."

"கற்பனையா... இன்னிக்கு கூட சித்தர்கள் பூஜையை கோவிலுக்கு உள்ள திருட்டுத்தனமா நுழைஞ்சு பாக்க நினைச்ச வெள்ளைக்காரர் ஒருத்தரும் அவரை கூட்டிகிட்டு வந்த மணிங்கற கைடும் பெரிய அளவுல பாதிக்கப்பட்டிருக்காங்க."

"எந்த வகைல?"

"அந்த மணிங்கற நபருக்கு கண் பார்வையே போயிடிச்சு."

"நிஜமாவா?"

"அவங்க இப்பவும் இந்த ஊர்ல தான் இருக்காங்க. நீங்க கூட அவங்களை பாக்கணும்னா பாக்கலாம்..."

"தப்பு பண்ணா சாமி கண்ணைக்குத்திடும்னு சொல்றது ஒரு பெரிய உண்மையா அப்ப..."

"இங்க அப்படி அர்த்தம் பண்ணிக்க கூடாது. சித்தர்கள் பூஜைங்கறது ஏகாந்தமான பூஜை. உலக நலனுக்காக அவங்க செய்யற பூஜையும் கூட. அதனால தான் யாருக்கும் பாதிப்பில்லாம ஒரு ராத்திரியில அவங்க வந்து பண்ணிட்டுப் போறாங்க. அந்த பூஜையை சந்தேகப்பட்றதும் என்ன நடக்குதுன்னு பாக்க நினைக்கறதும் ஒருத்தரோட பெட்ரூமை எட்டிப் பாக்கற மாதிரி"

- ராமலிங்கத்தின் விளக்கத்தை கேட்டு கேலியாக சிரித்துக் கொண்டான் அர்ஜூன். அதை ஆமோதிப்பது போல குமரனும் சேர்ந்து கொண்டான்.

"உங்க சிரிப்புக்கு அர்த்தம் புரியுது தம்பி... பொதுவா கடவுள் விஷயமே எல்லா காலத்துலயும் நம்பிக்கை வெச்சு ஏத்துக்கற ஒரு

விஷயமாத்தான் இருந்து வந்துருக்கு: ஏன்னா சாமிங்கறவர் ஒரு கூட்டத்துக்கு தெரிஞ்சதாவோ, இல்லை அவரை கஷ்டப்பட்டா போய் பார்த்துடலாம்கற மாதிரியோ இல்லாதவராதான் இருக்கார்.

உங்கள மாதிரி இளைஞர்கள் பிறக்கும் போதே மனித சக்தியோட உச்சத்தை எல்லாம் பார்த்தவங்களா இருக்கீங்க. உங்கள சக்தி இருக்கற எல்லாத்தையும் ஒரு மனுஷன் தான் ஏதோ ஒரு சமயத்துல கண்டு பிடிச்சவனா இருந்துருக்கான். ஆகையால கடவுள்ங்கறவர் இங்க எங்க வராறுன்னு கூட கேட்கலாம். இந்த பூமி காத்து வானம் எல்லாம் அவர் தந்ததுதான்னு சொன்னா, இதை உங்களுக்கு யார் சொன்னதுன்னு திருப்பிக் கேட்பீங்க.

ஆனா எங்க ஊர்ல கொஞ்ச நாள் இருந்தா போதும் கடவுளைப் பற்றிய குழப்பமெல்லாம் விலகிடும். அவரை நீங்க புரிஞ்சுக்குவீங்க...உங்களுக்கு அதிர்ஷ்டமிருந்தா அவரை நீங்க பார்க்கவும் செய்யலாம்..."

"சரி இப்ப எதுக்கு இந்த பீடிகை எல்லாம்?"

"காரணமாத்தான் தம்பி... உங்களுக்கு ஃபேக்டரிக்கு நிலம் வேணும்னா நான் பெரிய மனசு பண்ணி வித்தா உண்டு. மத்தபடி யாரும் விக்கத் தயாரா இல்லை. அப்படியே விக்க முன் வந்தாலும் யார் கிட்டயும் நீங்க கேக்கற அளவு இடம் இல்லை..."

"யார் கிட்ட எவ்வளவு இருக்கோ அவ்வளவையும் வாங்கிட்டா போச்சு..."

"அதுக்கு சாமி உத்தரவு தரணுமே..?"

"இதுக்கும் சாமிக்கும் என்ன சம்பந்தம்?"

"இந்த ஊரே சிவன் கோவிலுக்கு தான் சொந்தம்னு ஒரு கருத்து உண்டு தம்பி. அவர் அனுமதி இல்லாம இந்த ஊர்ல ஒரு மரம் கூட நடமாட்டோம்..."

"ஓ- இடத்தை விக்கறதா இருந்தாலும் அனுமதி வேண்டுமா?"

"நிச்சயமா- இது காலம் காலமா கடைபிடிக்கற ஒரு பழக்கம்"

"இதை எப்படி நீங்க கொஞ்சம் கூட ஒரு கோபமோ வருத்தமோ இல்லாம பேசறீங்க..."

"இதுக்கு எதுக்கு கோபமும் வருத்தமும்...?"

"மற்ற ஊர்ல வாழறவங்கல்லாம் இப்படிதான் அனுமதி கேட்டுகிட்டு நடந்துக்கறாங்களா..? இது ஒரு வடிகட்டின முட்டாள்தனமா உங்களுக்கு தோணலையா?"

"மேலோட்டமா பார்த்தா அப்படி நான் தோணும். ஆனா இதுக்கு பின்னால நிறைய உள் அர்த்தம் இருக்கு தம்பி..."



"என்ன அர்த்தம்... நீங்கள்ளாம் ஜனநாயக நாட்டுல வாழற சுதந்திர பிரஜைகள் தானே?"

"தம்பி- இந்த ஊர்ல இருந்துகிட்டு அவசரப்பட்டு இந்த மாதிரி எதுவும் பேசாதீங்க. இங்க வீசற காத்துல கூட... சாமி இருக்கு-"

"போதும்... நான் நிலமே வாங்கலை - இங்க ஒரு தொழிற்சாலையும் போடலை. நல்ல ஊர்- நாளைக்கு ஒருத்தன் வேலைக்கு வரணும்னா கூட சாமி கிட்டதான் அப்ளிகேஷன் போடுவான். ஒருத்தன் வேலைக்கு வரலேன்னா சாமி உத்தரவு தரலைம்பான். இங்க என்னால ஃபேக்டரி நடத்த முடியாது. மடம் தான் நடத்த முடியும். அதுக்கு கூட சிக்கல் வரலாம் - அதுக்கு வாசல் கிழக்கு பக்கம் வைக்கறதா, மேற்கு பக்கம் வைக்கற தான்னு..."- அர்ஜுன் எரிந்து விழுந்தான்.

"சாரி சார்... நான் இடம் பாக்கல்லாம் வரலை. இப்படியே எங்க ஊருக்கு போறேன். நீங்க இறங்கிக்குங்க. டிரைவர் காரை நிறுத்து..." - என்றான்.

ராமலிங்கத்துக்கு தர்ம சங்கடமாகி விட்டது.

"தம்பி... நீங்க தவறா புரிஞ்சுகிட்டீங்கன்னு நினைக்கறேன். எங்க நம்பிக்கைகளை நான் உங்க மேல நிச்சயம் திணிக்க மாட்டேன். என் இடத்தை சாமி கிட்ட உத்தரவு கேட்காம இப்பவே உங்களுக்கு கிரயம் பண்ணித் தந்துட்றேன். நீங்க தொழிற்சாலை கட்டுங்க. எங்க ஊர் இளைஞர்களுக்கும் வேலை கொடுங்க. ஆனா ஊருக்காக நான் உத்தரவு கேட்டு சாமி உத்தரவு கொடுத்துதான் செய்யறதா சொல்லும் போது நீங்க எதுவும் பேச வேண்டாம்." - என்றார் ராமலிங்கம்.

அர்ஜுனுக்கு அவரது ஊர் நலம் பிடித்து விட்டது.

"என் வரைல கடவுள்ங்கறவர் இருந்தாலும் கவலையில்லை இல்லேன்னாலும் கவலையில்லை. நாம நம்ம வேலையை பாக்கணும் நமக்கு புத்தின்னு ஒண்ணு இருக்கு. அதை பயன்படுத்தி மேலமேல போகணும். அதான் என் பாலிசி...." என்று தன் கொள்கையை கூறி சிரித்தான்.

"நல்ல வேளை நீங்க காரை நிறுத்தின இந்த இடத்துல இருந்து தான் என் இடம் ஆரம்பமாகுது. அதோ அதுவரை என் இடம்தான்! போனவாரம் தான் கரும்பு அறுவடை முடிஞ்சது. அதான் வயலில் கரும்புக் களையோட அப்படியே இருக்கு. தீயை வெச்சு சாம்பல் தட்டி விடணும். ஆனா இனி அதுக்கு அவசியம் இல்லை. கரும்பு விளைஞ்ச இந்த மண்ணுல இனி தான் சக்கரை விளையப் போகுதே?"

- ராமலிங்கம் விற்றுவிட்டது போலவே சிரித்தார். அர்ஜூனும் அதை ரசித்தான். குமரன் தன் வீடியோ கேமராவில் அதை படம் பிடித்துக் கொள்ளத் தொடங்கினான். நடுவில் ராமரத்தினம் அவனை செல்போனின் காலர் ட்யூனின் வழியாக கூப்பிட்டார்.

"அர்ஜூன்.."

"யெஸ் அப்பா.."

"ஊர்லதானே இருக்கே?"

"எக்ஸாக்ட்லி.."

"எப்படி இருக்கு என் ஊர்...?"

"இது இனிமே நம்ம ஊர்... ரொம்ப நல்லா இருக்கு. ஒண்டர்ஃபுல் நேச்சர். ஆனா உங்க ஊர் மக்கள் மட்டும் உங்க காலத்துலயே இருக்காங்க. எதை எடுத்தாலும் சாமிகிட்ட கேட்கணும், சாமி உத்தரவு தரணும்னு தான் பேசறாங்க. வேடிக்கை என்னடான்னா அந்த சாமியை யாரும் ஒரே ஒரு தடவை கூட... பார்த்ததேயில்லை. இல்லாத அவர் கண்ட்ரோல்ல ஒரு ஊரே இருக்கு. இங்க எப்படிடா நாம தொழில் பண்ணப் போறோம்னு எனக்கு பயமா கூட இருந்தது. ஆனா ஊர் பெரியவர் ராமலிங்கம் எனக்கும் நமக்கும் தகுந்த மாதிரி நடந்துக்க தயாரா இருக்காரு.."

"சுந்தரமூர்த்தி மகன் ராமலிங்கமான்னு கேளேன்..."

"பக்கத்துலதான் இருக்கார் நீங்களே பேசுங்களேன்.."

- அர்ஜூன் செல்போனை ராமலிங்கம் வசம் தந்தான். அவரும் மிகப் பணிவாக "ஐயா வணக்கங்க.. உங்க கூட பேசறதுல ரொம்ப ரொம்ப சந்தோஷங்க.." என்று உச்சி குளிர்ந்து போனார்.

"நீங்க சுந்தரமூர்த்தி ஐயா மகனா..?"

"ஆமாங்க.. என் அப்பாவை உங்களுக்கு தெரியுங்களா?"

"சரிதான்.. என் சொந்த ஊரே சித்தன் குறிச்சி தானே?"

"என்னது.. நீங்களும் நம்ம ஊர்க்காரரா?"

"ஆமாம்யா.. நான் பிறந்தது வளர்ந்தது அங்கதான். என் அப்பதான் வடக்கு தெரு ரங்கநாதன்.."

"என்னது நீங்க ரங்கநாதன் சார் குடும்பமா?"

"ஆமாம்யா... ஆனா சின்ன வயசுல நம்ம ரசமணீஸ்வரர் அருளோட ஊரை விட்டே ஓடி வந்துட்டேன். இப்ப நானும் இந்த நாட்டுல சொல்லிக்கிற மாதிரி ஒரு தொழிலதிபர். என் சொந்த ஊருக்கு எதாவது செய்யணும்னு தான் மகனை அனுப்பியிருக்கேன்.."



"ஐயா இதை கேக்கும் போது எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுங்களா.. கூடவே கொஞ்சம் வருத்தமாவும் இருக்குங்க."

"தெரியும் ராமலிங்கம். இத்தனை வருஷம் கழிச்சு இப்பதான் சொந்த ஊர் ஞாபகம் வந்ததான்னு கேக்கலாம் நீங்க. ஆனா நான் என்ன பண்ணட்டும் நம்ம சாமி என்னை இப்ப தானே ஊரை பத்தியே நினைக்க விட்டிருக்கு. இப்பகூட நீ முதல்ல போகாதே உன் மகன் போகட்டும்னுல்ல அது சொல்லிடிச்சு.."

"சாமிங்களா.. நம்ம சாமிங்களா?"

"நம்ம சாமியே தான்... நான் முன்னுக்கு வந்தே பத்து பதினைஞ்சு வருஷம் ஆச்சு. இவ்வளவு வருஷமா நான் நம்ம சாமியை நினைக்காத நாளில்லை. ஊரையும் தான்.."

"ஐயா சாமி உங்களை கட்டிப் போட்டுருக்குன்னா நிச்சயம் காரணம் இருக்கணும். நான் இனி அதைப் பத்தி கேள்வி கேட்க மாட்டேன். அதே சமயம் நம்ம ஊர்காரருக்குதான் நான் இடத்தை விக்கப் போறேங்கறதுல ரொம்ப சந்தோசப்பட்றேன்.."

"ராமலிங்கம்... நாங்க வாழ்ந்த வீட்டுக்கு பையனை கூட்டிகிட்டு போங்க. அவன் பாக்கட்டும். வீடு இப்ப எப்படி இருக்கு?"

"அதை ஏங்க கேக்கறீங்க. உங்க அப்பா சித்தின்னு ஒருத்தர் கூட உயிரோட இல்லாம உங்க குடும்பமே அழிஞ்சு போனதா தான் ஊர் நினைச்சுகிட்டு இருக்கு.."

"நாங்க அழியல ராமலிங்கம்.. நான் இருக்கேன். என்மகன் இருக்கான். அந்த வீட்டை எடுத்து கட்டி அதுலதான் நான் என் இறுதிக் காலத்தை கழிக்கப் போறேன். அப்படியே டெய்லி ஃபேக்டரிக்கு போய் அதையும் பார்த்துக்குவேன்.."

"ரொம்ப சந்தோஷம்யா.. ரொம்பரொம்ப சந்தோஷம் நீங்க எப்பய்யா வருவீங்க..?"

"கோவில்ல நீங்களே கேளுங்க... சாமி சொல்லிட்டா நாளைக்கே கூட ஓடி வந்துட்றேன்..."

"இது போதுங்க.. மிச்சத்தை நான் பாத்துக்கறேன்.."

ராமலிங்கம் செல்போனை அர்ஜூன் வசம் தந்தவராக

"தம்பி நீங்க யாரோ இல்ல தம்பி.. இந்த ஊர்காரர்தான் நீங்க."

அர்ஜூன் சிரித்தான்.

"ஐயோ எனக்கு இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா தம்பி."

"எனக்கும் இப்ப சந்தோஷமா இருக்கு.. நான் எங்கப்பா

வாழ்ந்த வீட்டை பார்க்க விரும்பறேன்... போகலாமா?" என்று கேட்டான்.

"அடுத்து நாம இப்ப அங்கதானே போகப் போறோம். கார்ல ஏறுங்க."

- அந்த காரும் சித்தன் குறிச்சி வடக்கு தெரு நோக்கி ஓடியது!

# 8

'மலையகத்துக்கு தனிச் சிறப்பு இருப்பது போலவே ஒரு ஊருக்கு நடுவில் இருக்கும் பெரிய கோபுரங்களை உடைய ஆலயத்துக்கும் சிறப்பு இருக்கிறது. ஊருக்குள் நாம் நடமாடும் போது நாம் எங்கிருந்து பார்த்தாலும் ஊரின் கோபுரம் தெரியும் விதத்தில் இருக்க வேண்டும். அது மறைமுகமாக கடவுள் மிகப் பெரியவர் அவர் நம்மை பார்த்தபடியே இருக்கிறார் என்கிற உணர்ச்சியை நம்முள் வளர்க்கும்.

அடுத்து கோவிலில்தான் பொதுமை உள்ளது. அதன் கலசத்தின் வழியாக உள்ளே நடக்கும் பூஜைகளின் விளைவுகள் கதிர்களாகி ஊர் முழுக்க பரவுகிறது. ஒரு ஆலயத்தில் ஒலிக்கும் மணி சப்தமும் ஊர் முழுக்க பரவி கோவிலுக்குள் நடக்கும் பூஜையை ஞாபகப்படுத்துகிறது. நாம் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே கடவுளை நினைக்க அது வழி கோலுகிறது.

கோவிலுக்கு என்று ஒரு குளம் இருக்கும் இதை தீர்த்தம் என்பார்கள். அடுத்து கோவிலுக்கு என்று ஸ்தல விருட்சமும் இருக்கும். இதைப் போலவே ஊரை சுற்றிவர மூர்த்தி எனும் பெயரில் உற்சவ விக்ரகம் இருக்கும். இந்த மூன்றுமே கடவுள் பொதுவானவர், நீர் நிலம் தாவரம் ஆகியவையும் பொதுவானவை அவைகளை ஒருங்கே கொண்ட கோவில் மட்டுமே உலகில் பெரியது



என்பதை நமக்கு உணர்த்துகின்றன. இப்படி ஒரு சிறப்பை இது கொண்டிருப்பதால் தான் 'கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றனர். கோவில் இல்லாத ஊரில் ஒரு மனிதன் விதி வசத்தால் பெரும் செல்வந்தனாக இருப்பான். அவன் வீடுதான் பெரிதாகவும் இருக்கும். அவன் தன்னையே கடவுளைப் போல பாவித்துக் கொண்டு எல்லோரையும் அடிமைகளைப் போல நினைப்பான். நாமும் அவனுக்கு பயந்து கொண்டு அவன் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டு வாழ்பவர்களாக இருப்போம்.

கோவில் பெரிதாய் உள்ள ஊரில் ஒரு செல்வந்தன் இருந்தாலும் அவனால் தன்னை பெரியவனாக நினைக்க முடியாது. ஒரு கோவில் என்பது மறைமுகமாக இப்படி பல நன்மைகளை செய்து கொண்டிருக்கிறது!

பாழடைந்து கிடந்தது அந்த வீடு.... திரும்பின பக்கமெல்லாம் நூலாம்படை — கதவு, நிலை எல்லாவற்றையும் கரையான் தின்று விட்டிருந்தது. கூரை உளுத்துப் போய் தரை தட்டி விட்டிருக்க பந்தலில் தொங்கும் புடல்ங்காய் போல பாம்புகள் சில தொங்கிக் கொண்டிருந்தன.

உள்ளே சென்று பார்த்த வேகத்தில் திரும்பி வந்துவிட்ட அர்ஜுன் "முதல்ல இந்த கட்டிடத்தை டோட்டலா இடிச்சு அள்ளி கொட்டிட்டு இங்க ஒரு பங்களா கட்ட ஏற்பாடு செய்யணும்" என்றான்.

"அதெல்லாம் இனி என் பொறுப்பு தம்பி... கவலையே படாதீங்க. நாம இப்ப நம்ம வீட்டுக்கு போறோம்" என்றார். அவர்களும் மறுக்கவில்லை.

வீட்டிற்கு போன போது அர்ஜுனுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது.

தேவதை போல ஒரு பெண்... ஒரு மின்னலைப் போல அவனை எதிர் கொண்டு வரவேற்றாள்.

"இவ என் பொண்ணு தம்பி. பேர் ரஞ்சனி..."

- அறிமுகம் செய்தார். அர்ஜுன் அவளது அழகில் மிரண்டு விட்டிருந்தான்.

ஒரு கிராமத்தில் இப்படி ஒரு பியூட்டியா?

ரஞ்சனி கொஞ்சம் மார்டனாகவும் இருந்தாள்.

வீட்டினுள் பாக்கு இடிபடும் சப்தமும் கேட்டது.

அது ராமலிங்கத்தின் தாயான கோமதியம்மாள்!

நெற்றியில் கையை கூரை போல வைத்துக் கொண்டே அர்ஜுனைப் பார்த்த கோமதியம்மாள் "யாருடா அது ஜாக்சன் துரையாட்டம் கொழா சூட்டோட......" என்று கேட்டாள்.

ராமலிங்கத்துக்கு தூக்கி வாரிப் போட்டது.

"ஐயோ அம்மா.. தம்பி பேர் அர்ஜுன். நம்ப வடக்குத் தெரு ரங்கநாதன் ஐயாவோட பேரன்.."

- அந்த பேரைக் கேட்ட மாத்திரத்தில் கோமதியம்மாள் முகத்தில் ஒரு புது பொலிவு.

"யாரு நம்ம ஆத்தோட போன ரங்கநாதன் ஐயா பேரனா?"

"ஆமாம். நம்ம ஊர்ல புதுசா சர்க்கரை தொழிற்சாலை வரப் போகுதுன்னு சொன்னேனே.. அதை கட்டப்போறதே இவங்க தான்.."

"ரங்கநாதன் ஐய்யா மகன் இப்ப அவ்வளவு தூரத்துக்கு ஒசந்துட்டாரா?"

"ஒசந்துட்டாங்களாவா.. அவங்களால நம்ம ஊரேல்ல ஒசரப் போகுது.."

"சந்தோஷம்.. சந்தோஷம்.. இடம் பாக்கணும், முடிக்கணும்னு சொன்னியே பாத்தாச்சா?"

"ஆங்.. பாத்து முடிச்ச மாதிரி தான்.."

"நீங்க பாத்து முடிக்கறது இருக்கட்டும். சாமி உத்தரவு தரணுமே, தந்திடிச்சா?"

- பாய்ண்ட்டை... பிடித்தாள் கோமதியம்மாள். சற்று தடுமாறி விட்டு ராமலிங்கமும் தொடர்ந்தார்.

"ஆச்சம்மா... கோவில்ல போய் பூக்கட்டி உத்தரவு கேட்டு சம்மதம்னு வந்ததுக்கு பிறகுதான் இடம் பாக்கவே கூட்டிகிட்டு போனேன்.."

"அது சரி யாரெல்லாம் இடம் விக்கப் போறாங்க.."

"நீ சொன்னா கோவிக்க கூடாது..."

"சொல்லுடா... இதுல கோவிக்க என்ன இருக்கு?"

"நான் நம்ம இடத்தையே கொடுத்துடலாம்னு இருக்கேன்.."

- ராமலிங்கம் சொன்ன மறுநொடி வாயைப் பிளந்தாள் கோமதி. அதை அர்ஜுனும் கவனித்தான். இடையிலேயே பிரம்பு நாற்காலியை எடுத்து வந்து போட்டு இருவரையும் உட்கார



வைத்து விட்டு காபி போட்டுக் கொண்டு வர சமையல் கட்டுக்குள் சென்று விட்டாள் ரஞ்சனி.

அர்ஜுனுக்கு அவளது வேகம் மிகவே பிடித்து விட்டது. ஆனால் இந்த கிழவி தான் பார்த்தது முதலே நிரடுகிறாள்.

கோமதியும் ராமலிங்கத்தை தனியே அழைத்துக் கொண்டு ஒதுங்கினாள். குமரன் அர்ஜுன் காதை கடிக்கத் தொடங்கினான்.

"சார்.. இடத்தை கொடுக்காதே - பூர்வீக சொத்து அப்படி இப்படின்னு சொல்லப் போறாங்க" என்று அர்ஜுனை தயார் படுத்தினான்.

அதே போல சில நிமிட இடைவெளியில் ராமலிங்கம் வந்தார்.

ரஞ்சனியும் காபியோடு வந்தாள்.

"முதல்ல காபி குடியுங்க தம்பி.." என்றார்.

அர்ஜுனும் ஒரு காபி பிரியன்.... அந்த காபியிடமும் கமகமவென வாசம். ஒரு சிப் குடித்தான்.

உண்மையிலேயே மிகச் சுவையாக இருந்தது.

அவளை பிரமிப்போடு பார்த்தான். ரஞ்சனி அவன் பார்வை தாளாமல் முகத்தை தாழ்த்திக் கொண்டாள்.

ராமலிங்கம் அவன் பார்வையை தவறாக அர்த்தப் படுத்திக் கொண்டார். "காபி நல்லா இல்லையா தம்பி.."

"சூப்பர் காபி.. இதை நல்ல இல்லைன்னு சொன்னா அவன் நாக்கே இல்லாதவன்.." என்றான். ரஞ்சனி அதை ரசித்து சிரித்தாள்.

"இந்த வீட்ல ரஞ்சனி தான் எல்லாம். அவ அம்மா சின்ன வயசுலயே போய் சேர்ந்துட்டா.. அதுக்கு பிறகு ரஞ்சனியால தான் இந்த வீட்டுல அடுப்பு எரியுது. எங்கம்மா நல்லா பேசுவாங்க... கை கால்லாம் நடுங்கறதால வேலை பாக்க முடியாது..."

- ராமலிங்கம் சொன்ன விதம் அர்ஜுனை நெகிழ வைத்து விட்டது.

"எனக்கும் அம்மா இல்லை.... தாயில்லாம வளர்றதும் வாழறதும் எவ்வளவு கொடுமைன்னு எனக்கு தெரியும்" என்றான்.

"மிஸ்டர் ராமலிங்கம் நில விஷயமா உங்க மதர் ஏதோ சொன்னாங்க போல இருக்கே..." - குமரன் ஞாபகப்படுத்தினான்.

"ஆங்.. அதுல ஒரு சின்ன சிக்கல் - நான் கொஞ்சம் அவசரப் பட்டுட்டேன்..." - ராமலிங்கம் ஏதோ பெரிதாக குண்டு போடப் போகிறார் என்பது அவனுக்கு புரிந்து விட்டது.

"என்ன சார் நிலத்துல ஏதாவது வில்லங்கமா - இல்லை கடன்

கிடன் வாங்கியிருக்கீங்களா?" - குமரன் தான் கேட்டான்.

"அதெல்லாம் இல்ல தம்பி. அது மஞ்சக்காணி..."

"அப்படின்னா?"

"வழிவழியா வர்ற இந்த குடும்ப சொத்து. அது இந்த வீட்டுக்கு மாப்ளையா வர்றவருக்கு தான் தரமுடியுமாம். எனக்கு ஆண் வாரிசு இல்லாததால அது என் பொண்ணுக்குதான் - பொண்ணுக்கு நேரா தராம மாப்பிள்ளைக்கு சீரா கொடுத்துடணுமாம் இதான் பல தலைமுறையா நடந்துகிட்டு வர்ற விஷயம்..."

"இந்த நிலத்தை தான் கொடுக்கணுமா... நான் கொடுக்கப் போற பணத்தை கூட சீரா கொடுத்துடலாமே..."

- அர்ஜுன் அவ்வளவு சுலபத்தில் விடமாட்டேன் என்பது போல பேசினான். பதில் கோமதியிடம் இருந்து வந்தது.

"மஞ்சக்காணி சீருங்கறது வழிவழியா தொடர்ந்து போய்கிட்டே இருக்கணும் என் மகனுக்கு சீரா வந்திச்சு. இப்ப அது வரப் போற மருமகனுக்கு... அவர் தன் மகனுக்கும் தரலாம் - மருமகனுக்கும் தரலாம். மொத்தத்துல. உறவுக்குள்ளயே இது இருக்கணும். வெளில போய்டக்கூடாதுங்கறதுதான் பெரியவங்க எண்ணம்..."

"அதுசரி பாட்டியம்மா... காலம் எவ்வளவோ மாறிகிட்டிருக்கு நம்ம பெரியவங்க அந்த காலத்துல நடந்தும், மாட்டு வண்டியிலையும் போனாங்க. ஆனா நாம என்ன இப்ப அப்படியா போறோம்? அவங்க அந்தக் காலத்துல எண்ணெய் விளக்குல. ராத்திரி பொழுதைக் கழிச்சாங்க. நாம இப்ப மின்சாரத்துக்கு மாறிக்கலையா? அந்த மாதிரி இந்த மஞ்சக்காணி விஷயத்துலயும் மாறினா என்ன...?"

"எது எதுல மாறலாம் எது எதுல ஒரு மனுஷன் மாறக் கூடாதுன்னு இருக்கு. அன்னிக்கு வெளிச்சம் எண்ணெயால வந்தா இன்னிக்கு மின்சாரத்தால வருது. அது வர்றவிதம் தான் மாறியிருக்கு. ஆனா வெளிச்சம் மட்டும் மாறலை! அன்னிக்கு அப்பா அம்மாவை அப்பா அம்மான்னுதான் கூப்பிட்டோம். இன்னிக்கு அவங்க உறவை மாத்தி வேற மாதிரி யாரும் கூப்பிட்றதில்ல. அதே உறவு தான்... காலம் எவ்வளவு தான் மாறினாலும் கடைசிவரை வாயால தான் பேசுவோம், கண்ணால தான் பார்ப்போம் இதுமட்டும் மாறாது."

- கோமதியம்மாள் அர்ஜுனுக்கு கொடுத்த பதிலடியில் அவனிடம் திக்குமுக்காடல். அதற்கு மேல் இதற்கு என்ன பதில் கூறுவதென்றும் தெரியவில்லை. தன் பிரவை பார்த்தான்.



"அப்ப உங்க நிலத்தை ஒருத்தர் அடையணும்னா அவர் உங்க பொண்ணை கல்யாணம் பண்ணிக்கணும். எங்க பாஸுக்கும் இதுதான் சட்டம். இதை மாத்த முடியாதுங்கறீங்க..." - என்று அந்த நிலைப்பாட்டை வார்த்தைகளில் சொன்னான்.

"ஆமாம் அதே தான்..." என்றாள் கோமதியம்மாள்.

ராமலிங்கத்தின் முகத்தில் ஏமாற்றம் நன்றாக தெரிந்தது.

"சரி... அப்ப நாங்க புறப்பட்றோம் வாழ்க உங்க பாலிசி...." என்றபடி கிண்டலாக வாழ்த்தி விட்டு குமரன் அர்ஜுனுடன் அங்கிருந்து புறப்பட்டான். அர்ஜுனிடமும் ஏமாற்றம் நன்றாக வெளிப்பட்டது. வெற்றிக்கோட்டை தொட வேண்டிய நேரத்தில் ஒருவன் தடுக்கி விழுந்தது போல் இருந்தது.

காரில் ஏறும் போது திரும்பிப் பார்த்தான்.

ஜன்னல் அருகே நின்றபடி ரஞ்சனி பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு உயிருள்ள ஓவியம் போலவும் தெரிந்தாள்.

"மன்னிச்சுக்குங்க தம்பி... எங்களுக்கு கொடுத்து வைக்கல - வேற யாராவது இடத்தை தர்றதா இருந்தா கட்டாயம் தகவல் கொடுக்கறேன்" - என்று கும்பிடு போட்டு அவர்களை வழியனுப்பினார் ராமலிங்கம்.

காரும் புறப்பட்டது!

**கா**ர் சித்தன் குறிச்சியின் புழுதி படிந்த தெருக்களில் ஓடி ஊர் எல்லையை தொட்டு தார்ச் சாலையில் ஓட ஆரம்பித்தது. இரு புறமும் கரும்பு வயல்கள் சிலுசிலுவென்ற காற்று.

காருக்குள் அர்ஜுன் இறுக்கமாக இருந்தான்.

குமரன் பேசத் தொடங்கினான்.

"எக்ஸ்யூஸ்மி சார்... இன்னிக்கு நாம வந்த வேலை வெற்றிகரமா முடியலன்னு வருத்தப்படாதீங்க. இந்த 2010லயும் பழமைல ரொம்பவே ஊறிக் கிடக்கறாங்க இந்த ஊர்காரங்க. பாருங்க ஊர்ல ஒரு செல்போன் டவர் கூட இல்லை. அதை கூட அனுமதிக்கலாமா கூடாதான்னு சாமிகிட்ட அனுமதி கேட்டுருப்பாங்க போல இருக்கு. மத்த ஊர் மாதிரி சினிமா தியேட்டர் இல்ல, நான் பார்த்த வரைல பெருசா யாரும் புகை பிடிக்கல. இந்த ஊர் சாமி பேரால அப்படியே இருக்காங்க. இங்க

நாம தொழிற்சாலை அமைத்தாலும் ரொம்ப கஷ்டம் தான் சார். நம்ம M.D. இந்த ஊரை விட்டு வந்ததால தான் பெரிய தொழிலதிபரா ஆக முடிஞ்சிருக்கு. இல்லேன்னா நிச்சயம் இந்த ஊர்ல ரொம்ப ரொம்ப சாதாரணமா இருந்திருப்பார்" - என்றான்.

அவன் கருத்தும் அர்ஜுனை யோசிக்க வைத்தது.

அப்போது கரும்பு வயலுக்குள் இருந்து ஒரு தாடி வைத்த சித்தரை போன்ற மனிதர் ஒருவர் வெளியில் வந்து சாலையை குறுக்கில் கடந்து போனார். இடுப்பில் ஒரு முழ கோவணம் மட்டுமே.. உடம்பும் கல்போல இருந்தது. காரில் வரும் அர்ஜுனை தடுப்பது போல கைகளை காட்டினார். டிரைவர் திரும்பிப் பார்த்தான்.

"காரை நிறுத்து.."

- காரும் நின்றது. அந்த மனிதர் அர்ஜுன் அமர்ந்திருந்த பின் சீட் அருகில் வந்தார்.

"இந்த ஊர்ல உன் தொழிலைச் செய்யாதே.. இது சித்தர்கள் பூமி! இது வியாபாரிகள் பூமியாகக் கூடாது. இதோட அமைதியையும் ஆனந்தத்தையும் கெடுத்துடாதே. அடிப்படையை தொலச்சிட்டு ஆனந்தத்தையும் வளர்ச்சியையும் அடையவே முடியாது. என் மக்களுக்கு எப்பவும் குறை வராது. வளர்ச்சிங்கறது கை நிறைய சம்பாதிக்கற பணத்துல இல்லை. உடம்பும் மனசும் எவ்வளவு ஆரோக்யத்துல, இருக்குங்கறதுல தான் இருக்கு. இங்கையாவது அதை விட்டு வையுங்க... மாட்டேன்னா எல்லாத்தையும் இழப்பே.. என்னைப் போல ஆயிடுவே.." - என்றார். பேசி முடித்துவிட்டு ஆசீர்வதிப்பது போல கையை அசைத்து விட்டு திரும்பவும் கரும்பு வயலுக்குள் இறங்கி மறைந்தும் போனார்.

அர்ஜுனுக்கு அவன் காதைத் திருகி யாரோ எச்சரிக்கை செய்த மாதிரிதான் இருந்தது.

"யாரோ ஒரு கிறுக்கன் சார்.. உளறிட்டு போறான் - இதை நாம பெருசா எடுத்துக்க தேவையில்லை சார்..." என்று குமரன் சமாளித்தான்.

"இல்ல குமரன்.. இந்த நபர் பேசினது தான் உண்மை. நாம இங்க தொழிற்சாலை போட்டா இந்த ஊரோட அமைதி போயிடும். நம்ம தொழிற்சாலை கழிவால ஆறு முதல்ல நாசமாகும். போக்குவரத்து அதிகமாகி சுற்றுச் சூழல் நாசமாகும். நாம நிச்சயம் செல்போன் டவர் போடுவோம். அதனால ரேடியேஷன் தாக்கம் இருபத்தி நாலு மணி நேரமும் ஏற்பட்டு



பறவை இனமே அழிஞ்சிடும். இப்ப எங்கேயாவது சிட்டுக் குருவிகள் கண்ணுல படுதா? பார்த்தியா நீ.."

"இல்லையே சார்.."

"காக்கைகளும் காகா' ன்னு தன் இனத்தை கூப்பிட்டு ஒன்னா இருந்து சாப்பிட்றதில்லை. அந்த இனமும் அழிஞ்சுகிட்டு வருது. எல்லாம் நாம விஞ்ஞானம்னு சொல்ற செயற்கையான வளர்ச்சிகளால ஏற்பட்ட மாற்றம் தான். இந்த ஊர் விதி விலக்கா இருக்குது. இதையும் கெடுத்துடாதேன்னு இந்த பெரியவர் சொல்லிட்டு போறார். ஒரு பாட்டியம்மா என்ன பேச்சு பேசினாங்க பார்த்தியா?"

"ஆமாம் சார் ரொம்பவே யோசிக்க வெச்சாங்க."

"கட்டுக்கோப்பா இருக்காங்க. இந்த ஊரே ஒரு சாமிக்கு கட்டுப்பட்டு ஒரு ஒழுங்குல இருக்கு.."

- அர்ஜுன் சொல்லி முடிக்க மழை பெய்ய ஆரம்பித்தது. மிதமான பெரும் காற்று இல்லாத மழை! கார் அந்த ஊர் எல்லையை தாண்டும் போது சுத்தமாய் மழை இல்லை. அதுவும் ஆச்சரியமாக இருந்தது.

"சார் என்ன ஒரு ஆச்சரியம் பாருங்க.. மிகச் சரியாக இந்த ஊர்ல மட்டும் மழை!"

"ஆமாம்.. சித்தன் குறிச்சி ஒரு எக்ஸாம்பிள் ப்ளேஸ். அந்த சித்தர் சொன்ன மாதிரி சித்தர்கள் பூமி. சித்தர்களுக்கு செயற்கையான பலத்தை விட இயற்கையான பலம் தான் பெருசு.. இங்க அது நிரூபணமாகிகிட்டு இருக்கு.."

அப்போது சாலை ஓரத்தில் டாக்டர் க்ளாட்டின் காரும் நின்று கொண்டிருந்தது.

க்ளாட் காரின் பானட்டை திறந்து அதன் பிரேக் டவுனை சரி செய்து கொண்டிருந்தார்.

"சார் இந்த வெள்ளைக்காரரை தான் நாம கோவில் வாசல்ல பார்த்தோம்.."

"காரை நிறுத்து.. அவருக்கு உதவி செய்வோம்."

- காரும் நின்றது. அர்ஜுனின் டிரைவர் காரின் என்ஜின் கோளாறை சரி செய்ய ஆரம்பித்தான்.

க்ளாட் நன்றியோடு பார்த்தார்.

காருக்குள் கண்ணீரோடு மணி!

அதிர்ச்சியாக இருந்தது அர்ஜுனுக்கு..

"இவருக்கு என்ன பிரச்சினை..?" - கேட்டான். க்ளாட்டும்

நடந்ததை சொல்லி முடித்தார். அர்ஜுனிடம் அதனால் ஏராளமான மாற்றங்கள்.

"இப்ப என்ன செய்யப் போறீங்க டாக்டர்..?"

"திருநெல்வேலி போய் டாக்டர் கிட்ட காட்டினேன். ஆபரேஷன் பண்ணாலும் சரியாகாது. கண்ணோட ரெட்டினாவிலையே பாதிப்பு ஏற்பட்டுருக்கு ஆகையால பார்வை கிடைக்க நோ சான்ஸின்னுட்டாங்க" என்று டாக்டர் கூறவும் உள்ளே மணி அழுகையின் உச்சத்துக்கு போகவும் சரியாக இருந்தது.

"நான் ஒரு ரிசர்ச்சுக்காக வந்தேன்... இந்த உலகத்தை காப்பாத்த ஏதாவது செய்யணும்கறது என் ஆசை. அதுக்கான விடை இந்த ஊர்ல இருக்கு. ஆனா நடுவுல இப்படி ஆயிடிச்சு.." - க்னாட் வருத்தப்பட்டார்.

"நீங்க பார்த்த வரைல இந்த ஊர் மட்டும் மழை வளத்தோட இருக்க எது காரணம்?"

"நிச்சயமா சித்தர்கள் செய்யற பூஜை தான்... கோவில்ல இருக்கற ரசமணீஸ்வரர் ஒரு மெர்க்குரி ஐடல்! (Mercury Idol) எல்லா ஊர்லயும் கல்லால சாமி இருக்கும் போது இங்க மட்டும் அது ஏன் பாதரசம் கலந்த ரசமணியா இருக்கணும்? இதுலதான் ஏதோ இருக்கு. அதே மாதிரி ஊருக்குள்ள ஒரு வேப்பமரம் இருக்கு ஸ்தல விருட்சம்.

அந்த மரத்துக்கும் இந்த பூஜைக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கு. கோவில் கோபுரத்துல நான் கலசங்களையும் பார்த்தேன். கூம்பு வடிவத்துல ஒரு கலசம் தான் எல்லா ஊர்லயும் இருக்கும். ஆனா இங்க மேற்கூரை ஒரு சிறு வட்டமாகவும் அந்த வட்டத்துல எட்டு குட்டி கலசங்கள் - நடுவுல ஒரு பெரிய கலசம் இருக்கு. எட்டு திசைக்கும் குட்டி கலசங்கள் தங்களோட அலைகதிர்களை அனுப்புது- நடுவுல இருக்கற கலசம் ஆகாசத்துல இருந்து பவரை ரிசீவ் பண்ற ஒரு ரிசீவரா இருக்கு!

பௌர்ணமிக்கு பௌர்ணமி தான் சித்தர்களோட பூஜை நடக்குது. அதுல அவங்க பயன்படுத்தற ஏதோ ஒரு மூலிகை தான் கண் பார்வை போக காரணம். அதனாலதான் ரகசியமா ஊருக்கு இடம் கொடுக்காம அவங்க பூஜை செய்யறாங்க.

கோவில் கோபுரமும் ஸ்தல விருட்சமான வேப்ப மரமும் ஒரே நேர்கோட்டுல இருக்கு. ஸ்தல விருட்சம் ஊரோட தென்மேற்கு பக்கத்துல இருக்கு. ஊரோட குளமோ வடகிழக்கு மூலைல இருக்கு. இது ஒரு அற்புதமான வாஸ்து அமைப்பு. இந்த ஊரோட தென்பகுதில தான் மலையும் இருக்கு. இது எவ்வளவு



பெரிய இயற்கை பலம் தெரியுமா?

இந்த ஊர்ல பாசிடிவான மின் காந்த அலைகள் ஒரே சீரான வேகத்துல ஊரைச் சுத்தி வந்துகிட்டிருக்கு. பௌர்ணமி அன்னிக்கு அதுக்கு சார்ஜ் ஏத்த தான் அன்னிக்கு நள்ளிரவுல பூஜை செய்யறாங்க. என்கிட்ட ஒரு ஸ்பெஷல் கேமரா இருக்கு. இதை டிவி மானிட்டரோட கனெக்ட் பண்ணிட்டு கேமரா முன்னால நின்னா நம்ம தலைக்கு பின்னால உள்ள 'ஆராங்கற' கண்ணுக்கு தெரியாத ஒளி வட்டத்தை இது படம் பிடிக்கும். அப்ப 'ஆல்ஃபா, பீட்டா' ன்னு நம்மை மண்டிக் கிடக்கற அலை வரிசையை அதோட நிறத்தை வெச்சே பிரிச்சு பார்க்கலாம்.

இப்ப நாம இந்த ஊர்ல இல்லை. வெளிய இருக்கோம் என் கார்ல லேப் டாப்ல மனிடர் இருக்கு. உங்க ஆராலெவலை நான் கேமரா வழியா உங்களுக்கு காட்டவா?"

- க்னாட் தன் ஆராய்ச்சிக் கருத்துக்களை அள்ளிக் குவித்து விட்டு இறுதியாக அவனையே சோதனைக்கு ஆட்படுத்தினார். ஒரு ஓரமாக மினி போர்ட்டபுள் ஸ்டாண்ட் மேல் கேமராவை பொருத்தி அதில் இருந்து இணைப்பை லேப் டாப்புக்கு கொடுத்து லேப் டாப்பை மடியில் வைத்துக் கொண்டு அர்ஜுனை உட்கார வைத்தவர் குமரனை கேமரா முன் நிறுத்தி தன் பரிசோதனையை ஆரம்பித்தார்.

குமரனின் தலைக்கு பின்னால் ஏழு வண்ணங்களும் தரையில் கொட்டி சிதறினமாதிரி கசமுசவென்று காட்சி தந்தது. ஒரு ஒழுங்கு இல்லை. குறிப்பாக பாசிடிவான ஆல்பா அலை வண்ணம் குறைவாகவும், பீட்டா அலை வண்ணம் அதிகமாகவும் இருந்தது.

"இவர் நெகடிவான எண்ணம் உடையவர். எதையும் நம்ப மாட்டார். இப்படிதான் வாழணும்கறது ஒரு வகை - எப்படியும் வாழத் தூண்டும். பாருங்க இவரும் அந்த ரகம்..."

- காருக்குள் அர்ஜுனிடம் விளக்கமளித்துக் கொண்டிருந்தார். அது குமரன் காதில் விழவில்லை.

"இப்ப இந்த கேமராவை நாம சித்தன் குறிச்சி ஊருக்குள்ள ஃபிக்ஸ் பண்ணி செக் பண்ணும் போது இதுல பெரிய மாற்றம் தெரியும். அதையும் பார்க்கலாமா?" - க்னாட் கேட்டார்.

அர்ஜுனுக்கும் ஆவல் அதிகமாகியது. தலையசைத்தான்.

மூவரும் அர்ஜுன் காரில் ஏறிக் கொண்டு மழை பெய்து கொண்டிருந்த ஊர் எல்லைக்குள் நுழைந்தனர். மழை லேசாக தூறிக் கொண்டிருக்க அங்கே ஒரு மரத்தடியில் நிறுத்தி சோதனையை செய்தார் க்னாட்...

குமரனின் தலை பாகத்தில் பெரிய அளவில் மாற்றம். ஆல்பா வளையம் பெரிதாகியிருந்தது. பீட்டா மிகமிக குறைந்த அளவில் இருந்தது.

"நீங்க இப்படியே ஊரோட ஸ்தல விருட்சம் கிட்ட போனா சுத்தமா பீட்டா அலை இருக்காது. நாம நூறு பர்சன்ட் பாசிடிவ் எனர்ஜியா ஆயிட்றோம். அதனாலேயே நாம அங்க வேண்டிக்கறதும் கேக்கறதும் கிடைக்குது. அப்படியே தெற்கு பக்கமா மலையை நோக்கி போகப்போக இந்த அலை அளவு கூடிகிட்டே போகுது மேல சிவன் மலைல இது சொல்ல முடியாத அளவு இருக்கு."

- க்ளாட்டின் விஞ்ஞான பூர்வ விளக்கம் அர்ஜுனை நிமிர்த்தி விட்டிருந்தது.

"டாக்டர் க்ளாட். உங்க ஆராய்ச்சிக்கு நன்றி. எங்க பழமை அதுல உள்ள சக்தியை புரிஞ்சுக்க இந்த ஆராய்ச்சி பெரிய அளவுல உதவியா இருக்கும். வைத வைத கண் போன மணிக்கு கண் பார்வை கிடைக்க வழியே இல்லையா?"

"இருக்கு. சித்தர்கள் கிட்ட அதுக்கு நிச்சயம் மருந்து இருக்கு. ஆனா அவர்களை தரிசிக்கறது தான் பெரிய பாக்யமாச்சே..?"

"அப்ப என்ன பண்ணப் போறீங்க?"

"ஒரே வழி தான். வரப்போற பௌர்ணமி வரை காத்திருக்க போறேன். இரவு கோவில்ல ஒளியப் போறேன். என் கண்கள் போகாம இருக்க அதுக்குன்னு ஒரு கிளாஸ் இருக்கு. அதை போட்டுக்குவேன். அதன் பிறகு நிச்சயமா சித்தர்களை பார்ப்பேன் அவங்க கால்ல விழுவேன். அவங்களால இந்த ஊர் எப்படி பாதுகாக்கப்பட்டுகிட்டு வருதுங்கறத் உலகத்துக்கு சொல்லத் தான் வந்தேன்கறத விளக்குவேன். நோக்கம் தவறா இருந்தா தான் தண்டனை எல்லாம். அதை மீறி அவங்க தண்டனை தந்தா நான் ஏத்துக்குவேன். என் கண்களை எடுத்துக்குங்க மணிக்கு கண்களை கொடுத்துடுங்கன்னு சொல்வேன்..."

- டாக்டர் க்ளாட்டிடம் ஒரு நல்ல மனித நேயம் இருந்து அதுவும் வெளிப்பட்டது.

அர்ஜுன் அவரை கட்டித் தழுவி கண்கள் பனிக்க பாராட்டி விட்டு சொன்னான்.

'அந்த ஸ்தல விருட்சம் இருக்கற இடத்துக்கு போவோமா?' அவர் உற்சாகமாக தலையை அசைத்தார்.



# 9

ஒரு ஊரில் உள்ள கோவில் மறைமுகமாக அநேக விஷயங்களை கொண்டிருப்பதை கூர்ந்து பார்த்தால் உணரலாம். முதலில் அது எது எந்த திசை என்பதை சொல்லி விடுவதை போல் வடக்கு வாசல், தெற்கு கோபுரம், மேற்கு பின் வாயில், கிழக்கு நுழைமுகம் என்கிற அடையாளங்களோடு இருக்கும்.

இது கல்வியறிவில்லாதவர்களுக்கும் அவர்கள் அன்றாடம் கோவிலுக்கு வந்து போவதில் திசையறிவை உருவாக்கி விடும் அடுத்து மதில் சுவரில் எட்டு திக்கிலும் இறைவனின் வாகனமான நந்தி, இல்லாவிடில் கருடனை அமர்த்தி இருப்பார்கள். இது ஒன்று முதல் எட்டு வரையிலான எண் அளவை போதித்து விடுகிறது.

ஒன்பதாவதாக இறைவன் கோவில் கொண்டு அவனே பெரியவனாகவும் நடு நாயகமாகவும் திகழ்வதை கோவிலின் கருவறை கோபுர கலசம் கூறிவிடும்.

இது எண்ணறிவை அளித்து விடும்.

அடுத்து காதில் விழும் மந்திரச் சொற்கள்!

கண்ணில் படும் கோவில் மதில் சுவர் கல்வெட்டு எழுத்துக்கள் எழுத்தே சாசுவதமானது. காலத்தால் அழியாதது என்பதை உணர்த்தும்.

அடுத்து எல்லோரும் வந்து செல்வதை பார்க்க ஒரு பொதுமை உணர்வு வரும். மக்கள் வாழ்க்கை முறை தெரியும். ஒரு வீட்டுக்குள் இருப்பவர் எப்படிப்பட்ட மனநிலையில் இருக்கிறார் என்பதை அறுதியிட்டு கூற முடியாது. ஆனால் ஒரு கோவிலுக்குள் இருப்பவர்கள் தங்கள் சுமைகளை இறைவன் முன் இறக்கிவிட்டு தற்காலிகமாவது ஒரு அமைதியோடு இருப்பதைப் பார்க்கலாம். இப்படி ஒரு அமைதியோடு உள்ளவர்களோடு சேர்தலும் சுலபம். ஆலயம் என்பது இப்படி பல செம்மைகளை சத்தமின்றி செய்ய முடிந்ததாக இருப்பதால் தான் 'கோயிலில்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம்' என்று கட்டளையாகவே நம் முன்னோர்கள் கூறிச் சென்றனர்.

வேப்ப மரத்தின் நிழலில் பலர் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். அவர்களில் ரஞ்சனியும் இருந்தாள். அவள் வயதுப் பெண்களுக்கெல்லாம் எப்படிப்பட்ட புருஷன் வருவானோ என்பது தான் அந்த வயதுக் கவலை! ரஞ்சனிக்குள்ளும் அதுதான் வேலை செய்து கொண்டிருந்தது. அர்ஜுன் அவளை முதல் பார்வையிலேயே கவர்ந்து விட்டிருந்தான்.

நல்ல கணவன் வரவேண்டும்' - என்று மட்டும் முன்பு வேண்டுவாள். இப்போது அந்த மாதிரி வேண்டும் போது அர்ஜுன் மனதில் முண்டி எழுந்தான்.

'பெரும் பணக்காரன்- நிழலைக் கூட தீண்ட முடியாத அளவு செல்வந்தன். தன் வீட்டுக்கு வந்து காபி அருந்தியதே எப்பொழுது யார் செய்த புண்ணியமோ? நிலத்தை வாங்கியிருந்தால் அதை சாக்கு வைத்து ஊருக்குள் வந்து வந்து போவான். கண்ணிலாவது பட வாய்ப்பு இருந்தது. இந்த பாட்டியால் அதுவும் கெட்டது. இனி அவனை எதாவது பத்திரிகை போட்டோவில் பார்த்துக் கொண்டால் தான் உண்டு..'

அவள் தனக்குள் இப்படி பலமாதிரி நினைத்துக் கொண்டே மரத்தை சுற்றி வந்தாள். ஒரு கட்டத்தில் நீ மட்டும் நிஜமா கேக்கறத கொடுக்கற சாமின்னா நான் அவரை பாக்கணும் - எங்க என் கண்ணுல காட்டு பாப்போம் என்றாள் மெய்யுருக..

என்ன ஆச்சரியம்

சீறிக் கொண்டு வந்த காரில் இருந்து அவனும் இறங்கி வந்தான். கூடவே டாக்டர் க்ளாட்!

மரத்தை நோக்கி கை காட்டினார்.

'இந்த மரத்துக்கு ஊரோட வெப்பத்தை ஆற்றுப்படுத்தற சக்தி நிறைய இருக்கு. இதோட 'விதையை எடுத்து வேப்ப நாற்றுகளை உருவாக்கி அதுல இருந்து பல நாற்றுகளை உருவாக்கி ஊருக்கு ஊர் நட்டா அந்த ஊர்ல எல்லாமும் மழை பெய்யும்னு நான் நம்பறேன்' - என்றபடியே வந்தார்.

அர்ஜுனோ ரஞ்சனியை பார்த்து அவள் நினைப்பில் மூழ்கியிருந்தான்.

அவளுக்குள்ளும் ஒரு பெரும் சிலிர்ப்பு.

வெட்கத்தோடு சிரித்தாள். வீட்டோடு முடிந்து விட்ட ஒரு விஷயம் மரத்தடியில், அதுவும் கேட்டதைக் கொடுக்கும் மரத்தடியில் மீண்டும் தொடர ஆரம்பித்து விட்டது.



டாக்டர் க்ளாட்டும் சில நிமிடங்களிலேயே அர்ஜுனின் மையலை புரிந்து கொண்டு விட்டார்.

அவனை மரத்தடியில் நிறுத்தி கேமராவை பொருத்தி தன் சோதனையை செய்து காட்டினார். ஊருக்கு வெளியில், ஊருக்குள் மரத்தடியில் என்று மூன்று இடங்களிலும் ஒரே குமரன் தான். ஆனால் ஆரா வளையத்திடம் மட்டும் ஏராளமான மாற்றங்கள்.

"இந்த இடத்தோட சக்தி இப்ப உங்களுக்கு புரியுதா?" - என்று கேட்டார்.

"நல்ல புரியுது டாக்டர் க்ளாட்... நான் இந்த ஊர்ல இடம் வாங்கி சக்கரை தொழிற்சாலை கட்ட நினைச்சேன். உங்களால இப்ப நான் வேற மாதிரி யோசிக்கறேன்.."

"எப்படி?"

"நான் இந்த ஊர்ல நிச்சயம் இடம் வாங்கப் போறேன். ஆனா சக்கரை தொழிற்சாலை கட்டப்போறதில்லை. நீங்க சொன்ன இந்த வேப்பமரத்துல இருந்து விதைகள் எடுத்து வேப்ப நாற்றுகளை லட்சக்கணக்குல உருவாக்கி உலகம் பூரா கொண்டு போய் நடப் போறேன். இதை ஒரு இயக்கமாவே செய்யப் போறேன். இதை செய்யப் போறதும் இந்த ஊர் இளைஞர்கள் தான். நல்ல சம்பளம் நிச்சயம் உண்டு.

செய்யலாம் தானே?"

- அர்ஜுன் ரஞ்சனியை பார்த்தபடியே கேட்டான்.

"ஆஹா... இது எவ்வளவு பெரிய எண்ணம். உங்க எண்ணத்துக்கு அரசாங்கம் கூட உதவி செய்யும். செய்யும் என்ன செய்யணும். அதையே இந்த மரத்தடி பிரார்த்தனையா வைப்போம்." - என்றார் க்ளாட்.

"சார்... நீங்க சொல்றத செய்யறதுக்கும் இடம் வேணும் சர்க்கரை தொழிற்சாலைக்கே அமையாத இடம் இதுக்கு மட்டும் அமையுமா... அதான் மாப்பிள்ளைக்கு தான்னு சொல்லிட் டாங்களே..." - என்ற குமரனை குறும்போடு பார்த்த அர்ஜுன் "அதுக்கென்ன மாப்பிள்ளையாவே ஆயிட்டா போச்சு" என்றான்.

அது ரஞ்சனி காதில் விழுந்து அவள் முகம் சிவந்து போனது. வெட்கத்தோடு அங்கிருந்து ஓடத் தொடங்கினாள்.

"சார் நான் நீங்க இப்படி பேசுவீங்கன்னு தெரிஞ்சுதான் அப்படி கேட்டேன். நான் எவ்வளவோ காதலை பாத்துருக்கேன். இந்த காதல் ரொம்ப புதுசா இருக்கு சார்..." என்று கூறி சிரித்தான் குமரன்.

டாக்டர் க்ளாட் கை குலுக்கி அட்வான்ஸ் வாழ்த்துக்களை கூறிக் கொண்டார்.

"உங்களுக்கு தான் டாக்டர் நான் நன்றி சொல்லணும் உங்க சந்திப்பு என் வாழ்க்கைல ஒரு பெரிய திருப்பத்தையே உருவாக்கிடிச்சு... நான் நேத்துவரை கோடி கோடியா பணம் சம்பாதிக்கறத பெருசா நினைச்ச ஒரு சராசரி பணக்காரன். இன்னிக்கு நான் எப்பவும் சந்தோஷமாவும் ஆரோக்யமாவும் வாழப் போற ஒரு பணக்காரன்.

விஞ்ஞானம்கறது பழமைக்குள் புதுமையா இருக்கணும் பழமையை ஒழிக்கற பாழாப் போன புதுமையா இருக்கக் கூடாதுங்கறத உங்கள பார்த்து தெரிஞ்சுகிட்டேன்.

எங்கேயோ இருக்கற நீங்க இங்க வந்து உங்க விஞ்ஞான அறிவால எங்க ஊர் சம்பிரதாயங்கள்ள உள்ள பலத்தை உணர்த்தறவரா மாறிட்டீங்க. இயற்கை தான் ரொம்ப பெருசு அதை துன்புறுத்தாம வாழணும்னு சொல்லாம சொல்லிட்டீங்க... தேங்க்ஸ்..."

- அவர் கைகளைப் பற்றி குலுக்கினான்.

"தை தை வர்ற பௌர்ணமி அன்னிக்கு உங்களுக்கு வெற்றி கிடைக்கணும் - இன்ஸ்பாக்ட் உங்களோட நானும் வந்து தங்கறேன். கோவிலுக்குள்ள நடக்கற அந்த அதிசயத்தை நானும் சேர்ந்தே தெரிஞ்சிக்கிறேனே..."

"தாராளமா.. ஆனா இது ரொம்ப சீக்ரெட்டா இருக்கணும். மணிக்கு கண் பார்வை போயிட்டதால கோவில்ல இரவு நேரத்துல கண்காணிப்பு இனிமே பலமா இருக்கலாம்..."

"உண்மை தான். நமக்குள்ள நல்ல எண்ணம் இருக்கு நாம நல்லதை தெரிஞ்சிக்கதான் பதுங்கப் போறோம். சித்தர்கள் அருளாலயே அதையும் சாதிப்போம். அதுதான் இப்ப இந்த மரத்தடி பிரார்த்தனை" என்றபடியே கார் நோக்கி சென்றனர்.

மணி காருக்குள் சுருண்டு படுத்திருந்தான்.

க்ளாட் வரவும் "டாக்டர் நாம கோவில் மரத்துகிட்ட வந்திருக்கோமா டாக்டர்..." என்று கேட்டான்.

"ஆமாம் மணி..."

"என்னை கொஞ்சம் மரத்தடிக்கு கூட்டிகிட்டு போங்க சார் நான் சாமிகிட்ட மன்னிப்பு கேட்டுக்கறேன். கொழுப்பெடுத்து போய் கண்டமாதி பேசிட்டேன்.



எல்லாம் என் கைல தான் இருக்குன்னு நினைச்சுகிட்டிருந்தேன். இப்பதான் தெரியுது எதுவுமே நம்ம கைல இல்லன்னு....

ஆ ஊன்னு பகுத்தறிவு பேசறவங்களும் கவனமா இருக்கணும். நாம எவ்வளவு தான் ஜாக்ரதையா இருந்தாலும் நம்ம சக்தி இருக்கறவங்க கிட்ட அதை எதிர்பார்க்க முடியாது. அதுல ஒருத்தரால நமக்கு ஒரு விபத்து ஏற்பட்டு தலைல அடிபட்டு கிறுக்கு பிடிச்சா சட்டையை கிழிச்சுகிட்டு ஊரை சுத்த வேண்டியது தான்."

- மணி தத்துவமெல்லாம் பேசினான். டாக்டர் க்ளாட் அவனை மரத்தடியில் கொண்டு போய் விட்டார்.

மெய் உருக பிரார்த்தனை செய்து கொண்டான்!

## 10

**சித்தர்களைப் பற்றி சான்றோர்கள் குறிப்பிடும் போது மிகவும் புதிரானவர்கள் என்பார்கள். சித்தர் பெருமக்களை நாம் நமது புரிந்து கொள்ளும் சக்திக்கு ஏற்ப விதம் விதமாக அர்த்தப் படுத்திக் கொள்ளலாம். வானத்து சூரியனை உச்சி வேளையில் பார்த்தால் மிக உஷ்ணமாக தெரியும். மாலை வேளையில் இதமாக தெரியும். சூரியன் மாறவேயில்லை நாம் பார்க்கும் நேரம் தான் மாறுகிறது. அதற்கேற்ப அது நமக்கு பொருள்படுவது போல தான் சித்தர்களும்...**

**இவர்களை முற்றாக புரிந்து கொள்ள எண்ணுவது கடலை வற்றச் செய்ய வைக்கும் முயற்சியை போன்றது. அதேசமயம் இவர்களால் நன்மையே அன்றி துளியும் தீமைகள் கிடையாது.**

**காலகாலத்துக்குமான நன்மைகளை இந்த உலகத்துக்கு வழங்கியபடியே இருக்கும் மெய்ஞான விஞ்ஞானிகள் இவர்கள்!**

சித்தன் குறிச்சிக்கு போய் விட்டுத் திரும்பிய அர்ஜூனிடம் ஒரு புது உற்சாகத்தை கவனித்தார் ராமரத்தினம். அவனிடம் அதைப் பற்றி கேட்பதை விட குமரனிடம் கேட்டால் நிறைய உண்மைகள் தெரியவரும் என்று யூகித்தவர் குமரனைத் தான் பிடித்தார்.

"என்ன குமரா.. உன் பாஸ் கிட்ட ஒரு புது தெம்பு தெரியுதே... எதாவது விசேஷமா ஊர்ல நடந்ததா?"

குமரனும் காத்திருந்த மாதிரி வாய் திறந்தான்.

"சார் ஒரு ட்ரெமெண்டரஸ் எக்ஸ்பீரியன்ஸ் எங்களுக்கு ஏற்பட்டதுன்னு தான் சொல்வேன்..." என்று ஆரம்பித்தவன் நடந்தவைகளை முழுவதுமாக சொல்லி முடித்தான்.

ராமரத்தினத்தின் கண்களில் கண்ணீர் ஊறியிருந்தது.

"சார்... நிஜமா சொல்றேன் - சித்தன் குறிச்சி இந்த உலகத்துல இருக்கற ஆயிரக்கணக்கான கிராமங்கள்ள ஒரு கிராமம் இல்ல அது மனிதன் எப்படி வாழணும், இயற்கை எப்படி இருக்கணும்னு பாடம் நடத்தற ஒரு ஊராத் தான் எனக்கு படுது.."

- என்று தனது கருத்தையும் சேர்த்து சொல்லி முடித்தான். அர்ஜூனும் உடை மாற்றிக் கொண்டு வந்து நின்றான்.

ராமத்தினம் மகனை கண்கள் கலங்கிய நிலையில் பார்த்தார்.

"அப்பா இப்ப எதுக்கு கண்கலங்கறீங்க?"

"உனக்கு ஏற்பட்ட அனுபவங்களை குமரன் சொன்னான். கூடவே நீ அங்க ஒரு பெண்ணை பார்த்து முடிவு செய்துட்டதையும் சொன்னான். பலப்பல வருஷங்கள் கழிச்சு நீ தான் முதல்ல அங்க போகணும் அப்புறம் தான் நான் போகணும்னு அந்த ஈஸ்வரன் ஏன் தடுத்தான்னு இப்ப புரியுது.

ஒரு நாளைக்குள்ள நீ இடம் பார்க்கணும், அதே நாள் நீ டாக்டர் க்னாட்டுங்கறவரை பார்க்கணும் - அவர் மூலமா நுட்பமா பல உண்மைகளை தெரிஞ்சுக்கணும்னு விதி இருக்கும் போது யார் என்ன செய்யமுடியும்?

அதே சமயம் மணியை தண்டிச்ச சித்தர்கள் என்னை தண்டிக்கலை. மாறாக அவங்கதான் என் சட்டை பாக்கெட்ல அந்த ரசமணியை போட்டவங்க! என்னை இவ்வளவு பெரிய தொழிலதிபராவும் ஆக்கினவங்க. இன்னிக்கு நீ சர்க்கரைத் தொழிற்சாலைக்கு பதிலா ஒரு பண்ணை வெச்சு எங்க ஊர் விருட்சத்தை உலகம் பூரா கொண்டு போகப் போறே.. இதனால



இந்த உலகம் முழுவதும் ஏற்படப் போற மாற்றத்தை நினைச்சுப் பாக்கறேன். அவங்களுக்கு தான் எவ்வளவு தீர்க்க தரிசனம்.

இப்படி நடக்கணும்னு ஒரு விதி இருக்கும் போது அதை யாரால மாற்ற முடியும். என் சொந்த ஊர்லையே உனக்கொரு பெண் மனைவியாகி எனக்கு மருமகளாகப் போறாங்கறதும் எவ்வளவு சந்தோஷமான விஷயம் தெரியுமா?"

- சிலிர்த்துப் போனார் ராமரத்தினம்.

"ஆமாம்ப்பா... நான் நேத்து நடந்த சம்பவங்கள்ள இருந்து இன்னும் விடுபடலை. ஒரே பிரமிப்பா இருக்கு. நம்ம முன்னோர்களோட இயற்கை அறிவும் ஞானமும் என்னை மலைக்க வைக்குது.

வளர்ச்சிங்கற பேர்ல விஞ்ஞானத்தால நாம மிகப் பெரிய கேட்டைத் தான் உருவாக்கிகிட்டிருக்கோம். டி.வி, செல்போன்னு சாடிலைட் யுகத்துக்கு மாறி வான வீதியை எலெக்ட்ரானிக்ஸ் கதிர்களால நிரப்பிட்டோம். வாகனம் பெருகி, தொழிற்சாலைகள் பெருகி அசுத்தமான புகையை உருவாக்கி வெப்பத்தையும் அதிகமாக்கிட்டோம்.

செல்போன் இல்லைன்னா செயல் இழக்கறோம். சாதாரண பின்கோட் நம்பரை ஞாபகம் வெச்சுக்கற சக்தி கூட இப்ப நம்ம கிட்ட இல்லாம போச்சு. அதேபோல உக்காந்த இடத்துல டி.வி பார்த்துப் பார்த்து உடம்பை ஊத விட்றோம் - கண் பார்வையை கொஞ்சம் கொஞ்சமா இழக்கறோம். ஐ பாட் பாக்கெட் ரிக்கார்டர்கள்ள பாட்டு கேட்பதற்காக ஹியரிங் மெஷினை காதுக்கு பொருத்தி அதோட கேட்கற சக்தியையும் அழிச்சு கிட்டே வரோம். எதுக்கும் நடக்கறதே இல்லை. தெரு முக்குல இருக்கற பெட்டிக்கடைக்கு போக கூட டூ வீலரை பயன் படுத்தறோம்.

ஒரு பிச்சைக்காரன் குடிசைல கூட இருபத்தி நாலு மணி நேரமும் தலைக்கு மேல ஃபேன் ஓடிகிட்டு இருக்கு. அரை மணி நேரம் மின்சாரம் இல்லாம போனாலும் தவிச்சுப் போறோம்.

இவ்வளவு விஞ்ஞான சாதனங்களால எல்லோரும் பரம சௌக்யமா வாழறாங்களான்னா அதுதான் இல்லை. குடிக்கற குளிர் பானத்துல கூட பூச்சி மருந்து- விளையற அவ்வளவு காய் கறியிலையும் உரம்கற பேர்ல விஷம் பத்து வயசுப் பிள்ளைகள் கூட கண்ணாடி போட்ற ஒரு கொடுமை.

எய்ட்ஸ், சிக்கன்குனியா ன்னு அழிக்க முடியாதபடி புதுப் புது வியாதிகள்!

இந்த கொடுமைக்கெல்லாம் மருந்து சித்தன் குறிச்சில தாம்ப்பா இருக்கு. ராமலிங்கம் சார் வீட்டுல அவங்க அம்மாவுக்கு எண்பது வயசு. ஆனா இப்பவும் வீட்டு வேலையை அவங்கதான் பாக்கறாங்க. கண் பார்வையும் அவ்வளவு துல்லியம்!

அந்த கிராமத்துக்குள்ள என்னைப் போல யாராவது புதுசா நுழைஞ்சு எதாவது பண்ண நினைச்சாலும் நாங்களும் மனசு மாறிட்டோம்."

- அர்ஜுனும் தான் விளங்கிக் கொண்டதை ராமரத்தினத்திடம் அழகாக பகிர்ந்து கொண்டான்.

மாடியில் தான் இருந்தாள் வீணா!

அர்ஜுனின் மாமன் மகள்.... அவள் முகம் கோபத்தில் சிவந்திருந்தது. தன்னை ஒதுக்கிவிட்டு போன இடத்தில் ரஞ்சனியை பார்த்து அர்ஜுன் மயங்கி விட்டது நெஞ்சைச் குத்தியது. தாள மாட்டாமல் அந்த அறைக்குள் இருந்தபடியே தன் அப்பாவை தொடர்பு கொண்டாள் அவள். பொங்கி வந்த கண்ணீரோடு தன் காதில் விழுந்ததை சொல்லி முடித்தாள்.

"புத்தருக்கு போதி மரத்தடில ஞானோதயம் ஏற்பட்ட மாதிரி உன் அத்தை மகனுக்கு சித்தன் குறிச்சில ஞானோதயமா?"

"ஆமாம்ப்பா.. மாமாவும் தன் சொந்த ஊர்லையே தனக்கு ஒரு மருமகள் வரப் போறான்னு பூரிச்சு போயிருக்காரு.."

"அப்ப உன் அத்தைகிட்ட அவர் சொன்னதெல்லாம் காத்தோட போயிடிச்சாமா?"

"நீங்க வந்து கேளுங்க... அத்தான்கிட்ட நான் எதாவது கேட்டா அவர் ஒண்ணு சொல்வாரா.. முந்தியே நான் அவர்கிட்ட நெருங்கினப்ப விலகி விலகிப் போனாரு. அப்பவே அவருக்கு என்னைப் பிடிக்கலைன்னு நான் நல்ல புரிஞ்சுகிட்டேன்..."

"அப்படி எல்லாம் நான் விட்ரமாட்டேன்மா. உன் அப்பாவை நீ என்னன்னு நினைச்சே..."

"விஷயம் தலைக்கு மேல போயிடிச்சு. இனி உங்களால என்ன பண்ண முடியும்?"



"நீ பொறுமையா இரு. எதையும் வெளியில காட்டிக்காதே. உன் அத்தை மகன் உனக்கு தான். இதுல உனக்கு சந்தேகம் வேண்டாம்.."

"அப்பா திரும்பவும் ஆசை காட்டி மோசம் பண்ணிடாதிங்க."

"பைத்தியக்காரி... அவன் எனக்கு பல காரணங்களுக்காக வேணும். அவன் மாப்ளையானாதான் நானும் தோத்துட்ட என் தொழில்ல நிமிர முடியும். ராமரத்தினம் சம்பந்தின்னு சொல்லியே உலக வங்கில கூட கடன் வாங்க அப்பதான் என்னால முடியும்.."

"அப்பா.."

"தைரியமா இரும்மா - அப்பா இருக்கேன்."

"சரிப்பா என்ன பண்ணப் போறீங்க?"

"அந்த பொண்ணு உயிரோட இருந்தா தானேப்பா இவன் ஆசைப்பட்டபடி நடக்க முடியும்?"

"அப்பா... அப்ப அந்த பெண்ணை கொலை செய்யப் போறீங்களா?"

"இதை எல்லாம் நான் எதுக்கு செய்யணும். அதுக்கெல்லாம் ஆள் இருக்காங்கப்பா. அவங்களுக்கு தேவை பணம். வீசி எறிஞ்சா வேலை முடிஞ்சிடும்."

"நாளைக்கு அவங்க போலீஸ்ல மாட்டிகிட்டா..."

"சந்தோஷமா தண்டனையை அனுபவிப்பாங்க. ஆனா தப்பித்தவறி கூட காட்டி கொடுக்க மாட்டாங்க. நீ அநாவசியமா பயப்படாதே. அப்படி அவங்க காட்டிக் கொடுத்தா மந்திரிகள் தான் அதிகம் மாட்டுவாங்க. ஏன்னா எலெக்ஷன்ல பல மந்திரிகள் தங்களோட எதிரிகளை இப்படி போட்டுத் தள்ளித்தான் ஜெயிச்சு மந்திரியாகியிருக்காங்க..."

"இல்லப்பா எனக்கு இப்படி நீங்க கொலை எல்லாம் பண்ணி கல்யாணம் நடக்க வேண்டாம். அதுக்கு அத்தான் அந்த பொண்ணையே கல்யாணம் பண்ணிகிட்டு நல்லா இருந்துட்டு போகட்டும்..."

"என்ன பொண்ணும்மா நீ... ஆசையும்பட்றே இரக்கமும் பட்றியே.. இரண்டும் ஒண்ணுக்கொண்ணு எதிரானதும்மா!"

"எனக்கு பயமா இருக்கு.. அத்தான் எனக்கு வேணும் தான். ஆனா அது நல்லபடியா நடக்கணும் இப்படி குறுக்கு வழில வேண்டாம்.."

"விடும்மா நான் பாத்துக்கறேன் - இதுக்கு மேல நீ எதுவும் பேசாதே.."

"இல்லப்பா... நீங்க எனக்கா எந்த குறுக்கு வழியிலையும் போகாதீங்க.. நடக்கறது நடக்கட்டும்."

"அப்படி எல்லாம் விடமுடியாதும்மா... எல்லா பழமும் மரத்துல இருந்து உதிர்ந்து விழுந்த பின்னால தான் சாப்பிடணும்னா வேலைக்காகாதும்மா.. பறிச்சு பழுக்கப் போட்டு சாப்பிட்றது ஒண்ணும் பாவமில்ல. அதுதான் புத்திசாலித்தனம்..."

- வீணாவின் அப்பா செந்தில்நாதன் அதற்கு மேல் பேச விரும்பாமல் போனை சுத்தரித்துக் கொண்டார்.

வீணாவுக்கு மட்டும் ஏன் பேசினோம் என்று இருந்தது!

பௌர்ணமி!

காலையிலேயே ஒன்றுக்கு இரண்டு கார்களில் அர்ஜுனும் ராமரத்தினமும் சித்தன் குறிச்சிக்கு வந்து விட்டனர். கூடவே செந்தில்நாதனும் இருந்தார்.

ஊர் எல்லையிலேயே அவர்களை வரவேற்க ராமலிங்கமும் ஏற்பாடு செய்திருந்தார்.

பிரம்மாண்ட வரவேற்பு!

ராமரத்தினத்துக்கு கிழிந்த சட்டையோடு தான் ஓடிப்போன அந்த நாள் மனக்கண்ணில் முந்தியது. தான் இப்படி வரவேற்கப் படவும் காரணம் அந்த இறைவன் தானே?

கண்கள் பனிக்க அந்த ரசமணியை நினைத்துக் கொண்டார். அர்ஜுனைப் பார்த்து "அர்ஜுன் அந்த ரசமணி பத்ரமா இருக்கு தானே?" என்றும் கேட்டார்.

"பாக்கெட்லயே பத்ரமா இருக்குப்பா.." என்று தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

ராமலிங்கம் ராமரத்தினம் காலில் விழுந்து வணங்கினார்.

"என்னய்யா நீ.. எதுக்கு கால்ல எல்லாம் விழறே.. நீ இனி என் சம்பந்தி. அப்படின்னா என்ன அர்த்தம் தெரியும் எனக்கு சமமான பந்தம் உடையவன்னு அர்த்தம்.." - என்றார்.

"உங்களுக்கு சமமா நான் ஆகமுடியுங்களா.. நீங்க எங்க.. நான் எங்க..? நீங்க என் மகளை ஏத்துக்க முன் வந்ததே நாங்க செஞ்ச பாக்யம்.."

- என்று சிலிர்த்துப் போனார்.

பௌர்ணமி நாளாக இருந்ததால் அன்றே நிச்சயமும் நடந்து முடிந்தது.



கூடவே கடுவன் பூனை போல சகலத்தையும் பார்த்துக் கொண்டே இருந்தார் செந்தில்நாதன். நடுநடுவே செல்போனில் கூலிப் படையோடும் பேசிக் கொண்டிருந்தார்.

"எப்படியும் தல விருட்ச மரத்துக்கு சாமி கும்பிட சொந்தக் காரங்களோட வருவா... அதுதான் சமயம்" - என்று எடுத்தும் கொடுத்தார்.

"கவலையே படாதீங்க.. செங்கல் லோடு லாரி ஒண்ணு தயாரா இருக்கு. பிரேக் பிடிக்கலேங்கற பேர்ல அந்த பொண்ணு மேல் அந்த லாரி ஏறிடும். தகவல் உங்களுக்கு வரும்...." - என்று மறுபுறத்தில் இருந்து பதில் வந்தது.

நிச்சயம் முடிந்த கையோடு குமரனோடு சற்று வெளியில் போய் வருவதர்க கூறிப் புறப்பட்ட அர்ஜுன் டாக்டர் க்ளாட்டைத்தான் செல்போனில் பிடித்தான்.

"டாக்டர் எங்க இருக்கீங்க?"

"கோவில்லதான்..."

"இப்பவேவா.."

"நான் அன்றைய தேதில இருந்தே கோவில்லதான் இருக்கேன். என்னை வந்து பார்க்கும் போது உங்களுக்கே உண்மை தெரிஞ்சிடும்.." - என்று போனிலேயே புதிர் போட்டார் டாக்டர் க்ளாட்!

அர்ஜுன் அவரை சந்தித்த போது ஆடிப்போனான்.

காவிவேட்டி சட்டை என்று அவர் ஒரு சாமியாராகவே மாறி விட்டிருந்தார்.

"டாக்டர் க்ளாட்..."

"நோ.. நான் இப்ப சித்தேஸ்வரன்.. இது தான் இனி என்பேர்.."

"மணி எங்க?"

"அதோ..." - கை காட்டினார்.

கோவிலுக்கு வெளியே மண்டபம் ஒன்றில் சுருண்டு படுத்திருந்தான்.

"மணி நம்பிக்கையோட இருக்கானா?"

"நிச்சயமா... தன் தவறுக்கு மனப்பூர்வமா வருந்தறான். டாக்டர் எனக்காக நீங்க முயற்சி செய்து உங்களுக்கும் எதாவது ஆயிடப் போகுது. வேண்டாம் டாக்டர். நான் இப்படியே இருந்துட்டு போறேன்னு சொல்றான்.

இதுவே அவன் மனசு பக்குவப்பட்டுட்டதை உணர்த்துது இல்லையா?"

"நிச்சயமா.. பை த பை டாக்டர் எனக்கு இன்னிக்கு தான் நிச்சயதார்த்தம் முடிஞ்சது. பொண்ணு இதே ஊர் தான். ஒரு வகைல இந்த ஊர் தான் எங்க ஊர். அப்ப இங்க தான் பிறந்து வளர்ந்தார். இப்ப இதே ஊர் தான் என் மாமனார் ஊரும் கூட......"

"ஆல் த பெஸ்ட்.... ஆஸ் மிஸ்டர் அர்ஜுன் நிச்சயம் ஆயிட்ட நிலைல நீங்க எதுக்கு ரிஸ்க் எடுத்துகிட்டு..?"

"இல்ல டாக்டர்.. எதையும் அப்படியே ஏத்துகறதுக்கும் புரிஞ்சு ஏத்துக்கறதுக்கும் வித்யாசம் இருக்கு. நான் அவசியம் சித்தர்களை தரிசனம் செய்யணும். அவங்க வழி காட்டல்லேயே நான் வேப்பந்தோட்டம் போடப் போறேன். இன்னும் என்ன வெல்லாம் அவங்க மூலமா பெறணுமோ அவைகளையும் பெறணும்கறது தான் என் ஆசை.."

"இந்த ஆசை இந்த நிமிஷம் ரகசியமா தானே இருக்கு?"

"அதுல என்ன சந்தேகம். என் உதவியாளனுக்கு மட்டும் தெரியும். என் அப்பாவுக்கு கூட தெரியாது..."

"நல்லது... இரவு பூஜையின் போது சந்திப்போம்!"

- டாக்டர் க்ளாட்.. இல்லையில்லை சித்தேஸ்வரன் விடை கொடுத்தார்!

இரவு நேரம் - எட்டு மணி! குருக்கள் கதவை சாத்திட முத்தப்பன் தாழ்போட்டு பூட்டி முடித்தான். உள்ளே க்ளாட்டும், அர்ஜுனும்...!

முத்தப்பனும் மாரியப்பனும் சுற்றிச் சுற்றி வந்த போதெல்லாம் வளைந்தும் ஒளிந்தும் மறைந்தும் தங்களை தற்காத்துக் கொள்ள மிகவே கஷ்டப்பட்டு விட்டிருந்தனர்.

க்ளாட் ஒரு கறுப்பு கண்ணாடியை அணிந்திருந்தார்.

அர்ஜுனுக்கும் கொடுத்து அணியச் செய்தார்.

இரவிலும் அது பார்க்க முடிந்ததாக டார்க் சீ த்ரு (Dark See Through) வாக இருந்தது.

"நாம இந்த நிமிஷத்துல இருந்து இறைவனோட பேரை ஜெபிப்போம்.. நாம ஜெபத்துக்கு எப்பவுமே சக்தி அதிகம்.." என்று விளக்கம் வேறு கொடுத்தார்.

அர்ஜுன் மறுக்கவில்லை. வெளியே குமரன் தான் அவருக்கு எதுவும் ஆகிவிடக் கூடாதே என்கிற கவலையோடு இருந்தான்.



நடுநடுவே செல்போனில் தொடர்பு கொண்டான்.

"சார் நல்லா இருக்கீங்க தானே? தைரியமா இருக்கீங்க தானே?"

"நோ ப்ராப்லம் குமரன்.... அப்பா ஊருக்கு போய்ட்டார் தானே?"

"அவர் போய்ட்டார் சார். உங்க மாமா தான் இங்கையே இருக்கார்! உங்களை காணாம தேடிகிட்டே வேற இருக்கார். நான் நீங்க கன்யாகுமரி வரை பர்சனல் ட்ரிப் போயிருக்கீங்கன்னு சொல்லி கோவில் பக்கம் வந்த அவரை உள்ள வரவிடாம பண்ணி அனுப்பிட்டேன்.."

"குட்... அவர் நல்ல மனுஷன் இல்லை குமரன். அவருக்கு நான் அவர் மகளை கல்யாணம் பண்ணிக்கலங்கற வருத்தம். வீணா கூட மனுசு மாறி இன்னிக்கு விஷ் பண்ணி போன்ல பேசினா. ஆனா மாமா கடுவன் பூனை மாதிரியே இருந்தார்."

"நீங்க முதல்ல நல்ல படியா கோவிலை விட்டு வாங்க சார். மற்ற விஷயங்களை காலைல பேசிக்கலாம்..."

"டாக்டர் நாம ஜெபம் சொல்லிகிட்டு இருக்கார் நானும் சொல்லப் போறேன்.. எதுவாக இருந்தாலும் இனி நான் போன் பண்றேன். நீ எதுக்கும் முழிச்சுகிட்டே இரு.."

"நீங்களே தூங்கச் சொன்னாலும் தூக்கம் வராது சார் எனக்கு..."

- அவர்கள் உரையாடல் முடிந்து போனது நேரமும் உருளத் தொடங்கியது!

விடிந்து விட்டது!

தொம் தொம் என்று மத்தள சப்தம் கேட்டு தன்னை மீறி கண்ணயர்ந்துவிட்ட குமரன் கண் விழித்தான்.

கோவில் கல் மண்டபத்தில் சுருண்டு படுத்திருந்த மணியும் கண் விழித்தான்.

அவன் கண் விழிக்கவும் காட்சிகள் அவ்வளவும் தெரிந்தது தான் ஆச்சரியம். பரவசத்தில் எகிறிக் குதித்தான்.

"டாக்டர் எனக்கு கண் பார்வை வந்துடிச்சு..." என்று உரக்க குரல் கொடுத்தான். சப்தம் கேட்டு மணியை பார்த்த குமரனுக்கு வியப்பாக இருந்தது. மணியின் கண்களைச் சுற்றி பச்சையாய் மூலிகைச் சாறு ஊறி வழிந்த தடயங்கள்!

குருக்கள் கதவைத் திறந்து விட்ட நிலையில் மணியின் குரலைக் கேட்டு ஆச்சரியத்தில் உறைந்து போனார். அவன் ஓடி வந்து அவரோடு சேர்ந்து நேராக சன்னதிக்கு சென்று சித்தர்கள்

பூஜித்து விட்டு சென்றிருந்த அந்த லிங்க ரூபத்தைப் பார்த்து கண்ணீர் விட்டான்.

"சாமி எனக்கு கண்ணைக் கொடுத்துட்டே... நன்றி சாமி.. நன்றி சாமி..." என்று... அதே சமயம் தூக்கம் கலைந்து எழுந்தவர்களாக அர்ஜுனும் டாக்டரும் கூட அங்கே வந்தனர். அவர்களுக்கு எதுவும் ஆகியிருக்கவில்லை.

நாமஜெபம் ஜெபித்தபடியே உறங்கிப் போனதே அவர்களுக்கு அப்போதுதான் தெரிந்தது. மணி கூட்டத்தில் க்ளாட்டை பார்த்து ஓடி வந்து "டாக்டர் பறிச்ச கண்களை சித்தர்கள் திரும்பிக் கொடுத்துட்டாங்க... பாத்தீங்களா... பாத்தீங்களா...." என்றான். குருக்களும் தீபாராதனை காட்டி எடுத்து வந்தார்.

"நிஜமா இது அதிசயம்.... ஒரு மாசமா நீங்க தினமும் சுவாமியை வணங்கியதோட பலன் இது. உங்க அளவு யாரும் பக்தியை காட்டலை. அதனால அவர்களுக்கு பார்வை கிடைக்கல.

உங்க முகத்தை பார்த்தாலே தெரியறது.. தூங்கிண்டு இருந்த உங்க கண்களுக்கு சித்தர்கள் மூலிகை மருந்து கொடுத்துருக்கறது... இதுல இருந்து இந்த குருடுக்கு மருந்து இருக்குங்கறதும் தெரிஞ்சு போச்சு..." என்று அவரும் சேர்ந்து பரவசப்பட்டார்.

ஆனால் அர்ஜுனுக்கும் டாக்டருக்கும் தான் பெரிதும் ஏமாற்றமாக இருந்தது. அப்போது ஐயோ கண்ணு போச்சே... கண்ணு போச்சே என்று ஒரு பரபரப்பான குரலும் கேட்டது. கோவில் மண்டபத்துக்குள் அர்ஜுனின் மாமாவான செந்தில் நாதனின் குரல் தான் அது!

அர்ஜுனுக்கு புரிந்து விட்டது.

"டாக்டர் நாம முதல்ல வெளிய போவோம். அவரை குருக்கள் பார்த்துக்குவார். நமக்கு கண்ணும் போகலை. எதுவும் தெரியவுமில்லை. சித்தர் சாமிகளுக்கு நமக்கு காட்சி தரவோ, நாம எதிர்பார்த்ததை சொல்லவோ விருப்பம் இல்லைன்னு நல்லா தெரியுது!" என்றான்.

ஆமோதித்தார் டாக்டர் க்ளாட்!

குமரனும் அவர்களோடு வந்து சேர்ந்து கொண்டான்.

மூவரும் கோவிலுக்கு வெளியே ஓரம் கட்டி நிறுத்தப் பட்டிருந்த காரை நோக்கி சென்றனர்.

உள் புகுந்து அமர்ந்தும் கொண்டனர். வெளியே அப்போதே வானம் இருட்டு கட்டத் தொடங்கி மழைத் தூறலும் விழ ஆரம்பித்து விட்டது.



உள்ளே மூவரிடமும் கனத்த மௌனம்!

இடையில் சட்டைப் பாக்கெட்டை தொட்டுப் பார்த்த அர்ஜுனுக்கு பகீர் என்றது. ரசமணியை காணவில்லை. பதிலுக்கு ஒரு ஏடு இருந்தது.

எடுத்துப் பார்த்தான்!

'கேளப்பா!

சித்தனன்றி சித்தன்தன்னை சித்தமறிய ஏலாது
சில மிகு நெறிகளெல்லாம் முதுகடங்கிய எலும்பு போல்!
சீறி அதைப் பார்ப்பதும் பேதமை - மூடமது...
மீறிடாமல் இனியும் வாழ்வீர் - வளங்களை நாங்களும்
வழக்கம் போல் காத்திடுவோம்!
நாதம் தரும் கோவில் மணிப் பேரவனை தேற்றிட்டோம்
நாங்கள் தந்த ரசமணியை போதுமென்றே
கொண்டிட்டோம்
ஏங்க வேண்டாம் இதனை எண்ணி - வாழ்வீர் நன்று
வினை விதைத்தால் வினையே விளையும் விளக்கிடுவீர்
- சென்று!'

- என்று அந்த ஏட்டில் எழுதப்பட்டிருந்தது.

படிக்கும் போதே அர்ஜுனுக்கு அதற்கான பொருள் விளங்கி விட்டது.

"டாக்டர் அவங்களை புரிஞ்சுக்கணும்னா நாமளும் சித்தனாகணும்னு இந்த ஏடு சொல்லுது.

ஒளிஞ்சிருந்து எதையும் தெரிஞ்சுக்க முடியாது.

நம்மை தாங்கி நிக்கற முதுகெலும்பு வெளிய தெரியறதில்ல அப்படித்தான் இந்த விஷயங்களும்.. மீறி நாம பாக்க நினைக்கறது முட்டாள்தனமாம். இத நாம புரிஞ்சுகிட்டு கட்டுப்பாட்டை மீறாம வாழச் சொல்றாங்க. மணியை காப்பாத்திட்டோம். ரசமணியையும் திரும்ப எடுத்துகிட்டோம். அதுக்காக கவலைப் படாதீங்க. நல்ல விதமாதான் இனிமேல் வாழ்வீங்க.

விதை விதைத்தால் விதை - வினை விதைத்தால் வினை.. இதை நாம புரிஞ்சுகிட்டு எல்லாருக்கும் சொல்லணும்னும் சொல்லிட்டார்" என்றான்.

டாக்டர் க்ளாட், மழை வானுக்கு நடுவில் தெரிந்த கோவில் கோபுரத்தை பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டு சிலிர்த்துப் போனார்.

அதேசமயம் தனியே தலவிருட்ச மரத்துக்கு கைகளில்

பூவோடு லேசான மழையில் நனைந்தபடியே போய்க் கொண்டிருந்தாள் ரஞ்சனி.

வானில் லேசான இடிச் சப்தம்... அங்கங்கே மின்னல் ஓட்டம் வேறு.

அவள் வருகைக்காக காத்திருந்தது போல அந்த செங்கல் லாரியும் அவளை நோக்கி புறப்படத் தயாரானது. உள்ளிருந்த டிரைவர் லாரியை கிளப்பப் பார்த்தான். அது சண்டித்தனம் செய்யவே லாரியை விட்டு இறங்கி முன்பக்க பானட்டை திறந்து என்னவென்று பார்க்கப் போனான். அப்போது வானிலும் பெருத்த இடிச் சப்தம். அதனால் விளைந்த மின்னல் ஒன்று லாரி முன் குனிந்து பார்த்தபடி இருந்த டிரைவர் மேல்தான் இறங்கியது.

அவனால் கத்தக்கூட முடியவில்லை. அதற்கு கூட அவகாசமின்றி அப்படியே கருகியவனாக தரையில் விழுந்தான்.

ரஞ்சனியோ அர்ஜுனா அர்ஜுனா என்று காதைப் பொத்திக் கொண்டுவிட்டு வேகமாக அந்த விருட்சத்தின் நிழல் நோக்கி நடக்கத் தொடங்கியிருந்தாள்.

விளைக்கு விளை என்பது இது தானோ?

ஒரு தென்றலையும் ஒரு மின்னலையும் ஒரு சேரப்பார்த்த மகிழ்ச்சியோடு மழையானது வர்ஷிக்க ஆரம்பித்தது!

- முற்றும் -

வெளியீடு :

**விசால் பப்ளிகேஷன்**

278, ஞானகிரி நகர், சிவகாசி - 626 189.

போன் : 04562 - 224034, 225034

செல் : 98430 52034, 94426 64785

**E-mail : vivekfinearts@gmail.com**